விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email: kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 மாசி 19 சனிக்கிழமை (03.03.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 074

## இந்தியா கைவிட்டதால் சீனாவை நாடினோம்
### மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் துறைமுகம் மற்றும் நெடுஞ்சாலைகளை அமைப்பதற்கு இந்தியா ஆர்வம் காட்டவில்லை. அதனாலேயே குறித்த வேலைத் திட்டங்களை முன்னெடு 23

### பருத்தித்துறை பகுதியில்
## சுகாதார பரிசோதகர்கள் அதிரடி நடவடிக்கை

(கரணவாய்)


பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட உணவு கையாளும் நிலையங்கள் அப்பகுதி பொது சுகாதாரப் பரிசோதகர்களினால் குழுவாக பரிசோத 23

## ஐ.தே.கட்சியின் பாராளுமன்றக் குழு திங்கள் கூடுகின்றது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற குழு கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை அலரிமாளிகையில் நடைபெறவுள்ளது. 24

### இலங்கை தொடர்பில் ஐ.நா சபையில் நிறைவேற்றப்பட்ட
# ஜெனிவா பிரேரணையில் பிரித்தானியா அவதானம்
### பிரித்தானிய ஆசிய மற்றும் பசுபிக் விவகாரங்களின் இராஜாங்க அமைச்சர் மார்க் பீல்ட் தெரிவிப்பு



(லண்டன்) இலங்கை தொடர்பாக கடந்த 2015 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகள், பரிந்துரைகளை இலங்கை முழுமையாக நடைமுறைப்படுத்துகின்றதா? என பிரித்தானியா அவதானம் செலுத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆசிய மற்றும் பிரித்தானிய பசுபிக் விவகாரங்களின் இராஜாங்க அமைச்சர் மார்க் பீல்ட், பிரித்தானிய நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார். (23-ம் பக்.)

### வைக்கோலில் இருந்த பாம்பு தீண்டியதில்
## ஆறு பிள்ளைகளின் தந்தை பரிதாபகரமாக உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வைக்கோலில் இருந்த பாம்பு தீண்டியதில் ஆறு பிள்ளைகளின் தந்தை ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இதில் சுழிபுரம் கல்விளான் பகுதியை சேர்ந்த பெரியான் சுப்பிரமணியம் (வயது65) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் காலை தனது மகளுடன் வயலில் அருவி வெட்ட சென்றுள்ளார். அறுவடை முடிந்த பின்னர் வைக்கோல் கற்றையை கையில் எடுத்துக் கொண்டு வீடு சென்றுள்ளனர்.

அப்போது வைக்கோ 24

### நீதிமன்ற அறிவிப்பு
## அர்ஜுன மகேந்திரனிடம் கையளிக்கப்படவில்லை
### சட்டமா அதிபர் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் முன்னிலையாகுமாறு நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்ட அறிவித்தல் இதுவரை அவரிடம் கையளிக்கப்படவில்லை என 23

## ஐ.நா சபையின் அழுத்தமே காணாமல் போனோர் அலுவலகம்
### கெஹலிய ரம்புக்வெல தெரிவிப்பு

(கொழும்பு)



ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அழுத்தத்தின் காரணமாகவே காணாமல் போனோர் அலுவலகத்திற்கான உறுப்பினர்கள் தெரிவு அவசரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல இறுதிக்கட்டப் போரை 23

### நாட்டின் எதிர்காலத்துக்காக
## உகந்த தீர்மானத்தை மேற்கொள்ள நடவடிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் காலத்தில் நாட்டிற்கு உகந்த தீர்மானங்களை உரியவாறு மேற்கொண்டு அனைத்துவித சவால்களுக்கு மத்தியிலும் நாட்டிற்காகவும் மக்களுக்காகவும் ஆற்ற வேண்டிய பொறுப்புக்களை உரியவாறு நிறைவேற்ற அர்ப்பணிப்புடன் செயற்படவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மெதிரிகிரிய, திவுலங்கடவல, தர்மராஜ பிரிவெனா விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இரண்டு 23

## விடுதலைப் புலிகளின் குண்டே வெடித்தது
### கைது செய்யப்பட்ட இராணுவ வீரர் தெரிவிப்பு

(கொழும்பு)

பேருந்தில் வெடித்த கைக்குண்டு 2015 காலப்பகுதிகளில் முல்லைத்தீவில் கைப்பற்றப்பட்ட விடுதலைப்புலிகளின் வாகனங்களில் இருந்து தனக்கு கிடைத்ததாக, குண்டுவெடிப்பிற்கு காரணம் என கைது செய்யப்பட்ட இராணுவ வீரர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தியத்தலாவ - கஹவெல்ல பகுதி 23

## இந்து சமுத்திரத்தின் கேந்திர நிலையம் இலங்கை - ரணில்

(சிங்கப்பூர்)

சீனா முதல் ஸ்பெயின் வரை வசிக்கும் மூன்று பில்லியன் மக்களின் தேவைகளுக்கான பொருட்களையும், சேவைகளையும் வழங்கக்கூடிய இந்து சமுத்திரத்தின் பொருளாதார நிதி கேந்திர நிலையமாக இலங்கை காணப்படுகிறது.

2018ஆம் ஆண்டின் முதலாவது இன்வெஸ்ட் மாநாடு நேற்று சிங்கப்பூர் போ-சீசன்ஸ் ஹோட்டலில் ஆரம்பமானது. இந்த மகாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையம் ஏற்பாடு செய்திருந்த இந்த மகாநாட்டில் வலுவானதும், நிலை 23

## ஐ.நாவின் சிறப்புத் தூதுவர் நாளை இலங்கை வருகை
### முகமாலைக்கும் செல்கிறார்



(கொழும்பு)

ஆட்களுக்கு எதிரான கண்ணி வெடிகளைத் தடை செய்யும் பிரகடனம் தொடர்பான ஐ.நாவின் சிறப்புத் தூதுவரான இளவரசர் மிரெட் ராட் செயிட் அல் ஹுசைன் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார். நாளை 4-ம் திகதி 23

## காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்
### கனேடிய நாடாளுமன்றத்தில் ஹரி ஆனந்தசங்கரி தெரிவிப்பு

(ரொறன்ரோ)

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டத்தை கனேடியர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என ஸ்காபறோ-ரூஜ் பார்க் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி கனேடிய நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மேற்கொண்டுள்ள போராட்டம் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் பொறுப்புக் கூறல் என்பன தொடர்பாக, ஹரி ஆனந்தசங்கரி, கனேடிய நாடாளுமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு 23



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பாடசாலையில் மயங்கி விழுந்த மாணவி உயிரிழப்பு

(கம்பளை)

பாடசாலை ஒன்றில் திடீர் சுகவீனமுற்று மயங்கி விழுந்த மாணவி மரணமடைந்துள்ளார்.

புஸ்ஸல்லாவை-அட்டபாகை பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் மாணவி ஒருவரே நேற்று முற்பகல் திடீர் சுகவீனமுற்ற நிலையில் உயிரிழந்துள்ளார்.

பாடசாலையின் நடன வகுப்பறைக்கு அருகில் மாணவி மயங்கி விழுந்ததை அடுத்து ஆசிரியர்கள் அம்மாணவியை கம்பளை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மாணவி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மில்லிகஹாதென்ன-பன்விலதென்ன பிரதேசத்தை சேர்ந்த 15 வயதான மாணவியே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை மாணவியின் சடலம் கம்பளை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலும் சம்பவம் குறித்து புஸ்ஸல்லாவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## சட்டக் கல்லூரி நுழைவு பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

சட்டக்கல்லூரிக்கான (LLB), திறந்த பல்கலைக்கழக நுழைவுப் பரீட்சை மார்ச் 4 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்ட போதும் தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளதாக இலங்கை திறந்த பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

இதன் படி குறித்த பரீட்சை தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு பின்னர் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இ.போ.சபையினருடன் அனந்தி சசிதரன் அவசர ஆலோசனை

(யாழ்ப்பாணம்)


யாழ். புத்தூர் பகுதியில் உள்ள வாதரவத்தை கிராமத்திற்கான அரச போக்குவரத்து சேவையினை தொடங்குவது குறித்து இலங்கை போக்குவரத்து சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியான பி.டி.பாலசூரியவுடன் வடமாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் அவசர ஆலோசனை நடத்தியுள்ளார்.

குறித்த சந்திப்பு பி.டி.பாலசூரியவின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது, வாதரவத்தை - யாழ்ப்பாணம் வழித்தடத்தில் பேருந்து சேவையினை நடத்துவதில் உள்ள நடைமுறைப் பிரச்சினைகள் அமைச்சருக்கு செயற்பாட்டு முகாமையாளர் விளக்கமளித்திருந்தார்.

குறித்த பிரச்சினைகளுக்கு தொடர்புடைய அதிகாரிகளுடன் ஆலோசித்து உரிய தீர்வினை காண்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அதன் பின்னர் சீரான போக்குவரத்து சேவையினை ஆரம்பிப்பது எனவும் இறுதியில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. (ம)

# நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்




பாலிநகர் வவுனிக்குளத்தைச் சேர்ந்த உயர்திரு

**கந்தையா விஸ்வநாதன் (J.P)**

அவர்களின் 40ஆவது ஆண்டு பிறப்பு இறப்பு பதிவாளர் சேவை நிறைவையிட்டு மாந்தை கிழக்கு பாண்டியன் குளம் பிரதேச செயலகத்தில் இன்று (03.03.2018) சனிக்கிழமை காலை 10.00மணிக்கு பாராட்டுவிழா நடைபெறும்.

இவர் அகமென்றும் புறமென்றும் வாழ்வுதனை அழகாக வகுத்துக் கொண்டு அன்று தொட்டு இன்றுவரை அமைதியான வாழ்வு வாழ்ந்து இனிய பல சேவை செய்த கலைமகன். வாழ்க பல்லாண்டு.

வாழ்த்துவோர்:-
மருதனார்மடம்,
செல்லத்துரை குடும்பம் (S.நாதன்)

(சி-1766)

# நீதிமன்றத்தில் முடியைப் பிடித்து மோதிக்கொண்ட பெண்கள்

(அநுராதபுரம்)

நீதிமன்றத்தில் ஒருவரை ஒருவர் முடியைப் பிடித்துக் கொண்டு தாக்கிக் கொண்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அநுராதபுரம் மாவட்ட நீதிமன்றத்திலே நேற்று குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.


இந்த இரண்டு பெண்களையும் பொலிஸார் கைது செய்து நீதவான் எதிரில் முன்னிலைப்படுத்தியுள்ளனர். இரண்டு பெண்களையும் எதிர்வரும் 6ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மதவாச்சியைச் சேர்ந்த 35 வயதான லீலா நந்தனி மற்றும் கல்லஞ்சியைச் சேர்ந்த 33 வயதான ஆய்ராங்கனி திலகா ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

வழக்கு ஒன்றில் முன்னிலையாவதற்காக சென்றிருந்த இருவரும் நீதிமன்றம் என்று கூட பாராது ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டுள்ளனர். (ம)

# மரண அறிவித்தல்

## சிவகுரு விநாயகமூர்த்தி (விநாயகம்)



பெரியபளை பளையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சிவகுரு விநாயகமூர்த்தி (விநாயகம்) அவர்கள் 02.03.2018 நேற்று வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு-தெய்வானை தம்பதிகளின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற தம்பையா-சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், நிமலதாசன் (லண்டன்), நிர்மலாதேவி (பிரான்ஸ்), நிமலறூபினி (நோர்வே), நிமலறஞ்சன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சுபாசினி (லண்டன்), திருச்செல்வம் (பிரான்ஸ்), சிவநேசன் (நோர்வே), தர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பாமிலா, கபிலாஸ், திவ்வியா, கவிதன், லஸ்வின், பிரவீனா, அஸ்வின் ஆகியோரின் பேரனும், தனலட்சுமி (பெரியபளை), ஜெயபாலசிங்கம் (கனடா), சண்முகராசா (இந்தியா), நாகராசா (சுவிஸ்), சிவானந்தராசா (லண்டன்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (04.03.2018) ஞாயிறு மாலை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று மாலை 3.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக மலாயன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பெரியபளை,** **தகவல்:செல்லையா நிமலறூபன்,**
**பளை** (சி-1762) **மோகன் கூல் பார், பளை.**


யாழ் மக்களுக்காக HONDA வழங்கும் மாபெரும் சலுகை

காசு, லீசிங் மற்றும் மாற்றீட்டுக்கான விசேட விலைக்கழிவு 3900/=

HONDA

அனைத்து வகையான பழைய மோட்டார் சைக்கிளுக்கும் புதிய ஹொண்டா மோட்டார் சைக்கிள்.

குறைந்த ஆவணங்களுடன் லீசிங் விசேட விலைக் கழிவுகள் உடன்



லீசிங் FREE!

- SLS தலைக்கவசம்
- யக்கெட்
- காப்புறுதி
- பதிவுக்கட்டணம்
- இலவச சேவைகள் ஐந்து
- இரண்டு வருட உத்தரவாதம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Dio Apdar | 24 3900/= | 240 000/= | CB Hornet Apds | 401 900/= | 398 000/= |
| Activai | 231 900/= | 228 000/= | CB Hornet Apdds | 431 900/= | 428 000/= |
| Activa3g | 221 900/= | 218 000/= | CBHornet Apds2 | 414 900/= | 411 000/= |
| Aviator | 245 900/= | 242 000/= | CBHornetApdds2 | 440 900/= | 437 000/= |
| CD110Drem | 218 900/= | 215 000/= | CB unicorn 160 | 354 900/= | 348 000/= |
| Navi | 181 900/= | 178 000/= | Shine Apdsh | 271 900/= | 268 000/= |

மாற்றீட்டுக்கான உடன் காசுக்குரிய விசேட சலுகைகள் பலவும் ...

பழைய ஒன்றுக்கு புதிய ஒன்று



பங்குனி 3 - 11 திகதி வரை

சுழுமலைச் சந்தி அருகாமை

காலை 9 முதல் இரவு 8 மணிவரை

R.R.S.C. மோட்டோர்ஸ். (ரஞ்சித் மோட்டார்ஸ்) யாழ் வீதி, மானிப்பாய்.

077 310 7549 / 076 833 9898
021 492 7627

(சி-1767)

## சட்டவாட்சி சுட்டெண் பட்டியலில் இலங்கை 9இடங்கள் முன்னேற்றம்

(கொழும்பு)

சாதாரண மக்களது கண்ணோட்டத்தின் அடிப்படையில் சட்டவாட்சியை மதித்து நடக்கும் நாடுகளின் பட்டியலை ஆராய்கையில் பிராந்திய அடிப்படையில் இலங்கை முன்னணியில் திகழ்கிறது.

உலக நீதித் திட்ட சட்டவாட்சி சுட்டெண் பட்டியலில் 113 நாடுகள் பட்டியலிடப்பட்டன. இந்தப் பட்டியலில் இலங்கை 68ஆவது இடத்தில் உள்ளது. கடந்த பட்டியலுடன் ஒப்பிடுகையில் இலங்கை 9 இடங்களால் முன்னேறியுள்ளது.

சட்டவாட்சி சுட்டெண் பட்டியலில் டென்மார்க் முதலிடத்தில் உள்ளது. வெனிசுவெலா கடைசி இடத்தைப் பிடித்துள்ளது.

ஆசிய நாடுகளைப் பொறுத்தவரையில் சிங்கப்பூருக்கு முதலிடம். கம்போடியா 112 ஆவது இடத்திலும், மலேசியா 53ஆவது இடத்திலும், நேபாளம் 58ஆவது இடத்திலும் உள்ளன. இந்தியா 62 ஆவது இடத்தை பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இது ஒரு கள்ளன்-பொலிஸ் விளையாட்டு அரசு என்று மக்கள் பேசுகின்றனர்

## அமைச்சர் மனோ கணேசன் விரக்தி



(கொழும்பு)

"தனக்கு மூன்று மாதங்களுக்கு பொலிஸ்துறை அமைச்சு பதவியை கொடுங்கள். நான் திருடர்களை பிடிக்கிறேன்" என ஜனாதிபதி ஒருமுறை, அமைச்சரவையில் சொன்னார். அது நடைபெறவில்லை. அப்போது திருடர்களை பிடிப்பதை பிரதமர் ரணிலின் ஐக்கிய தேசிய கட்சி தடை செய்கிறது என மக்கள் பேசினார்கள். இப்போது பொலிஸ்துறை அமைச்சர் சாகல ரட்நாயக்க பதவி விலகிய பின், அந்த பதவியை சரத் பொன்சேகாவுக்கு கொடுக்க முடிவு செய்யப்பட்டது. அந்த முடிவை இன்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி எதிர்க்கிறது. இதனால் இப்போது திருடர்களை பிடிப்பதை ஜனாதிபதி மைத்திரியின் கட்சி தடை செய்கிறது என மக்கள் பேசுகின்றார்கள்.

அமைச்சர்களான ராஜித, சம்பிக்க, அர்ஜுன, பொன்சேகா ஆகியோரும் ஒருமுறை திருடர்களை பிடிக்க இந்த அரசு தவறி விட்டது என்று கடுமையாக குற்றம் சாட்டி அமைச்சரவை கூட்டுப் பத்திரம் ஒன்றை அமைச்சரவையில் கொண்டு வந்தார்கள்.

ஆகவே, இன்று பொன்சேகாவுக்கு பொலிஸ்துறை அமைச்சர் பதவியை கொடுக்க முடியாவிட்டால், அதை ராஜித, சம்பிக்க, அர்ஜுன ஆகிய மூவரில் ஒருவருக்கு கொடுங்கள். இதுவும் முடியாவிட்டால், எம்மால் திருடர்களை பிடிக்க முடியாது என ஜனாதிபதியும், பிரதமரும் இந்நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கோரி கதையை முடிக்க வேண்டும் என முற்போக்கு கூட்டணித் தலைவரும், தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கொழும்பு மட்டக்குளி போதி சமுத்ரா ராமவிஹாரையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் மனோ கணேசன் மேலும் தெரிவிக்கையில்,

2015ஆம் ஆண்டு மக்கள் தந்த ஆணையில் பல விடயங்கள் உள்ளன. நாம் கொடுத்த வாக்குறுதிகளும் பல உள்ளன. ஜனநாயகம், பொலிஸ் சுயாதீனம், நீதிமன்ற சுயாதீனம், அரசியல் தீர்வு தரும் புதிய அரசியலமைப்பு, அரசியல் கைதிகள், காணி மீளளிப்பு, தோட்ட தொழிலாளருக்கு மலையகத்தில் காணி, தனி வீடு மற்றும் திருடர்களை பிடிப்பது என உள்ளன. இவற்றில் ஜனநாயகம், பொலிஸ் சுயாதீனம், நீதிமன்ற சுயாதீனம் ஆகியவை தொடர்பில் நாம் முன்னேறியுள்ளோம். ஏனைய சிலவற்றில் பாதி கிணறு தாண்டியுள்ளோம். ஆனால், திருடர்களை பிடிக்க முழுக்க தவறிவிட்டோம்.

திருடர்களை பிடிப்பதில், அவரை இவரும், இவரை அவரும் தடுக்கிறார்கள். இரண்டும் கட்சி அரசியல் தான் காரணங்கள். ஒருதரப்பு பிடிக்க போனால், அடுத்த தரப்பு தடுப்பது இன்று ஒரே அக்கப்போராக மாறியுள்ளது. இது ஒரு கள்ளன் பொலிஸ் விளையாட்டு அரசாங்கம் என்று மக்கள் பேசுகிறார்கள். கள்ளனை பிடிக்க பொலிஸ் போவார்களாம். ஆனால், கள்ளன் பிடிபட மாட்டார்களாம். அப்புறம் அதற்கு ஒரு காரணம் சொல்வார்களாம்.

இதற்கு ஜனாதிபதியும், பிரதமரும் மக்களுக்கு ஒரு நம்பும்படியான உடன் தீர்வை தர வேண்டும். மக்களின் பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு. உண்மையான மக்கள் பிரதிநிதிகளான எங்கள் பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு. பிரதமரையோ, ஜனாதிபதியையோ மட்டும் நம்பி நாம் அரசியலுக்கு வரவில்லை. மக்களை நம்பியே நான் பொதுவாழ்வில் இருக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## குடிநீர்ப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கிடைக்கும்



(கொழும்பு)

வடமத்திய மாகாணத்தின் குடிநீர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொலநறுவை திக்கல்புர பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இதற்கமைய இந்த வருடத்தின் இறுதிக்குள் வடமத்திய மாகாணத்தின் குடிநீர்ப்பிரச்சினைக்குத் தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## குண்டு வெடிப்பு தொடர்பில் இராணுவ அதிகாரி கைது

(கொழும்பு)

அண்மையில் தியத்தலாவ, கஹகொல்ல பகுதியில் பேருந்து ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பில் கைகுண்டு ஒன்றை எடுத்துச்சென்ற இராணுவ அதிகாரி கைது செய்யப்பட்டு மார்ச் 15 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என இராணுவத் தரப்பு அறிவித்துள்ளது. (இ-7)

## சிங்கப்பூர் வர்த்தக அமைச்சர் ஈஸ்வரனுடன் பிரதமர் ரணில் நேற்று சந்தித்து பேச்சு



(கொழும்பு)

சிங்கப்பூருக்கும், இலங்கைக்கும் இடையில் இந்த வருடம் கைச்சாத்திடப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை அடிப்படையாக கொண்டு இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக, பொருளாதார தொடர்புகளை வலுப்படுத்த வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் வர்த்தகம் மற்றும் கைத்தொழில் அமைச்சர் எஸ்.ஈஸ்வரன் மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு இடையில் நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது இது வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்தப் பேச்சுவார்த்தை சிங்கப்பூரின் போஃ சீசன்ஸ் ஹொட்டலில் நேற்று நடைபெற்றுள்ளது.

இதன்போது, சிங்கப்பூருக்கும் இலங்கைக்கும் இடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை ஏற்படுத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழங்கிய பங்களிப்பு சிங்கப்பூர் அரசாங்கத்தின் விசேட பாராட்டை பெற்றுள்ளதாக அமைச்சர் ஈஸ்வரன் தெரிவித்தார்.

மேலும், சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் பிரதிபலனாக சிங்கப்பூர் தொழில் முனைவோர் பலர் இலங்கையில் முதலீடுகளை செய்ய ஆர்வம் கொண்டுள்ளதால் அவர்களின் வர்த்தக நடவடிக்கைகளை இலகுவாக்குவதற்கான துரித நடவடிக்கைகளை எடுப்பது குறித்து இந்த பேச்சுவார்த்தையில் கவனம் செலுத்தப்பட்டதாக பிரதமரின் அலுவலகம் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது. (இ-7)

## அலோஷியஸ், பலிசேன தொடர்ந்தும் மறியலில்





(கொழும்பு)

பிணைமுறி மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பேர்பெச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அர்ஜுன் அலோஷியஸ் மற்றும் அதன் நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன ஆகியோர் எதிர்வரும் மார்ச் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளையில் கோட்டை நீதவான் லங்கா ஜெயரத்ன இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். (இ-7)

## அர்ஜுன் மகேந்திரனுக்கு எதிராக இன்டர்போல் ஊடாக நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனுக்கு எதிராக இரண்டாவது முறையாக பிறப்பிக்கப்படிருக்கும் அறிவிப்பு கருத்திற்கொள்ளப்படாவிட்டால், அவருக்கு எதிராக சர்வதேச பொலிஸாரின் (இன்டர்போல்) ஊடாக நடவடிக்கை எடுப்பது குறித்து, சட்டமா அதிபர் கவனம் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு அமைவான சட்ட நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக சட்டமா அதிபர் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடியில் சந்தேகத்துக்குரியவராக பெயரிடப்பட்டிருக்கும் அர்ஜுன் மகேந்திரனை, கடந்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு கொழும்பு கோட்டை நீதவான் லங்கா ஜயரட்ன அறிவித்தல் விடுத்திருந்தார்.

எனினும், அதற்கு அவர் பதிலளிக்காத காரணத்தால், எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னதாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு கடந்த 16 ஆம் திகதி நீதவான் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

அந்த அறிவித்தல் விரைவு தபால் மூலமாகவோ அல்லது சர்வதேச பொதி சேவை ஊடாக அனுப்பி வைக்குமாறு கோட்டை நீதவான் அறிவுறுத்தியிருந்தார்.

எனினும், சிங்கப்பூரில் உள்ள குறித்த முகவரியில் அர்ஜுன் மகேந்திரன் இல்லை என தெரிவிக்கப்பட்டு, குறித்த அறிவித்தல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

டர்பன் டெஸ்ட் 2ம் நாள்

### மார்ஷின் 96 ஓட்டமும், ஸ்ரார்க்கின் 34/5 பந்துவீச்சும் கைகொடுக்க

# 162 ஓட்டங்களில் சுருண்டது தென்னாபிரிக்கா



மிட்சல மார்ஷ், மிட்சல் ஸ்ரார்க்கின் எழுச்சியான கிரிக்கெட் ஆட்டத் திறன் கைகொடுக்க டர்பன் டெஸ்டின் 2ஆம் நாளிலேயே தென்னாபிரிக்காவை அவுஸ்திரேலியா முற்று முழுதான ஆதிக்கத்துக்குள் கொண்டு வந்துள்ளது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி, அங்கு 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் நேற்று முன்தினம் டர்பனில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்டநேர நிறைவில், 5 விக்கெட்டுக்களை இழந்து 225 ஓட்டங்களை எடுத்திருந்தது. மிட்சல் மார்ஷ் (32), பெய்ன் (21) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**மார்ஷ் அபாரம்**

நேற்று, 2ஆம் நாள் ஆட்டம் நடந்தது. முதல் இன்னிங்ஸை தொடர்ந்த அவுஸ்திரேலிய அணியின் பெய்ன் (25), ரபாடா 'வேகத்தில்' வெளியேறினார். மகராஜ் 'சுழலில்' கம்மின்ஸ் (3) சிக்கினார். அபாரமாக ஆடிய மிட்சல் மார்ஷ், அரைச் சதம் கடந்தார். மிட்சல் ஸ்ரார்க் (35) ஓரளவு கைகொடுத்தார். மிட்சல் மார்ஷ், 96 ஓட்டங்கள் எடுத்திருந்த போது பிலாண்டர் பந்தில் ஆட்டமிழந்தார். நேதன் லயன் (12) ஏமாற்றினார்.

முதல் இன்னிங்ஸில் அவுஸ்திரேலிய அணி, சகல விக்கெட்டுக்களையும் இழந்து 351 ஓட்டங்களை எடுத்தது. ஹேசல்வுட் (2) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பில் கேஷவ் மகராஜ் 5 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

**டி வில்லியர்ஸ் அரைச்சதம்**

பின் முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணிக்கு டீன் எல்கர் (7), அம்லா (0) ஏமாற்றினர். மார்க்ரம் (32), ஆறுதல் கொடுத்தார். பொறுப்பாக ஆடிய டி வில்லியர்ஸ் அரைச சதம் கடந்தார். ஸ்ரார்க் 'வேகத்தில்' அணித் தலைவர் டு பிளசி (15), டி புருயின் (6), பிலாண்டர் (8), ரபாடா (3), மோர்னே மோர்கல் (0) ஆட்டமிழந்தனர்.

முதல் இன்னிங்ஸில் தென்னாபிரிக்க அணி, 162 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. டி வில்லியர்ஸ் (71) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலியா சார்பில் அசத்திய ஸ்ரார்க் 34 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

போட்டியின் 3ஆம் நாளாட்டம் இன்றாகும்.

## ரயில் பயணங்களில்...

# ஷர்துல் தாகூர் எளிமை



இந்திய அணி வேகப் பந்து வீச்சாளர் ஷர்துல் தாகூர், ரயிலில் பயணித்து வியப்பு கொடுத்தார்.

இந்திய அணியின் இளம் வேகப்பந்து வீச்சாளர் ஷர்துல் தாகூர் (வயது-26), மகாராஷ்டிராவை சேர்ந்த இவர், கடந்த ஓகஸ்டில் இலங்கையில் நடந்த நான்காவது ஒரு நாள் போட்டியில் (ஒரு விக்.,) அறிமுகமானார். சமீபத்திய தென்னாபிரிக்காவுக்கு எதிராக செஞ்சுரியனில் நடந்த ஒரு நாள் போட்டியில் 4 விக்கெட்டுக்கள் சாய்த்து அசத்தினார். இதன்மூலம் நட்சத்திர வீரராக மாறினார். மற்ற வீரர்கள் போல இல்லாமல், காருக்குப்பதில் ரயிலில் பயணிக்கிறார். இது குறித்து ஷர்துல் தாகூர் கூறியது:

ஆரம்ப காலத்தில் பயிற்சியில் ஈடுபட வீட்டிலிருந்து ரயிலில்தான் பயணித்தேன். தற்போதும் அதே நபராகத்தான் இருக்கிறேன்.

தென்னாபிரிக்க தொடர் முடிந்தபின், கேப் டவுனில் இருந்து விமானத்தில் புறப்பட்டோம். மும்பை விமான நிலையம் வந்தபின், நேராக அந்தேரி ரயில் நிலையத்தை சென்றடைந்தேன். அங்கிருந்து வீடு அமைந்துள்ள பால்கருக்கு பயணித்தேன். அப்போது கல்லூரியில் படிக்கும் சில மாணவர்கள் என்னை சந்தேகத்துடன் பார்த்தனர்.

என்னை அடையாளம் காண முடியவில்லை. எனது புகைப்படத்தை 'கூகுளில்' தேடினர். பின், இந்திய பந்துவீச்சாளர்தான் என உறுதி செய்து, 'செல்பி' எடுக்க வலியுறுத்தினர். இந்திய அணியில எனக்கு எளிதாக இடம் கிடைக்கவில்லை. ஒவ்வொரு வாய்ப்புக்கும் போராடினேன். கல்லூரியில் படிக்குமபோது, எனது தேடலை தொடங்கினேன். தொடர்ந்து முயற்சி செய்ததால, தேசிய அணியில் இடம் பிடிக்க முடிந்தது. இத்தனை நாள் காத்திருந்ததும் நன்மைக்கே என்றே நினைக்கிறேன். ஏனெனில், அதிகமான தோல்விகளை தாண்டித்தான் சாதிக்க முடியும் என்பதை இளம் வயதிலேயே உணர்ந்து கொண்டேன். இவ்வாறு ஷர்துல் தாகூர் தெரிவித்தார்.

# பிராவோ போகாததன் பின்னணி


ஐ.பி.எல்., தொடரில் முழு அளவில் பங்கேற்க வேண்டும் என்பதற்காக, பிராவோ உள்ளிட்ட பலர், பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரை புறக்கணிப்பதாக தெரிகிறது.

பாகிஸ்தானில், உள்ளூர் 'ரி20' தொடர் (பி.எஸ்.எல்.,) நடக்கிறது.

நடப்பு சம்பியன் பெஷாவர் அணியின் சகலதுறை வீரர் டுவைன் பிராவோ சிறிய காயங்களை காரணமாக கூறி, இது வரை அணியில் இணைய வில்லை. இது பெஷாவர் அணியை பெரிதும் பாதித்துள்ளதாம். பிராவோ இம்முறை சென்னை அணிக்காக மீண்டும் களமிறங்கவுள்ளார்.

## ரி20 போட்டிகளின் எழுச்சியால் டெஸ்ட் போட்டிகள் அழிவடையுமா?

### கலக்கத்தில் அண்டர்சன்



இளம் வீரர்கள் ஒருநாள் மற்றும் ரி20 கிரிக்கெட்டுக்களை விரும்புவதால் டெஸ்ட் போட்டி குறித்து வேகபந்துவீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சன் கவலை வெளியிட்டுள்ளார்.

டெஸ்ட் போட்டியில்தான் ஒரு கிரிக்கெட் வீரரின் உண்மையான திறமையை கண்டறிய முடியும். நவீன காலத்தில் அப்படிப்பட்ட டெஸ்ட் போட்டியின் மீதான ஆர்வம் ரசிகர்களுக்கும் வீரர்களுக்கும் குறைந்து கொண்டே வருகிறது.

இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்கள் எப்பொழுதும் டெஸ்ட் கிரிக்கெட்டிற்குதான் முக்கியத்தும் கொடுப்பார்கள். இந்நிலையில் ஒருநாள் மற்றும் ரி20 கிரிக்கெட்டில் மட்டுமே கவனம் செலுத்தப் போவதாக இங்கிலாந்தின் அடில் ரஷித், அலெக்ஸ் ஹேல்ஸ், ரீஸ் டாப்லே ஆகியோர் கவுண்டி சாம்பியன்ஷிப் 2018 தொடரை புறக்கணித்து லிமிடெட் ஓவர் போட்டியில் மட்டுமே ஒப்பந்தம் செய்துள்ளனர்.

இப்படியே வீரர்கள் சென்றால் டெஸ்ட் போட்டி முடிவுக்கு வந்து விடும் என டெஸ்ட் போட்டிகளில் இங்கிலாந்து அணி சார்பில் அதிக விக்கெட்டுக்கள் வீழ்த்திய வீரரான ஜேம்ஸ் அண்டர்சன் கவலை வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து ஜேம்ஸ் அண்டர்சன் கூறுகையில்,

"இன்னும் டெஸ்ட் போட்டிகளின் மீது விருப்பம் இருப்பதற்காக நான் பிரார்த்திக்கிறேன். தற்போது கிரிக்கெட் சென்று கொண்டிருக்கின்ற நிலையிலும் சர்வதேச அளவில் அதிகமான ரி20 கிரிக்கெட் தொடர்கள் தோன்றி கொண்டிருக்கையில் டெஸ்ட் போட்டிக்கான கவலை ஏற்படுகிறது.

குறுகிய வகை கிரிக்கெட்டில் நண்ட நேரம் களத்தடுப்பு செய்ய வேண்டியதில்லை. இதனால் உடலுக்கு எளிதாக உள்ளது. மனநிலையும் சிறப்பாக உள்ளது. அதிக அளவில் வசதி மற்றும் பணம் கிடைப்பதால் உலகம் முழுவதும் ரி20 உருவாக முடியும்" என்றார்.

# வடக்கின் வர்ணங்கள் சித்திரக்கண்காட்சி ஆரம்பம்







வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண சித்திர பாட ஆசிரியர்களின் 'வடக்கின் வர்ணங்கள் சித்திரக் கண் காட்சி' நேற்று யாழ்.மத்திய கல்லூரியில் ஆரம்பமாகியது.

வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆசிரியர்களின் ஆக்கங்கள் அடங்கிய 'வடக்கின் வர்ணங்கள்' என்ற நூல் வெளியிட்டுவைக்கப்பட்டது.

இந் நிகழ்வில், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், துறைசார் விருந்தினராக கே.கைலாச நாதன் ஆகியோர் கலந்து கொண்டதுடன் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் துறை சார் ஆர்வலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு கண்காட்சியை பார்வையிட்டனர்.

இக்கண்காட்சி இன்று காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை இடம்பெறும். (இ-9)




## 26 ஆவது நினைவஞ்சலிகள்

மலர்வு 18 06 1920

மறைவு 19 02 1992



அமரர் இராசையா செல்வராசா

(இளைப்பாறிய ஆசிரியர்)

திதி:- 03.03.2018 (துதியை)

ஆண்டுகள் இருபத்து ஆறு ஆனாலும் உங்கள் நினைவுகள் என்றும் பசுமையானவை. உங்கள் உன்னதமான ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

"சுபசதனம்"
செம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

உங்கள் குடும்பத்தினர்: மகள்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(3042)

## கண்ணீர் அஞ்சலி

அமரர். திருமதி நாகலிங்கம் இராசம்மா



எமது மயிலிட்டி மீள்குடியேற்ற முயற்சிக்கும் அதன் அபிவிருத்திக்கும் உறுதுணையாக இருக்கும் எமது யாழ்.மாவட்ட அரச அதிபர் திரு.நாகலிங்கம் வேதநாயகம் அவர்களின் அன்புத் தாயார் அமரர்.திருமதி நாகலிங்கம் இராசம்மா அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மயிலிட்டி அமைப்புக்களும் மயிலிட்டி மக்களும்.


## இராசி பலன்

**மீனம்:** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள்.

**மேடம்:** மற்றவர்களின் மன நிலையை அறிந்து செற்படுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், தேக நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**இடபம்:** பாராட்டும் புகழும் கூடும் நாள், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்:** பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும்.

**கும்பம்:** வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், எதிர்ப்புக்களைச் சந்திக்க நேரிடலாம், விரயங்கள் கூடும் நாள், குடும்ப பொறுப்புக்கள் கூடும்.

**கடகம்:** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கூட்டு முயற்சிகள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு, பொருளாதார நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்:** குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், குறையாக இருந்த பணிகளை ஆர்வத்தோடு செய்து முடிப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் உருவாகும், வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம்.

| | | | |
|---|---|---|---|
| புத | | | |
| சூரி.சுக் | இராசி பலன் | | ராகு |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சதயம் | | |
| சனி | குரு.செவ் | | சந் |

**03.03.2018**

மாசி 19, சனிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு

துதியை பின்னிரவு 4.34 மணிவரை

உத்தரம் முன்னிரவு 10.53 மணிவரை

சுபநேரம் 3.27-4.57 மணிவரை

இராகுகாலம் 9.27-10.57 மணிவரை

திருவள்ளுவர் குருபூசை

வளவன்

**தனுசு:** குடும்ப ஒற்றுமை மேலோங்கும், செய்தொழில் மேன்மையுண்டு, செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும்.

**துலாம்:** பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், சயன சுகக் குறைவான நாள்.

**கன்னி:** பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், உடல்நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள்.





புலோலி கிழக்கு சந்தா தோட்டம் ஸ்ரீ முதலி (மனோன்மணி) அம்பாள் ஆலயத் தேர்த்திருவிழா கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இதில் புதிய சித்திரத் தேரில் அம்பிகை ஆரோகணிப்பதையும் அடியவர் ஒருவர் பறவைக்காவடியில் நேர்த்திக் கடன் செலுத்துவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மகாலிங்கம்)

## வட இலங்கை சங்கீத சபையின் 'கலாவித்தகர்' பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வட இலங்கைச் சங்கீத சபையின் 22ஆவது "கலாவித்தகர்" பட்டமளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மருதனார்மடம் வட இலங்கை சங்கீத சபை தற்பரானந்தன் அரங்கு வட இலங்கை சங்கீத சபைத்தலைவரும் யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளருமான ந.தெய்வேந்திரராஜா தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தகைசார் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக மீன்பிடித்துறை தலைவர் பேராசிரியர் திருமதி சிவசாந்தினி குகநாதன், கௌரவ விருந்தினராக இராமநாதன் நுண்கலைப்பீட முன்னாள் நடனத்துறை தலைவர் திருமதி அருட்செல்வி கிருபராஜா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

## பிரதேச மலருக்கான ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு-பருத்தித்துறை பிரதேச செயலகம் 2018ஆம் ஆண்டிற்கான பிரதேச மலரினை வெளியிடத்தீர்மானித்துள்ளது.

எனவே மேற்படி மலரில் இடம்பெறுவதற்கு பொருத்தமான பிரதேசங்கள் மொழி, பண்பாடு, வரலாறு, அபிவிருத்தி முதலான விடயங்களை உள்ளடக்கிய ஆய்வுக் கட்டுரைகளும் பிரதேச கலைஞர், எழுத்தாளர்களின் படைப்பாக்கங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன.

பிரதேச மலருக்கான ஆக்கங்கள் யாவும் தெளிவான கையெழுத்துப் பிரதியாகவோ கணனி அச்சுப் பிரதியாகவோ ஏ4 தாளில் 2018.04.27 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு அலுவலக நேரத்தில் கலாசாரக் கிளையுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (இ)

## கலையகத்திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கதிர்தொலைக்காட்சி மற்றும் கதிர்வானொலி கலையகத்திறப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் சங்கிலியன் மன்றம் நல்லூர் சட்டநாதர் கோவில் முன்பாகவுள்ள கதிர் கலையகத்தில் ஓய்வுநிலை அரசாங்க அதிபரும் கதிர் தொலைக்காட்சி பணிப்பாளருமான எஸ்.தில்லை நடராசா தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ்.மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன், ஓய்வுநிலை அரசாங்க அதிபர் வே.விஸ்வலிங்கம், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன், யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை பேராசிரியர் மா.வேதநாதன் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் செ.யோகராசா ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

## குருத்துவ வெள்ளி விழா

(யாழ்ப்பாணம்)

"மந்திர கிரியா சுரபி" "வைதீக ஞான திலகம்" சிவஸ்ரீ குமார சரவணபவக் குருக்கள் குருத்துவ வெள்ளி விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இணுவில் சிவகாமி அம்மன் திருமண மண்டபத்தில் இடம்பெறும். இந்த விழாவையொட்டி இன்று காலை 9 மணிமுதல் சிவகாமி அம்மன் திருமண மண்டபத்தில் இரத்ததான முகாம் இடம்பெறும். (இ)

## வடமராட்சி வடக்கு கலாசாரப் பேரவைக்கு அங்கத்தவர்களை இணைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு கலாசாரப் பேரவைக்கு புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வடமராட்சி வடக்கு-பருத்தித்துறை பிரதேசத்திற்குட்பட்ட கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் இப்பேரவையில் அங்கத்தவர்களாக சேர்ந்து பிரதேச பண்பாட்டு மேம்பாட்டுச் செயற்பாடுகளில் தமது ஆக்கபூர்வமான பங்களிப்பினை நல்க வருகை தருமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

எனவே அங்கத்தவர்களாக சேர விரும்புபவர்கள் வடமராட்சி வடக்கு பிரதேச செயலக கலாசார கிளையில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் சந்தாப்பணத்தினையும் அதே கிளையில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

விண்ணப்பங்களை ஏற்பதற்கான இறுதி நாள் 29.03.2018, 2017இல் ஆண்டுச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து கொண்டவர்களும் ஏற்கனவே ஆயுட்சந்தாதாரர்களாக இருப்பவர்களும் விண்ணப்பிக்கத் தேவையில்லை என்பதுடன் அலுவலக நேரத்தில் மேலதிக விபரங்களை அறிய முடியும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என பருத்தித்துறை கலாசாரப் பேரவைத் தலைவர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (இ)

## கண்டனம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்ற முஸ்லிம் மக்களுக்கெதிரான திட்டமிட்ட பேரினவாதத் தாக்குதல் சம்பவங்களுக்குச் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு தனது வன்மையான கண்டனங்களைத் தெரிவிக்கின்றது என அவ்வமைப்பின் தலைவர் க.ஆனந்தக்குமாரசுவாமி, இணைச் செயலாளர்கள் ச.தனுஜன், அ.சீவரத்தினம் ஆகியோரால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ் அறிக்கையில், கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கைத் தீவிலே சிறுபான்மைத் தேசிய இனங்கள் மீதான திட்டமிட்ட பேரினவாதத் தாக்குதல்கள் பல்வேறு சக்திகளாலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலை மாறவேண்டும்.

இனவாதம், மதவாதத்தை மக்கள் மத்தியில் வெறியாக ஊட்டி வளர்ப்பதன் மூலம் நன்மை அடையும் நாசகார சக்திகளை மக்கள் இனங்கண்டு நிராகரிக்க வேண்டியது மிகவும் அவசியம். நாம் எதிர் கொண்ட தொடர்ச்சியான அழிவுகளின் படிப்பினைகளில் இருந்து நாம் இதைச்செய்யத் தவறும் போது, நாம் இன்னுமொரு கொடூரமான அழிவை எதிர்நோக்க வேண்டிய துர்ப்பாக்கியத்துக்குள் தள்ளப்பட்டு விடுவோம்.

எனவே, மக்கள் இதுபோன்ற சக்திகளிடம் விழிப்பாய் இருந்துகொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்வதுடன், இலங்கை அரசாங்கமானது சிறுபான்மை இனங்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும் என்பதையும் நாம் வலியுறுத்தி நிற்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

## குடும்பஸ்தரின் சடலம் மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர்ப்பகுதியில் வசித்து வந்த மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நவாலி வடக்கு மானிப்பாயை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான இமானுவேல்பிள்ளை வேலுவைரராஜா (வயது-64) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் வாகன உதிரிப்பாக விற்பனை நிலையம் வைத்துள்ளார். இவரது குடும்பம் வவுனியாவில் வசித்து வரும் நிலையில் இவர் வியாபார நோக்கம் கருதி யாழ்ப்பாணத்தில் தனது சகோதரியுடன் வசித்து வந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் தனது சகோதரிக்கு தொலைபேசி மூலம் அழைப்பை ஏற்படுத்திய குறித்த நபர் தான் வீட்டுக்கு வருவதற்கு சிறிது தாமதமாகும் என தெரிவித்துள்ளார். நேற்று அதிகாலையாகியும் அவர் வீடு வராத காரணத்தினால் அவருடைய கடைக்குச் சென்று உறவினர்கள் பார்த்துள்ளனர்.

அப்போது கடையின் பின்புறமாக அவருடைய துவிச்சக்கர வண்டிக்கு அருகில் இறந்த நிலையில் குறித்த நபர் சடலமாக காணப்பட்டுள்ளார்.

உடனடியாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதையடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

இவரது மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (இ-9)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ்க்கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் சு.விவேகானந்தன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுநிலை பிரபல பௌதிகவியல் ஆசிரியர் சண்முகம் ரவிச்சந்திரன், சிறப்பு விருந்தினராக சிவத்தொண்டர் சிவன் மானிட மேம்பாட்டு நிறுவன உறுப்பினர் துரை.பிரபாகரன், கௌரவ விருந்தினர்களாக முல்லைத்தீவு வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.அன்ரனி ஜோஜ், யாழ்.கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் செல்வதயாளன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

## இலத்திரனியல், கணனி தொடர்பான பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

சுயதொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்கில் இலவசப்பயிற்சி நெறிகளுக்கு பயனாளிகள் பதிவு செய்யப்படவுள்ளனர்.

கணனி வலையமைப்பு, CCTV கமரா installation, LED bulb ஒழுங்கிணைப்பும் LED panel வடிவமைப்பும் Sensor DEVICES வடிவமைப்பு, இப் பயிற்சிநெறிகளில் பங்குகொள்ள விரும்புபவர்கள் 7/3/2018 இற்கு முன்பாக கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் பதிவினை மேற்கொள்ள முடியுமென பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களுக்கு 0212264958 என்ற தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்ளவும். (இ)

## இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

அமரர்களான மு.க.சின்னையா சௌபாக்கியவதிநினைவாக தமிழ்த்தாய்மன்றம் லங்காமாதா அமைப்புடன் இணைந்து நடத்தும் இலவச மருத்துவ முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் திருநெல்வேலி பொற்கமலா தேவிவாசா 31, புதிய செங்குந்தா வீதியில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி என்.சண்முகலிங்கன், புலவர் எம்.எப். ஸ்ரீதயாளன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

## மக்களை பாதுகாக்க யுத்தத்தை உடன் நிறுத்து

# சிரியாவில் தொடரும் படுகொலைக்கு எதிராக மட்டக்களப்பில் கண்டனப் போராட்டம்



(ஏறாவூர்)

சிரியாவில் தொடர்ந்து இடம்பெற்று வரும் படுகொலைக்கு எதிராக மட்டக்களப்பு மாவட்ட கலைஞர்கள் ஒன்றிணைந்து, மட்டக்களப்பு நகர்காந்திப் பூங்கா முன்பாக கண்டனப் போராட்டம் ஒன்றினை நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் நடத்தினர்.

அப்பாவி மக்களை படுகொலை செய்ய வேண்டாம், மக்கள் வாழும் பகுதிகளில் குண்டுத்தாக்குதல் நடத்த வேண்டாம், பொதுமக்களை பாதுகாக்க யுத்தத்தை உடன் நிறுத்தவும், யுத்தத்தின் வலி கொடுமையானது. எனவே அப்பாவி மக்களின் உயிருடன் விளையாட வேண்டாம் எனவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கருத்து வெளியிட்டனர்.

சிரியா கௌடாவில் நடைபெற்று வரும் போரில், ஆயிரக்கணக்கில் மக்கள் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர். இதில் அதிகமாக அப்பாவி குழந்தைகளே கொல்லப்பட்டு வருகின்றனர். இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட, காயமடைந்த குழந்தைகளின் புகைப்படங்கள், சமூக வலைத்தளங்கள் ஊடாக பரவி உலகம் முழுவதிலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன. இக் கண்டனப் போராட்டத்தில் கலைஞர்கள், எழுத்தாளர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-7)


அமரர் திரு.திருமதி மு.க.சின்னையா சௌபாக்கியவதி (பாக்கியம்) நினைவாக...

தமிழ்த்தாய் மன்றம் லங்கா மாதா அமைப்புடன் இணைந்து நடாத்தும் 3ஆவது

**இலவச மருத்துவ முகாம்**

**இடம்:** "பொற்கமலதேவி வாசா"
31, புதிய செங்குந்த வீதி,
சட்டநாதர் வீதி ஊடாக திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்

**திகதி:** 04 மார்ச் 2018 (நாளை ஞாயிற்றுக்கிழமை)

**நேரம்:** காலை 8.00 மணி முதல் 12.00 மணி வரை

- இலவச நீரிழிவு பரிசோதனை(Blood Sugar)
- இலவச இரத்த அழுத்த பரிசோதனை(Blood Pressure)
- இலவச கண்பரிசோதனை செய்து 100 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படும்.
- அத்துடன் விஞ்ஞானத்தையும் மருத்துவத்தையும் இணைக்கும் நாடிப் பரிசோதனை ரஷ்ய தொழில்நுட்ப முறையில் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரத்தின் மூலம் நாடி பரிசோதனை செய்யப்பட்டு மருத்துவ ஆலோசனையை Dr.மோ.லாசகன் வழங்குவார்.

இலவச நீரிழிவு பரிசோதனை செய்ய விரும்புபவர்கள் 12 மணித்தியாலங்கள் நீர், உணவு அருந்தாமல் 04 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு வாருங்கள்.



**Dream House.lk**
Sales & Letting for Commercial and Residential Properties
(3085)


# இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த நினைப்பது நகைச்சுவையானது

## அலரிமாளிகையில் நடந்த சம்பாசணை

(கொழும்பு)

ஒவ்வொரு வாரமும் அலரி மாளிகையில் வியாழக் கிழமைகளில் பல்வேறான சந்திப்புகள், கூட்டங்கள், கட்சி முக்கியஸ்தர்களுடனான கலந்துரையாடல்கள், கட்சியின் சட்ட ஆலோசகர்களின் ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்கான சந்திப்புகளென பல்வேறான சந்திப்புகள் இடம்பெறும்.

எனினும் நேற்று முன்தினம் போயா தினம் என்பதனால் மேலே குறிப்பிட்ட சந்திப்புகள், கலந்துரையாடல்கள் யாவும் புதன்கிழமையே இடம்பெற்றன. ஆகையால், அன்றையதினம் அலரி மாளிகை என்றுமில்லாவாறு மிகவும் பரபரப்பாக இயங்கியது.

அங்கு இடம்பெற்ற சந்திப்புகளின் போது, இனப் பெருக்கத் தடை மாத்திரை கதை, அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு, சட்டம் மற்றும் ஒழுங்குகள் அமைச்சுப் பதவி வழங்காமை, மினி அமைச்சரவை மாற்றத்தின் உள் நோக்கம் உள்ளிட்ட விவகாரங்களே அலசப்பட்டன.

"அம்பாறையில் இனப் பெருக்கத் தடை மாத்திரை கதையின் பின்னணி என்னவென அமைச்சர் தயா கமகேயிடம் வினவிய அமைச்சர் வஜிர அபேவர்த்தன நாட்டை தீக்கிரையாக்குவதற்காக அந்த மாகாணத்தில் "மொட்டுக்காரர்கள்" மேற்கொண்ட சேறுபூசும் நடவடிக்கையாகுமென தகவல் கசிந்துள்ளது என்றார்.

"உணவு, உடைகளில் போடக்கூடிய வகையிலான இனப்பெருக்கத் தடை மாத்திரை என்றொரு வகை உலகில் எங்குமே இல்லையென உலகிலுள்ள மிகவும் பிரபல்யமான வைத்தியர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்" என்று பதிலளித்த அமைச்சர் தயாகமகே, சிலர் பொய்களை பரப்பிவிட்டு, நாட்டுக்குள் பிரச்சினையை ஏற்படுத்துவதற்கு முயல்கின்றனர்" என்றும் தெரிவித்துள்ளார்.

"சாப்பாட்டுக்குள் மாத்திரை இருந்ததாம். என்றாலும் அந்த மாத்திரை இனப் பெருக்கத் தடை மாத்திரையென உறுதிப்படுத்தப்படவில்லை. சந்தர்ப்பவாதிகள் இவ்வாறான இல்லாததைக் கூறி, குறுகிய அரசியல் இலாபத்தை தேடிக்கொள்வதற்கு முயல்கின்றனர் என்றும் எடுத்தியம்பிய அமைச்சர் தயா கமகே, சிங்களவர்களின் இனப்பெருக்கத்தை தடை செய்வதற்கு யாராவது முயல்வார்களாயின் அதுபோன்றதொரு நகைச்சுவை ஒன்றுமே இல்லையென பதிலளித்தார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பெறுபேறுகளின் பின்னர் பிரதமர் பதவி மற்றும் அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பில் பல்வேறான கதைகள் கட்டப்பட்டதுடன் சில நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன. அவையாவும் குளிருக்குள் மறைந்துவிட்டது.

எனினும், இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார ஆனமடுவையில் வைத்து குளவி கூட்டுக்கு மீண்டும் கல்லெறிந்துவிட்டாரென அங்கிருந்தவர்களில் ஒருவர் தெரிவித்துவிட்டார்.

இதனைக் கேட்டவுடன் அங்கிருந்தவர்கள் பலமாக சிரித்துவிட்டனர். அதில் என்ன வேடிக்கையென்றால், "பிரதமர் சரியாகவோ அல்லது முறைகேடாகவோ அந்தப் பதவியிலிருந்து விலக்கப்படவேண்டுமென" இராஜாங்க அமைச்சர் ரங்கே பண்டார கூறியதுதான் விசித்திரமானதாகும் என்றும் சிலர் கூறியுள்ளனர்.

மேலேயும் கீழேயும் நெருப்பு வைக்கப்பட்டுள்ள நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பொறுமையானது அவரின் தலைமைத்துவத்தை மென்மேலும் மெருகேற்றியுள்ளதென இன்னும் சிலர் தெரிவித்துள்ளனர்.

"ஐக்கிய தேசியக் கட்சியான நாம், அமைச்சரவையில் மாற்றம் செய்துவிட்டோம். எனினும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிதான் ஒத்தி வைத்துவிட்டது. சரியென்றால், இரண்டையும் ஒன்றோடு ஒன்றாக செய்து வைத்திருக்கலாம் என்று கருத்துரைத்த அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, எங்களுடைய பக்கத்தில் மட்டும் மாற்றம் செய்தமை என்னைப் பொறுத்த வரையில் தனிப்பட்ட ரீதியில் நான் விரும்பவில்லை" என்றும் கூறியுள்ளார்.

குறுக்கிட்ட அமைச்சர் வஜிர அபேவர்த்தன, "மாகாண ரீதியில் அமைச்சர்களை நியமிப்பது பெரும் சிரமமாகுமென தெரிகிறது. இந்த திருத்தத்துக்கு சுதந்திரக் கட்சியினர் ஆதரவு தெரிவிக்கவில்லையென குறிப்பிட்ட அவர், இந்தத் தருணத்தில் செய்ய முடியாத திருத்தம் பின்னர் செய்யவே முடியாமல் போய்விடும். ஐ.தே.க. பலமான கட்சியென்பதனால் அமைச்சரவையில் திருத்தங்களைச் செய்தோம். பலமில்லாத கட்சியொன்றினால், அமைச்சரவையில் மாற்றங்களைச் செய்ய முடியாது என்றும் தெரிவித்தார்.

இதேவேளை "தன்னுடைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுகள் மாற்றப்பட்டது தன்னுடைய பிரச்சினைக்காக அல்ல" எனத் தெரிவித்த அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, அது மற்றொருவரின் பிரச்சினையால் ஆகும் என்றார்.

இதன்போது அவ்விடத்திலிருந்த பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி, "சமுர்த்தி, விவசாயம் மற்றும் பசளை ஆகியனவற்றுக்கான பிரச்சினைகள் காரணமாகவே கடந்த தேர்தலில் அரசாங்கம் பின்னடைவைச் சந்தித்தது" என்றார்.

"அதுமட்டுமல்ல, எங்களிடத்திலிருக்கும் திறமைவாய்ந்த மற்றும் கட்சியைச்சேர்ந்த இளம் உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்க வேண்டும்" என்று அமைச்சர் தயாகமே ஆலோசனை வழங்கினார். அந்த ஆலோசனையை அங்கிருந்தவர்கள் ஆமோதித்தனர்.

அதுவரையிலும் அமைதியாய் கேட்டுக்கொண்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, "பிரச்சினைகளுக்கு ஒருவாறு தீர்வு கண்டுவிட்டோமென நினைத்துக்கொண்டு இருக்க முடியாது. வரவிருக்கின்ற தமிழ்-சிங்கள புத்தாண்டு மற்றும் எதிர்காலத்தை கவனத்தில் கொண்டு மக்கள் உடல் ரீதியில் உணரக்கூடிய மாற்றங்களைச் செய்ய வேண்டும். இளம் உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் ஏனையோருக்கு கூடுதல் பொறுப்புகள் மற்றும் வசதிகள் பெற்றுக்கொடுக்கப்படும்" என்றார். இதன்போது அமைச்சர் தயாகமகே, சட்டம் மற்றும் ஒழுங்குகள் அமைச்சுப் பதவியை, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு வழங்காமையால் மக்கள் சந்தோசமாக இல்லையென்றார். (இ-7)


**கல்யாணமாலை**
**சர்வதேச திருமண சேவை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 27 செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ அரசதொழில்<br>தொ.இ: B/7557 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 13 செவ் 4 இல்<br>உயரம்: 150cm<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/6706 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Diploma/ தனியார் தொழில்<br>தொ.இ: B/7559 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 26<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Diploma/ ஆசிரியர்<br>தொ.இ: G/6707 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: MSc Eng/ லண்டன்<br>தொ.இ: B/7560 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 42 செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSc/ஆசிரியர்<br>தொ.இ: G/6715 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 41<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BBA/ அரசதொழில்<br>தொ.இ: B/7564 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 162cm<br>தகைமை/தொழில்: O/L/அரசதொழில்<br>தொ.இ: G/6716 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# உணவுக் கட்டுப்பாட்டு வாரத்தையொட்டி

# உணவுப்பொருட்களை கையாளும் நிலையங்களின் உரிமையாளர்களுக்கு அறிவூட்டல் கலந்துரையாடல்

## மன்னாரில் நேற்று நடைபெற்றது



(பனிக்கன்குளம்)

மன்னார் நகரசபை பிரிவுக் குட்பட்ட பகுதிகளில் உள்ள உணவுப்பொருட்களை கையாளும் நிலையங்களின் உரிமையாளர்களுக்கு அறிவூட்டும் கலந்துரையாடல் நடைபெற்றது.

உணவுக் கட்டுப்பாட்டு வாரத்தையொட்டி மன்னார் நகர சபை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள உணவுப்பொருட்களை கையாளும் நிலையம் மற்றும் உணவகங்களின் உரிமையாளர்களுக்கு அறிவூட்டல் வழங்கும் விசேட கலந்துரையாடல் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி வி.ஆர்.சி.லெம்பேட் தலைமையில் இடம்பெற்ற குறித்த விசேட கலந்துரையாடலில் பொது சுகாதார பரிசோதகர்கள், உணவகம் உள்ளிட்ட உணவுப்பொருட்களை கையாளும் நிலையங்களின் உரிமையாளர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

உணவுக் கட்டுப்பாட்டு வாரத்தையொட்டி மன்னார் நகர சபை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள உணவகம் மற்றும் வர்த்தக நிலையங்களில் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக உணவுப்பொருட்களை கையாளும் குறித்த நிலையங்களுக்கு பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட குழுவினர் சென்று பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளனர்.

மன்னார் நகர சபை பிரிவில் ஐந்து குழுக்கள் நியமிக்கப்பட்டு குறித்த வேலைத்திட்டம் இடம்பெறவுள்ளது.

குறிப்பாக உணவுப்பொருட்கள் கையாளும் நிலையங்கள் குறித்த குழுவினரால் பரிசோதிக்கப்பட்டு தேவை ஏற்பட்டால் அறிவுரைகள் வழங்கப்படும்.

உரிய முறையில் செயற்படாத உணவக உரிமையாளர் களுக்கு எதிராக மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படும்.

மேலும் குறித்த உணவுக்கட்டுப்பாட்டு வாரத்தின் போது உணவகங்களுக்கான தராதரச் சான்றிதழும் வழங்கப்புடும்.

எனவே உணவுக்கட்டுப்பாட்டு வாரத்தில் உணவுப்பொருட்களை கையாளும் நிலையங்கள் எவ்வகையில் செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் விரிவாக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# 'என் பயணம்' நூல் வெளியீடு

(பனிக்கன்குளம்)

முறிகண்டி யே.லக்சிதரன் எழுதிய "என் பயணம்" எனும் நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மு/மாங்குளம் மகாவித்தியாலயத்தில் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் க.கஜாந் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு அதிதிகளாக, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாகாணப் பணிப்பாளர் (வடக்கு) எம்.பி. சரத் சந்திரபாலா, துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் பொ. ரவிச்சந்திரன், யாழ்ப்பாணம் அமெரிக்கன் இலங்கை மிசன் தலைவர் ரி.தேவநேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

விசேட அதிதிகளாக் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் செ.பிரேமகாந், கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை உறுப்பினர்களான திருமதி.சிவராசா சரோஜாதேவி, திருமதி. விக்டர் சாந்தி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (2-281)




# புதையல் தோண்டிய மூவர் கைது மூவர் தப்பிய நிலையில் தேடுதல்

## வவுனியாவில் சம்பவம்

(குருமன்காடு)

வவுனியாவில் புதையல் தோண்டிய மூவரைக் கைது செய்துள்ளதாகவும் மேலும் மூவர் தப்பியோடியுள்ளதாகவும் நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினமிரவு நடைபெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.


இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா நெளுக்குளம் பொலிஸாருக்கு நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் சாம்பல் தோட்டம் பகுதியில் புதையில் தோண்டப்படுவதாகக் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் நெளுக்கும் பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ.எம்.அத்தநாயக்கா தலைமையில் சென்ற குழுவினர் சாம்பல் தோட்டம் மைதானப்பகுதி ஒன்றில் புதையல் தோண்டிய மூவரைக் கைது செய்துள்ளதுடன் மேலும் அங்கிருந்த மூவர் தப்பி ஓடியுள்ளனர்.

இதையடுத்து கைது செய்யப்பட்டவர்கள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகளுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். தப்பி ஓடிய மூவரையும் பொலிஸார் தீவிரமாகத் தேடி வருவதாகவும் புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்திய மண்வெட்டிகள், அலவாங்கு, பிக்கான் என்பனவற்றையும் கைப்பற்றியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இச் சம்பவத்தில் கூமாங்குளம் பகுதியைச் சேர்ந்த 23, 32 வயதுடைய இருவரும் நெளுக்குளம் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய நபர்களையும் மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாகவும் மேலும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-250-281)

# சர்வமதக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பிலான கலந்துரையாடல்




(பனிக்கன்குளம்)

வவுனியா மாவட்ட சர்வமதக் குழுவின் செயற்றிட்டங்கள், எதிர்கால செயற்பாடுகள் தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று புகையிரத வீதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

வவுனியா பேர்ம் (FIRM) நிறுவனத்தினூடாக தேசிய சமாதான பேரவையின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட சர்வமத குழுவின் செயற்றிட்டங்கள், எதிர்கால செயற்பாடுகள் சம்பந்தமாக அங்கத்தவர்களிடையே தெளிவை ஏற்படுத்தி அடுத்து நாம் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதாக இக் கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

இந் நிகழ்வில் சமாதான பேரவையின் ஆலோசகர் ஹென்றி டிமெல், தேசிய சமாதான பேரவை செயற்றிட்டம் மற்றும் அமுலாக்கத்தின் அதிகாரி எம்.எச்.முஹமட், வவுனியா மாவட்ட சர்வமத குழுவின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

# முள்ளியவளை பொலிஸ் நிலையம் நேற்று திறந்து வைக்கப்பட்டது



(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட முள்ளியவளை பொலிஸ் நிலையத்திற்கு புதிதாக அமைக்கப்பட்ட பொலிஸ் நிலைய கட்டடத் திறப்பு விழா நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றுள்ளது.

இதன்போது, கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் பொலிஸ் பொறுப்பதிகாரிகள் உட்பட கிராம மட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், இராணுவ பொறுப்பதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலதரப்பட்டவர்களும் கலந்து கொண்டிருந்தனர். (2-15)



முல்லைத்தீவு, கரிப்பட்டமுறிப்பு புதிய குடியிருப்பு கிராமத்தில் எதுவித அடிப்படை வசதியும் இன்றி 75 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இக்குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு மாற்றத்திற்கான இளையோர் அமைப்பினரால் துவிச்சக்கரவண்டிகள் நேற்று வழங்கப்பட்டன.

# போலி வைத்தியர்களிடம் எச்சரிக்கையாக இருக்குமாறு மருத்துவர் சங்கம் கோரிக்கை

(குருமன்காடு)

போலி வைத்தியர்களிடம் எச்சரிக்கையாக இருக்குமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வவுனியா கிளை பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக அரச மருத்துவர் சங்கத்தின் வவுனியா கிளை விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, -

கடந்த காலத்தில் மத்திய சுகாதார அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இலங்கையில் 30 ஆயிரம் போலி வைத்தியர்கள் இருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

அவர்கள் யார் என்பது பொதுமக்களுக்கு அறியப்படுத்தப்படுவதுடன் அவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுவும் கோரிக்கையாக வைக்கப்பட்டிருந்தது.

மக்களுடைய இந்தக் குரலினை அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வவுனியா. கிளை ஏற்றுக் கொண்டு வவுனியா மாவட்டத்தில் சட்டவிரோதமாக வைத்திய நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களின் விபரங்களைத் திரட்டி உரிய அதிகாரிகளிடம் அனுப்பி வைத்துள்ளது.

வவுனியா நகரப்பகுதி, குடியிருப்பு, இரண்டாம் குறுக்குத்தெரு, கோவில்குளம், சிதம்பரபுரம், தோணிக்கல், பூந்தோட்டம், குருமன்காடு, பட்டைகாடு, நெளுக்குளம் போன்ற பகுதிகளில் சட்டவிரோத மருத்துவ நடவடிக்கைகள் அதிக அளவில் இடம் பெறுவதாக ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

MBBS,MD போன்ற பட்டங்களுடன் SLMC பதிவு இலக்கமொன்றைக் காண்பித்து இருக்கும் வைத்தியர்களும் RM என்று குறிப்பிட்டு SLMC பதிவிலக்கத்தைக் குறிப்பிட்டு இருப்பவர்களும் மேலைத்தேய அலோபதி சிகிச்சை முறைகளை (ஆங்கில மருத்துவம்) செய்வதற்குத் தகுதி பெற்றவர்கள்.

BSMS போன்ற பட்டங்கள் பெற்றவர்களும RAM, DAM,RIMP போன்ற பதிவுகளைக் கொண்டிருப்பவர்கள் பாரம்பரிய மருத்துவ முறைகளைச் செய்வதற்குத் தகுதி பெற்றவர்கள்.

தனியார் வைத்திய நிலையமொன்றின் மூலம் சிகிச்சை அளிக்கும் ஒவ்வொரு வைத்தியரும் தங்களது தகைமை மற்றும் பதிவுச் சான்றிதழை பொதுமக்களுக்கு காட்சிப்படுத்துவது கட்டாயமாகும்.

எனவே பொதுமக்கள் தாங்கள் சிகிச்சை பெறச்செல்லும் வைத்தியரின் தகைமை பற்றியும் அவர் வழங்கும் மருந்துகள் பற்றியும் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும்.

முறையற்ற சிகிச்சை நடவடிக்கைகளை இனம் கண்டால் உரிய அதிகாரிகளிடம் (சுகாதார மருத்துவ அதிகாரி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்) உடனடியாகக் கடிதம் மூலம் முறையிடுவது உடனடி நடவடிக்கைகள் மேற் கொள்ள உதவியாக இருக்கும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)

# சர்வதேச விசாரணையை வலியுறுத்தி மன்னாரில் நேற்று கையெழுத்துப் போராட்டம்

(பனிக்கன்குளம்)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 37 ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் நடைபெற்று வருகின்ற நிலையில் இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும், சர்வதேச பொறுப்புக் கூறல் பொறிமுறையை வலியுறுத்தியும் நேற்று வெள்ளிக் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மன்னாரில் கையெழுத்து போராட்டம் இடம் பெற்றது.





சர்வதேச பொறுப்புக் கூறல் பொறிமுறைக்கான தமிழர் செயற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கில் இடம் பெற்று வருகின்ற கையெழுத்து போராட்டம் நேற்று வெள்ளிக் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் பஸார் பகுதியில் சர்வதேச பொறுப்புக் கூறல் பொறிமுறைக்கான தமிழர் செயற்பாட்டுக்குழுவின் மாவட்ட ஏற்பாட்டு குழு தலைவர் அந்தோனி சகாயம் தலைமையில் ஆரம்பமானது.

இதன்போது காணாமற் போன, கடத்தப்பட்டவர்களின் உறவினர்கள், அரசியல் கைதிகளின் உறவினர்கள் , பொது மக்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் என பலர் கலந்து கொண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 37 ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் நடைபெற்று வருகின்ற நிலையில் இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும், சர்வதேச பொறுப்புக் கூறல் பொறிமுறையை வலியுறுத்தியும் கையெழுத்துக்களை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)




# துணுக்காய், ஐயங்கன்குளம் வைத்தியசாலைகளுக்கு நடமாடும் வைத்தியசேவைகள் விரைவில் நடத்தப்படும்

**வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு**

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய், ஐயங்கன்குளம் ஆகிய இரு வைத்தியசாலைகளுக்கும் நடமாடும் வைத்திய சேவையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஞா. குணசீலன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட துணுக்காய் வைத்தியசாலை, ஐயன்கன்குளம் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் என்பவற்றில் நிரந்தர வைத்தியர்களின்றி காணப்படுகின்றது.

இதனால் இங்குள்ள மக்கள் தமது மருத்துவ சேவைகளை பூர்த்தி செய்வதில் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

கடந்த மாதம் 26ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் குறித்த இரு வைத்தியசாலைகளுக்கும் வைத்தியர்களை நியமிக்குமாறு வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் கமலேஸ்வரனால் கோரிக்கை விடுக்கப்பட்டதையடுத்து இதற்கு பதிலளித்த வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஞா. குணசீலன், முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார அதிகாரியூடாக அதனை ஒழுங்கு செய்து எதிர்வரும் வாரம் முதல் இரண்டு வைத்திய சாலைகளுக்குமான வைத்திய சேவைகளை நடமாடும் சேவை மூலம் வாரத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமென என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# புதுக்குடியிருப்பில் இராணுவம் கோருகின்ற 25 ஏக்கர் காணியை வழங்க முடியாது

**வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் தெரிவிப்பு**

(கண்டாவளை)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் இராணுவத்தினர் கோருகின்ற 25 ஏக்கர் காணியை இராணுவத்தினருக்கு வழங்க முடியாது என வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கோம்பாவில் கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் தற்போது இராணுவத்தினர் வசமுள்ள 25 ஏக்கர் அரச காணியை இராணுவத்தேவைக்கு வழங்குமாறு புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் ஊடாக விண்ணப்பித்திருந்தனர்.

கடந்த மாதம் 26ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் குறித்த விடயம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலரினால் முன் வைக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து குறித்த காணி தொடர்பில் மக்கள் பிரதிநிதிகளாகிய தாங்கள் மக்களுடன் கலந்துரையாட வேண்டியுள்ளது. இவ்வாறு குறித்த காணியை வழங்குவதன் மூலம் மக்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படும். மாற்றுக்காணியொன்றை அடையாளம் கண்டு அதனை வழங்குவது பொருத்தமாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

தற்போது இராணுவம் வைத்துள்ள 25 ஏக்கர் காணியையும் இராணுவத்திற்கு உடனடியாக வழங்க முடியாது. இதற்குப் பதிலாக மாற்றுக்காணியை வழங்குவது தொடர்பில் மக்களுடன் கலந்துரையாடி தீர்மானத்தை எடுக்கவேண்டும். எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறவுள்ள புதுக்குடியிருப்பு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இது பற்றிய தீர்மானத்தை எடுக்கலாம் என்றும் இணைத்தலைவர்களில் ஒருவரான பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன் தெரிவித்துள்ளார். (2-315)

# சிரிய இனப்படுகொலையை கண்டித்து கண்டனப் போராட்டத்திற்கு அழைப்பு

## மன்னார்

(பனிக்கன்குளம்)

சிரியாவில் இடம் பெற்று வரும் மனித குலத்திற்கு எதிரான இனப் படுகொலையை கண்டித்து இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக கண்டனப் போராட்டம் இடம் பெறவுள்ளது.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், அதன் தலைவர் வி.எஸ். சிவகரன் தலைமையில் இன்று காலை 9 மணியளவில் குறித்த போராட்டம் இடம் பெறவுள் ளது.

சிரியாவில் இடம் பெற்று வரும் மனித குலத்திற்கு எதிரான இனப் படுகொலையை கண்டிக்கும் வகையில் குறித்த போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அனைத்து மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள், பொது மக்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

◆◆◆◆◆◆◆◆◆

## வவுனியா

(வவுனியா)

சிரியாவில் நடைபெற்று வரும் மனித குலத்திற்கு எதிரான இனப் படுகொலையைக் கண்டித்து இன்று சனிக்கிழமை பிற்கல் 3.30 மணிக்கு கண்டன அமைதிப் பேரணியொன்று வவுனியா சிந்தாமணி பிள்ளையார் கோவிலடியிலிருந்து ஆரம்பமாகி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (2-9)

◆◆◆◆◆◆◆◆◆

## முள்ளிவாய்க்கால்

(பனிக்கன்குளம்)

சிரியாவில் தொடரும் மனிதப்படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. இதில் அனைத்து மக்களையும் அணிதிரண்டு கலந்து கொள்ளுமாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்.

சிரியாவில் நடந்து கொண்டிருக்கும் மனிதப்படுகொலையை உடன் நிறுத்தக் கோரி ஐ.நாவைக் கேட்கும் முகமாக, இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இக்கவனயீர்ப்புப் போராட்டமானது முள்ளி வாய்க்கால் பிரதான சந்திக்கு அருகாமையில் நடைபெறவுள்ளதால் அனைவரையும் இந்த மனிதாபிமான ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார். (2-281)

# கடந்தாண்டு 98 மில்லியன் ரூபா செலவில் 53 சிறிய குளங்களின் அபிவிருத்தி வேலைகள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்தாண்டு 53 சிறிய குளங்களின் அபிவிருத்தி பணிகள் 98.57 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தில் விவசாய மாவட்டங்களில் ஒன்றாக காணப்படும் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆறு பிரதேச செயலர் பிரிவுகளிலும் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான நீர்ப்பாசனக் குளங்களைத் தவிர 228 வரையான சிறிய குளங்கள் காணப்படுகின்றன.

கமநலசேவை நிலையங்களிற்குட்பட்ட 228 குளங்களும் பல்வேறு நிதி மூலங்கள் மூலம் புனரமைக்கப் பட்டு வருகின்றன.

கடந்தாண்டு முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 53 குளங்கள் 98.57 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படுள்ளன என்றும் இதில் பல குளங்கள் நீண்டகாலமாக உடைப்பெடுத்து பராமரிப்பின்றி கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு 98.57 மில்லியன் ரூபா செலவில் 53 குளங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும்

(பூநகரி)

பூநகரி பிரதேச கலாசார பேரவையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலரும் கலாசார பேரவையின் தலைவருமான கி.ச.கிருஷ்னேந்திரன் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு அனைத்து கலாசார பேரவை உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த ஆறு வருடங்களாக கலைநரி விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட அனைத்து கலைஞர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பேரவை செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை புதிய வருடத்திற்கான பேரவை நிர்வாகிகள் தெரிவும், பூந்துணர் எட்டாவது மலருக்கான மலர்க்குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-84)

# மக்கள் மனங்களில் நிறைந்தவர் நடராஜன்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**


யாழ்ப்பாணத்தின் இந்திய துணைத் தூதரகத்தில் சிறப்பாக இணைத்தூதுவராக கடந்த மூன்றாண்டுகள் பணிபுரிந்து தற்போது மாற்றலாகிச் செல்லும் ஆறுமுகம் நடராஜனுக்கு எமது வாழ்த்துக்களையும் வேண்டுதல்களையும் இக்கட்டுரை மூலமாக முன்வைப்பதில் எழுதும் இக்கைகள் பெருமை கொள்கின்றன. இந்தியாவின் தமிழ்நாட்டில் திருநெல்வேலி என்னுமிடத்தில் பிறந்தவர் நடராஜன். யாழ்ப்பாணத்தில் இந்திய துணைத்தூதரகம் அமைக்கப்பட்ட போது முதலாவதாக இலங்கைக்கான துணைத் தூதராகப் பொறுப்பேற்றவர் மகாலிங்கம். எமது மக்களுக்காக அயராது உழைத்த இப்பெருந்தகையின் மூன்றாண்டு காலம் முடிவடைந்தவுடன் 2015 ஆம் ஆண்டு இந்தப் பொறுப்புக்களை நடராஜன் பொறுப்பேற்றுக் கொண்டார்.

எமது பகுதிக்கு பலர் வந்து போகின்றார்கள். ஆனால் குறிப்பிட்ட சிலரையே எமது மக்கள் தங்களது நினைவில் வைத்திருக்கின்றார்கள். அந்தளவிற்கு அவர்கள் எமது மக்களுடன் ஒன்றித்து மக்களோடு மக்களாக வாழ்ந்து அவர்களுக்கான பல நலத்திட்டங்களை செய்து மக்கள் வளமாக வாழ வழி செய்து கொடுத்திருக்கின்றார்கள். குறிப்பாக இந்தியாவிற்கு மேற்படிப்புக்காகவோ வணக்கத் தலங்களுக்கோ, சுற்றுலா செல்வதற்கோ இன்னும் பிறதேவைகளுக்கோ செல்வதற்கான விசாவினை வழங்குவதற்காக யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகம் பொறுப்பேற்றுக் கொண்ட காலத்திலிருந்து எமது மக்கள் சுலபமாகச் சென்றுவர ஆக்கபூர்வமாக பல உதவிகளை செய்து கொடுக்கும் தன்மையை பலரும் புகழ்ந்து பாராட்டுவர். இது இந்தியாவின் குறிப்பாக தமிழ்நாட்டை எமது மக்களுடன் இணைப்பதற்கான உறவுப் பாலத்தை உருவாக்கிய சிறந்த கைங்கரியம் என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது.

எமது தேசத்திற்கும் இந்தியாவுக்குமான உறவுப்பாலத்தை கட்டியெழுப்புவதில் மிகுந்த கரிசனையுடன் பங்காற்றியவர் என்னும் பெருமைக்கு நடராஜன் உரித்தானவராவார். எமது மொழி, சமயம், கலை, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்கள் இன்னும் வாழ்வாதாரம் என்பனவற்றை சரியாகப் புரிந்து கொண்டு மக்களுக்கான சேவையாற்றிய பண்பு சாலச் சிறந்தது. இந்திய தேசத்திலிருந்து குறிப்பாக தமிழ்நாட்டிலிருந்து புலமையாளர்களை, பேச்சாளர்களை அழைத்து வந்து இங்கு நிகழ்ச்சிகளை நடத்தி எமது மக்கள் இன்புற்றிருக்க மொழியை, கலையை வளர்க்க உறுதுணையாயிருந்தவர் என்றால் மிகையாகாது.

அதனுடன் இல்லாது இங்கிருந்து பேச்சாளர்களை தமிழ் நாட்டுக்கு அழைத்துச் சென்று அங்கு எம்மவர்கள் உரையை செவிமடுக்க வைத்த பெருந்தகை என்பதும் எமது மக்களுக்கான அனைத்து வாய்ப்புக்களையும் தேடித்தேடி அவர் செய்த நற்காரியங்கள் இலகுவில் மறக்கத்தக்கனவல்ல.

குறிப்பாக கல்விப்புலம் சார்ந்து கிடைக்கக் கூடிய கற்கைநெறிகள், அதற்குரிய புலமைப்பரிசில்கள் என்பனவற்றிற்கு எம்மவர்களை விண்ணப்பிக்கச் செய்வதற்கு அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகளை கண்கூடாகக் கண்டதனால் இதனை இங்கே எழுதத் தூண்டியது. ஆசியாவின் வல்லரசாக திகழும் இந்திய நாட்டின் துணைத் தூதுவராக பதவி நிலையிலிருந்தும் அவர் மக்கள் குறைகளை கேட்பதும் மக்களோடு மக்களாக துணை நின்றதும் நெஞ்சை விட்டகலாதவை. வருகின்ற வாய்ப்புக்களையெல்



லாம் தமது சட்ட திட்டங்களுக்கமைவாக உடனடியாக செயற்படுத்துவதில் இவர் கடமை வீரர் எனக் கூறலாம். குறிப்பாக அனைத்து இடங்களுக்கும் சென்று மக்களுடன் கலந்துரையாடி அவர்களுக்கான வசதி வாய்ப்புக்கள் மற்றும் குறைகளைத் தீர்த்து வைத்த நற்பண்பாளன் எனக் கூறினால் மிகையாகாது.

கல்வித் துறையில் பல வழிகளில் எமது தேசத்து மாணவர்கள் மேற்படிப்பு கல்வியை கற்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தவர் என்றால் மிகையாகாது. இந்தியாவில் குறிப்பாக தென் மாநிலங்களில் எமது மாணவர்கள் தமது கற்கையை மேற்கொள்வதற்கு அனுமதி பெறுவதிலிருந்து விசா வழங்குவது வரை தமது உதவியை நல்கிய பெருந்தகை என்பதற்கு மேலாக எமது கல்வியின் மேம்பாட்டுக்காக எம்மவர்களுள் ஒருவராக இருந்து உதவி நல்கிய பேராளன். அதிலும் மிகவும் சிறப்புக்குரிய அம்சமாக வட மாகாணத்தில் நடைபெற்ற அநேகமான நிகழ்வுகளில் குறிப்பாக குடியரசுத்தின உரையில் கூட தமிழில் உரையாற்றி மொழியின் சிறப்புக்கு அணி சேர்த்தவர் என்னும் பெருமைக்குரியவர். தமிழ் மொழியை வளர்ப்பதில் அவர் காட்டிய அக்கறையை அவரது பேச்சுக்களில் அவர் கொடுத்த முக்கியத்துவத்திலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். எமது கலை, கலாசாரத்திற்கு முன்னுரிமை கொடுத்ததுடன் அதற்கான முயற்சிகளில் முழு மூச்சாக நின்றுழைத்தவர் எனலாம். இவருடைய காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் பொது நூலகத்திற்கு அருகில் பெரியளவிலான கலாசார மண்டபம் உருவாக்கிக் கொண்டிருக்கின்றது. அதற்கு அடித்தளமிட்டவர்களில் ஒருவராக இவர் திகழ்கின்றார். எமது மக்களின் கலை, கலாசாரத்தை கட்டிக் காப்பாற்றவும் கட்டியெழுப்பவும் இந்திய நாட்டின் சிறந்த புலமையாளர்களை அழைத்து எமது மாணவர்கள் கற்பதற்கு வழிகாட்டியதும் இப் பெருந்தகையின் பெருமைகளுக்குள் அடங்கும்.

நடராஜனின் குணம், பண்பு, பணிவு, ஆற்றல், ஆளுமை என்பன வியப்புக்குரியன. சிறந்த வெளிநாட்டமைச்சு அதிகாரியாக பல நாடுகளில் பணிபுரிந்த அனுபவம் அவரின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் வெளித் தெரிகின்றது. உதவியென வருகின்றவர்களை அமரவைத்து அழைத்து அவர்கள் பிரச்சினைக்கு மாற்றுவழியும் கண்டுபிடித்து செயற்படுத்தும் விதத்தை அனைவரும் மெச்சுவதனையும் அறிய முடிந்தது. எளிமையான, சாந்தமான சுகானுபாவமுடைய இப்பெருந்தகைக்கு எமது பிரதேசம் அதுவும் யாழ்ப்பாணம் அவருக்கு உவப்பான பிரதேசமாக இருந்ததென்பதனை அறியும் போது நாமும் மிக மகிழ்ச்சியடைகின்றோம்.

நடராஜனின் இந்தச் சேவைக் காலம் சிறப்பானதாக, மகிழ்ச்சியாக நடந்து முடிந்திருக்கின்றது. ஆறு ஆண்டுகள் இலங்கைத்தீவில் பணியாற்றிய பெருமகன் என்னும் பெருமையையும் அவர் தனதாக்கிக் கொண்டுள்ளமை அவரின் விடாமுயற்சிக்கும் கடமையுணர்வுக்கும் கட்டியம் கூறி நிற்கின்றவையாகும். விமர்சனங்களையும் விமர்சிப்பவர்களையும் அவர் நண்பர்களாகவே மதித்த, மதிக்கும் தன்மை போற்றற்கரியது. தனது வேலையிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்த நடராஜனுக்கு பக்கபலமாக துணை நின்றவர் இல்லறத்தில் துணையாகிய சாந்தி நடராஜன். இருவருமாக இணைந்து பொதுவான நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்கும் தன்மை அனைவரையும் கவர்ந்திழுத்தது எனக் கூறலாம்.

இந்திய நாட்டின் அரசு அதிகாரியாக எமது பிரதேசத்தில் மக்களோடு மக்களாக வாழ்ந்து அவர்களுக்கான அனைத்து உதவிகளையும் தமது வரையறைக்குள் எட்டிய வரை செய்து காட்டிய இப் பெருமகனார் இடம் மாற்றலாகி சென்றாலும் எமக்கான உதவிகள் அனைத்தையும் எங்கிருந்தாலும் செய்வார் என்னும் எதிர்பார்ப்போடு அவரின் வாழ்க்கை வளம் பெறவும் செயற்பாடுகள் சிறக்கவும் இவ் வையகத்தே இன்புற்று இனிதே நீடூழி வாழ உங்கள் அனைவரினதும் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம். வாழ்க நின் அளப்பரிய சேவை, வளர்க உமது பணி, இவ்வுலகம் என்றும் உமது ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு உறுதுணையாயிருக்கும்.

# சிறுமியின் வீடு தேடிச் சென்று அளவளாவிய ஜனாதிபதி







(கொழும்பு)

அண்மையில் கவுடுல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நோக்கி வந்த சிறுமியொருவர் ஜனாதிபதியின் அரவணைப்பில் மழலை மொழி பேசி அவருடன் கொஞ்சிக் குலாவியதை அவதானிக்க முடிந்தது. ஜனாதிபதியை சந்திக்க வருகை தந்த நிதுஷ்யா சனாதி என்ற சிறுமி மெதரிகிரிய அமுனுகம பிரதேசத்தில் தனது பெற்றோருடன் வாழ்ந்து வருகிறாள். மெதிரிகிரிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வுகளில் பங்குபற்றிய ஜனாதிபதி இந்த சிறுமியின் வீட்டிற்கு சென்று அவளது நலன் விசாரித்ததுடன், மிகுந்த வேலைப் பளுவின் மத்தியிலும் மிகுந்த ஆவலோடு சிறுமியுடன் அளவளாவினார்.

அண்மையில் ஜனாதிபதி மெதிரிகிரிய, கவுடுல்ல பிரதேசத்திற்கு சென்றபோது குறித்த சிறுமி தனது தந்தையிடம் ஜனாதிபதியை பார்க்க செல்ல வேண்டுமென அடம்பிடித்து அவ்விடத்திற்கு சென்றபோதிலும் மேடையின் அருகில் செல்ல சிறுமிக்கு அனுமதி கிடைக்கவில்லை.


ஆயினும் திடீரென பொதுமக்களிடையே இருந்து ஜனாதிபதியை நோக்கி ஓடிவந்த அச்சிறுமியை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தடுக்க முயற்சித்த போதிலும் ஜனாதிபதி சிறுமியை தன்னிடம் வர அனுமதித்தார்.

மிகுந்த பாசத்தோடு ஜனாதிபதியின் அரவணைப்பில் மழலை மொழி பேசிய சிறுமி, அந்நிகழ்ச்சி முடிவடையும் வரையிலும் ஜனாதிபதி அருகிலேயே காணப்பட்டார்.

அந்த நினைவுகளுடன் நேற்று முன்தினம் அச்சிறுமியின் வீட்டுக்குச் சென்ற ஜனாதிபதி சிறுமியிடம் நலன் விசாரித்ததுடன் அந்த வீட்டில் காணப்பட்ட ஜனாதிபதி-அச்சிறுமியினதும் சந்திப்பு பற்றிய பத்திரிகை செய்திகளையும் தமது புகைப்படங்களையும் பார்வையிட்டார். (இ-7)

# சிறந்த சுகாதார சேவையை கட்டியெழுப்ப நடவடிக்கை

## ஜனாதிபதி உறுதி



(கொழும்பு)

சுகாதாரத்துறைக்கு தேவையான அனைத்து வசதிகளையும் வழங்கி சிறந்த சுகாதார சேவையை கட்டியெழுப்பு நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மெதிரிகிரிய வைத்தியசாலையில் நிலவிய பல்வேறு குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள, தாதியர் விடுதி, சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், மகப்பேற்று மருத்துவ நிலையம், சிறுநீரக நோய் நிவாரணப் பிரிவு ஆகியன நேற்று முன் தினம் பிற்பகல் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற் கண்டவாறு தெரிவித்தார்.

90 மில்லியன் ரூபா செலவில் இந்த புதிய நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது, சுகாதாரத் துறையில் செயற்படும் பணிக் குழாமினருக்குத் தேவையான வசதிகளை உயர்ந்த மட்டத்தில் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகக் குறிப்பிட்டார். சுகாதார சேவைக்கு தேவையான புதிய தொழில்நுட்ப உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஜப்பானின் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு தான் அண்மையில் மேற்கொள்ளவுள்ள ஜப்பானுக்கான விஜயத்தின்போது தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார். (இ-7)

# மேற்குலக-சர்வதேச சக்திகளின் ஆசிய பிராந்திய தலைவர் ரணில்

## ஜனாதிபதிக்கு அழுத்தங்களைக் கொடுத்து அதிகாரத்தில் நிலைக்கிறார்-திஸ்ஸ தகவல்

(கொழும்பு)

மேற்குலக நாடுகளின் கொள்கைகளைக் கொண்ட சர்வதேச சக்திகளின் ஆசிய பிராந்திய தலைவரான ரணில் விக்கிரமசிங்க, அந்தப் பலத்தின் மூலம் ஜனாதிபதிக்கு அழுத்தங்களைக் கொடுத்து, தொடர்ந்தும் அதிகாரத்தில் இருந்து வருவதாக லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

மேற்குலக நாடுகளின் அழுத்தங்கள் காரணமாகவே சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சும் பிரதமர் ரணிலுக்கு வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

பொரளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் திஸ்ஸ விதாரண இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய அரசாங்கத்தை ஆட்சியில் அமர்த்த 2015 ஆம் ஆண்டில் இருந்தே அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் சூழ்ச்சிகளில் ஈடுபட்டன.

2015 ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவையும், பொதுத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவையும் வெற்றி பெற செய்ய மேற்குலக நாடுகள் மிகப் பெரிய நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தன.

அந்த நடவடிக்கைகள் இன்னும் முடிவுக்கு வரவில்லை.



இதனால், ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியில் இருந்து நீக்க, மைத்திரிபால சிறிசேனவுக்கு சந்தர்ப்பத்தை வழங்குவதில்லை.

மேற்குலக சக்திகள் ரணில் விக்கிரமசிங்க ஊடாக தமது அதிகாரத்தை செயற்படுத்தி, புதிய லிபரல் வாதத்தை இலங்கைக்குள் புகுத்த முயற்சித்து வருகின்றன.

இந்த வேலைத்திட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பலவீனப்படுத்தப்பட்டுள்ளதாகவும் திஸ்ஸ விதாரண மேலும் தெரிவித்தார். (இ-7)

# எதிர்வரும் 8ம் திகதி முதல், தொடர் பணிப்புறக்கணிப்பு

(கொழும்பு)

அரச நில அளவையாளர்கள் சங்கத்தினர் எதிர்வரும் 8ஆம் திகதி முதல் தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட உள்ளதாக அறிவித்துள்ளனர்.

இலங்கையின் காணி அளவீட்டுப் பணிகளை அமெரிக்க நிறுவனமொன்றுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தே இந்தப் பணிப் புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட உள்ளதாக அந்தச் சங்கத்தின் தலைவர் துமிந்த உடுகொட தெரிவித்துள்ளார்.

குறித்த நடவடிக்கைக்கு எதிராக தற்போது உள்ளக ரீதியான தொழிற்சங்க நடவடிக்கையில் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் கடந்த புதன்கிழமை ஆரம்பித்த பணிப் புறக்கணிப்பு நேற்றும் தொடர்ந்தது.

தமது தொழிற்சங்க நடவடிக்கைக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தற்போதுவரை பதிலளிக்கவில்லை என பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் ஒன்றிணைந்த கூட்டணியின் தலைவர் ஹெட்வர்ட் மல்வத்தகே தெரிவித்துள்ளார். (இ-7)

# அரசியல் ஆலோசனை குறித்து

## இலங்கைக்கும் தாய்லாந்திற்கும் இடையே நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

இலங்கைக்கும் - தாய்லாந்துக்கும் இடையிலான அரசியல் ஆலோசனை செயற்பாட்டின் நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தை கொழும்பில் இடம்பெற்றது.

அரசியல், இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்புக்களை வலுப்படுத்துவது தொடர்பாகவும், மேம்படுத்துவது தொடர்பிலும் அர்ப்பணிப்பதாக இரண்டு நாடுகளின் பிரதிநிதிகளும் உறுதியளித்துள்ளனர்.

புரிந்துணர்வு ரீதியான ஒத்துழைப்புடன் விவசாயம், தொழில்நுட்பம், வர்த்தகம், முதலீடு, கலாசாரம் ஆகிய துறைகளில் அமுல்படுத்தப்பட்டுள்ள வேலைத் திட்டங்கள் பற்றியும் இதன் போது மீளாய்வு செய்யப்பட்டது.

இலங்கைக் குழுவின் தலைவராக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பிரசாத் காரியவசம் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 10 இலட்சம் ரூபா கடன்

## தற்கொலை செய்ய கொண்டு சென்ற கைக்குண்டே பேருந்தில் வெடித்தது

## இராணுவச் சிப்பாய் வாக்குமூலம்

(கொழும்பு)

தற்கொலை செய்துகொள்வதற்காக எடுத்துச் சென்றபோதே குண்டு தவறி வெடித்ததாக தியத்தலாவ - கஹகொல்ல பகுதியில் பேருந்தில் வெடித்த கைக்குண்டை எடுத்துச் சென்றதாக கூறப்படும் கஹகொல்ல இராணுவ முகாமில் சேவையாற்றும் சார்ஜண்ட் மேஜர் தர இராணுவ சிப்பாய் பொலிஸாருக்கு வாக்குமூலமளித்துள்ளார்.



தியத்தலாவ வைத்தியசாலையில் பொலிஸ் பாதுகாப்பில் குறித்த சார்ஜண்ட் சிகிச்சை பெற்றுவரும் நிலையிலேயே அவரிடம் விசேட பொலிஸ் குழு, வைத்தியசாலையில் வைத்து முன்னெடுத்த விசாரணைகளில் அவர் இதனை வெளிப்படுத்தியுள்ளதாக பொலிஸ் தலைமையகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தான் பலரிடம் 10 இலட்சம் ரூபாவுக்கும் மேல் கடன் வாங்கியுள்ளதாகவும், அந்த கடன் தொகையை அவர்கள் திரும்ப கேட்கும்போது தன்னால் அதனை திருப்பிக் கொடுக்க முடியாத சூழல் நிலவிய நிலையிலேயே தற்கொலை தொடர்பில் தீர்மானமெடுத்து குண்டை முகாமுக்கு எடுத்துச் சென்றதாகவும், முகாமில் வைத்து தற்கொலை செய்துகொள்வதே திட்டமாக இருந்தபோதும் குண்டு இடையில் தவறுதலாக பேருந்தில் வெடித்து விட்டதாகவும் அவரின் வாக்கு மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் தான் வடபகுதியில் சேவையாற்றும்போது குறித்த கைக்குண்டு தனக்கு கிடைக்கப் பெற்றதாகவும், அது நல்ல நிலையில் இருக்கவில்லை எனவும் அவர் வாக்கு மூலத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

குறித்த சார்ஜண்ட் மேஜர், இயந்திர பொறியியல் படையணியின் கஹகொல்ல முகாமின் ஆயுத களஞ்சியத்துக்கு பொறுப்பாக செயற்பட்டவர் எனவும் அவர் விடுமுறைக்காக வீடு சென்று குறித்த தினம் கஹகொல்ல முகாமுக்கு திரும்பிக் கொண்டிருக்கும் போதே குண்டை உடன் எடுத்து வந்துள்ளமையும் இதுவரையிலான பொலிஸ் விசாரணைகளில் உறுதியாகியுள்ளது.

அதன்படி பேருந்தில் வெடித்த குண்டு தியத்தலாவ - கஹகொல்ல முகாமுக்குள் எடுத்துச் செல்லும் நோக்கத்துடனேயே குறித்த சார்ஜண்ட் மேஜரினால் உடன் கொண்டு செல்லப்பட்டுள்ளமை உறுதியாகியுள்ளது.

மாத்தளையைச் சேர்ந்த குறித்த சார்ஜண்ட் மேஜர் தர சிப்பாய் விடுமுறைக்கு சென்றுவிட்டு மீள முகாமுக்கு யாழில் இருந்து தியத்தலாவ நோக்கி பயணிக்கும் பேருந்தில் வந்துள்ளதுடன், கண்டியில் வைத்து அன்றைய தினம் அதிகாலை 1.05 மணிக்கு அவர் பேருந்தில் ஏறியுள்ளார்.

பேருந்து மாற்றப்பட்டு தியத்தலாவை நோக்கி சென்ற மற்றைய பேருந்துக்கு பண்டாரவளையில் வைத்து ஏற்றப்பட்டுள்ளார். இந்த நிலையில் அந்த பேருந்துச் சாரதி இருக்கை பக்கமாக 3 ஆவது நிரலில் 3 ஆசனம் கொண்ட தொகுதியில் அவர் நடுவில் அமர்ந்துள்ளார்.

அவரது வலது புறத்தில் கஹகொல்ல முகாமில் சேவையாற்றும் இலிகிதர் ஒருவரும் இடது புறத்தில் இராணுவ பொலிஸ் பிரிவின் உத்தியோகத்தர் ஒருவரும் இருந்துள்ளனர்.

யாழ். பண்டாரவளை பேருந்தில் கண்காணிப்பு கமரா இருந்த நிலையில் அதன் காணொலிகளை சோதித்துள்ள பொலிஸார் குறித்த சார்ஜண்ட் மேஜர் ஒருவகையான பதற்றத்துடனேயே பேருந்தில் பயணித்ததை அவதானித்துள்ளனர்.


அத்துடன் எரிந்த பேருந்திலும் கண்காணிப்பு கமரா இருந்துள்ள நிலையில் குண்டு வெடிப்பு தொடர்பில் உறுதி செய்ய அந்த காணொலிகளை மீளப்பெறும் பொருட்டு நீதிமன்ற அனுமதியுடன் அது தொடர்பிலான கருவிகள் மொரட்டுவை பல்கலைக் கழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந் நிலையில் கஹகொல்ல முகாம் அருகே இறங்கும் நோக்கத்துடன் இலிகிதருடன் குறித்த சார்ஜண்ட் மேஜர் தயாராகியுள்ளார்.

இதன்போது அவரது தொலைபேசி கீழே விழுந்துள்ளதுடன் அதனை எடுக்க முற்பட்டபோது மடியில் இருந்த பையில் இருந்தே குண்டு வெடித்துள்ளதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. (இ-7)

# பாரதம்

## இயேசு கிறிஸ்து மனித குலங்களின் போதகர் மகாத்மா காந்தி எழுதிய கடிதம் ஏலத்தில் வருகிறது



(வோஷிங்டன்)

மகாத்மா காந்தி, சபர்மதி ஆசிரமத்தில் இருந்து அமெரிக்காவை சேர்ந்த கிறிஸ்தவர் மில்டன் நியூ பெர்ரி பிராண்ட்சுக்கு எழுதிய கடிதத்தில் இயேசு கிறிஸ்துவைப் பற்றி எழுதி உள்ளார். இந்த கடிதம் தற்போது ஏலத்திற்கு வருகிறது.

மகாத்மா காந்தி, சபர்மதி ஆசிரமத்தில் இருந்து அமெரிக்காவை சேர்ந்த கிறிஸ்தவர் மில்டன் நியூ பெர்ரி பிராண்ட்சுக்கு ஒரு கடிதம் எழுதினார். தட்டச்சு செய்து, கையெழுத்திட்ட இந்தக் கடிதம் 1926ஆம் ஆண்டு, ஏப்ரல் 6ஆம்திகதி எழுதியது ஆகும்.

இந்தக் கடிதத்தில் மகாத்மா காந்தி, இயேசு கிறிஸ்துவைப் பற்றி எழுதி உள்ளார்.

குறிப்பாக, இயேசு கிறிஸ்து மனித குலத்தின் மிகப்பெரிய போதகர்களில் ஒருவராக திகழ்ந்தார் என்று குறிப்பிட்டுள்ளார். அமெரிக்காவில் பென்சில்வேனியா மாகாணத்தில் உள்ள 'ராப் கலெக்ஷன்' என்று அழைக்கப்படுகிற வரலாற்று சிறப்பு வாய்ந்த கையெழுத்து மற்றும் ஆவன சேகரிப்பு நிறுவனத்திடம் இந்தக் கடிதம் தற்போது உள்ளது.

இந்தக் கடிதம் ஏலம் விடப்படுகிறது. இது 50 ஆயிரம் டொலருக்கு (சுமார் ரூ.32 இலட்சம்) விற்பனை ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பாக 'ராப் கலெக்ஷன்' நிறுவனத்தின் நாதன் ராப் கூறும்போது, "உலகின் மிகப்பெரிய போதகர்களில் ஒருவர் இயேசு கிறிஸ்து என்ற காந்தியின் நம்பிக்கை, சக மனிதர்களுடன் ஒத்துழைப்பதற்கான அவரது முயற்சிகளை காட்டுகிறது என்று குறிப்பிட்டு உள்ளார். (7)

## கிரானைட் நிறுவனத்தின் ரூ.38 கோடி சொத்துக்கள் முடக்கம் மத்திய அமுலாக்கத்துறை அதிரடி நடவடிக்கை



(டில்லி)

மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற கிரானைட் முறைகேடுகள் தொடர்பாக கிரானைட் நிறுவனத்தின் ரூ.38 கோடி சொத்துகளை அமுலாக்கத்துறை முடக்கி உள்ளது.

மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற கிரானைட் முறைகேடுகள் தொடர்பாக மத்திய அமுலாக்கத்துறை விசாரணை நடத்தி வருகிறது. அதில் பெரியகருப்பன், பாலகிருஷ்ணன், சுப்பையா ஆகியோர் நடத்தி வந்த குமார் கிரானைட் மற்றும் குமார் எக்ஸ்போர்ட்ஸ் ஆகிய நிறுவனங்கள் மீது பொலிஸார் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின்படி, அமுலாக்கத்துறை விசாரணை நடத்தி வந்தது.


இந்த 2 நிறுவனங்களும் அரசு புறம்போக்கு மற்றும் தனியார் இடங்களில் அனுமதியில்லாமல் கிரானைட் கற்களை வெட்டி எடுத்தது தெரியவந்தது.

மேலும் போக்குவரத்திற்காக போலியான ஆவணங்கள் தயாரித்து கிரானைட் கற்களை இடமாற்றம் செய்துள்ளனர். அதுமட்டுமன்றி உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் முறைகேடாக விற்பனை செய்துள்ளனர்.

இதன்மூலம் கிடைத்த வருமானத்தில் அதிகளவில் அசையாச் சொத்துகளை வாங்கியுள்ளனர்.

எனவே பண மோசடி தடுப்பு சட்டத்தின் கீழ் அந்த நிறுவனம் மற்றும் அந்த நிறுவன உரிமையாளர்கள் மற்றும் அவர்களது உறவினர்களின் 158 அசையா சொத்துகள் முடக்கப்பட்டுள்ளன. இதன் மதிப்பு ரூ.37 கோடியே 79 இலட்சம் ஆகும். (7)

## நெடுஞ்சாலைத் துறையின் டெண்டரில் முறைகேடு வெற்றிவேல், தங்க தமிழ்ச்செல்வன் மீது வழக்கு



(சென்னை)

டிடிவி தினகரன் ஆதரவாளர்கள் வெற்றிவேல், தங்க தமிழ்ச்செல்வன் இருவர் மீதும் கோட்டை பொலிஸ் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

டிடிவி ஆதரவாளர்களான வெற்றிவேல், தங்க தமிழ்ச்செல்வன் இருவரும் தலைமைச் செயலகத்திற்கு சென்றனர்.

நெடுஞ்சாலைத் துறையின் டெண்டரில் முறைகேடு நடந்ததாக கூறி, அதிகாரிகளிடம் புகார் அளிக்கச் சென்றனர். ஆனால் அவர்களை உள்ளே செல்ல பொலிஸார் அனுமதிக்கவில்லை.

இதையடுத்து அவர்கள் பொலிஸாருடன் வாக்குவாதம் செய்தனர். தங்கள் கோரிக்கை குறித்து, அதிகாரிகளிடம் பேச வேண்டும் என்று வலியுறுத்தினர். ஆனால் அவர்களை உள்ளே செல்ல விடாமல் பொலிஸார் தடுத்து நிறுத்தினர். இதனால் அங்கு பரபரப்பான சூழ்நிலை நிலவியது.

பின்னர் இதுபற்றி வெற்றிவேல், தங்க தமிழ்ச்செல்வன் இருவரும் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர். அப்போது, நெடுஞ்சாலைத் துறை ஒப்பந்தங்கள் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியின் உறவினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

இதில் முறைகேடு நடந்திருப்பதால் அரசுக்கு பல கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருப்பதாகவும், இது தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை நடத்த வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

இதற்கிடையே, வெற்றிவேல் மற்றும் தங்க தமிழ்ச்செல்வன் மீது, கோட்டை பொலிஸ் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதிகாரிகளை பணி செய்ய விடாமல் தடுத்தது உள்ளிட்ட 2 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. (7)

# ஐரோப்பாவில் ப

# 55 பேர் உயி

## விமான, புகையிரத சே



(பாரிஸ்)

ஐரோப்பாவில் நிலவி வரும் பனிப்பொழிவு மற்றும் பனிப்புயலின் தாக்கத்தினால் 55 இற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். விமான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாவின் பெரும்பாலான பகுதிகளில் கடும் குளிர் நிலவி வருகிறது. பனிப்புயல் மற்றும் கடும் பனிப்பொழிவால் அனைத்து வீதிகள், புகையிரத சேவைகள் மற்றும் பாடசாலைகள் மூடப்பட்டன.

மேலும் நூற்றுக்கணக்கணக்கான விமான சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. மத்திய தரைக்கடலின் தெற்கு பகுதி வரை இந்த வழக்கத்திற்கு மாறான குளிர் உணரப்பட்டது.

கடும் குளிரால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 55 ஆக உயர்ந்துள்ளது. போலந்தில் மட்டும் 21

## வோஷிங்டன் வெள்ளை மாளிகையின் தகவல் தொடர்பு இயக்குநர் பதவி விலகல்



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதியின் வோஷிங்டன் வெள்ளை மாளிகையில் தகவல் தொடர்பு இயக்குநராக பணியாற்றி வந்த பெண் ஹோப் கிக்ஸ் திடீரென பதவி விலகியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியின் வோஷிங்டன் வெள்ளை மாளிகையில் தகவல் தொடர்பு இயக்குனராக பணியாற்றி வந்த பெண், ஹோப் கிக்ஸ் (வயது 29). மூத்த அதிகாரியான இவர், ஜனாதிபதி ட்ரம்பிடம் நீண்ட காலமாக ஆலோசகராக பணியாற்றிய அனுபவம் மிக்கவர். இவர் திடீரென பதவி விலகியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், என் நன்றியை ஜனாதிபதி ட்ரம்புக்கு தெரிவிப்பதற்கு வார்த்தை இல்லை. இந்த நாட்டை சிறப்பாக தொடர்ந்து வழிநடத்திச்செல்வதற்கு ட்ரம்புக்கும், அவரது நிர்வாகத்துக்கும் எனது வாழ்த்துக்கள் என கூறியுள்ளார்.

வெள்ளை மாளிகையில் தகவல் தொடர்பு இயக்குநர் பதவியில் இருந்து இவர் விலகி இருப்பது, ஜனாதிபதி ட்ரம்புக்கு பின்னடைவாக கருதப்படுகிறது.

அமெரிக்காவில் 2016ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில், ரஷ்யாவின் தலையீடு இருந்ததாக எழுந்துள்ள குற்றச்சாட்டு பற்றி நாடாளுமன்ற பிரதிநிதித்துவ சபையின் உளவுக்குழு விசாரணை நடத்தி வருகிறது.

அந்த குழுவின் முன் ஹோப் கிக்ஸ் ஆஜராகி சாட்சியம் அளித்து உள்ள நிலையில், பதவி விலகி இருப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இருப்பினும் அவருக்கு ஜனாதிபதி ட்ரம்ப் புகழாரம் சூட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறும்போது, அவர் மிகவும் சாதுரியமானவர். உண்மையிலேயே சிறப்பானவர். அவரை நான் ரொம்பவும் தவற விடுகிறேன். இருப்பினும் எதிர்காலத்தில் நாங்கள் இணைந்து பணியாற்றுவோம்" என கூறியுள்ளார்.

முன்னாள் மொடல் அழகியான இவர், அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ட்ரம்ப் போட்டியிடுவதற்கு முன்பிருந்தே அவரிடம் பணியாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# வெளிநாடு

## பனிப்புயல் ... யிரிழப்பு ... சேவைகள் பாதிப்பு

பேர் உயிரிழந்துள்ளனர்.

ஸ்லோவேகியாவில் 7 பேர் இறந்துள்ளனர். ஏழைகள், வீடற்றவர்கள் மற்றும் குடியேறிகள் இந்த மிகப் பெரிய பனிப்புயலால் பாதிக்கப்படுவார்கள் எனவும், முதியவர்கள், குழந்தைகள், நீண்ட காலமாக நோயால் பாதிக்கப்பட்டு வருபவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் மன நிலை குறைபாடு உள்ளவர்கள் குளிர் தொடர்பான உபாதைகளுக்கு உள்ளாகும் ஆபத்து அதிகமாக உள்ளதாக உலக சுகாதார நிறுவனம் அறிக்கை விடுத்துள்ளது.

கப்படவில்லை.

ஒருபுறம் பனிப்பொழிவினால் பொதுவாழ்க்கை முடங்கியிருந்தாலும், சில பகுதிகளில் பொதுமக்கள் பனிச்சூழலை உற்சாகமாக அனுபவித்து வருகின்றனர். சில பகுதிகளில் பனிச் சறுக்கு சக்கரங்களை அணிந்து கொண்டு ஸ்கேட்டிங் செய்வதையும் காண முடிகிறது. ஆனால், தண்ணீர் சரியாக உறையாத பகுதிகளில் இவ்வாறு பனிச்சறுக்கல் செய்வது



பனிப்புயல் காரணமாக அயர்லாந்தின் டப்ளின் விமான நிலையத்தில் அனைத்து விமானங்களும் இரத்து செய்யப்பட்டன. இதேபோல் ஆம்ஸ்டர்டாம் ஷிபோல் விமான நிலையத்திலும் பல்வேறு விமானங்கள் இயக்க ஆபத்தை ஏற்படுத்தலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

அடுத்த சில தினங்களில் வெப்பநிலை சிறிது அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (7)

## பொலிஸாரின் தேடுதலில் 10 நக்சல்கள் சுட்டுக்கொலை - சத்தீஸ்கரில் சம்பவம்



(ராய்ப்பூர்)

சத்தீஸ்கர் மாநிலத்தில் பாதுகாப்பு படையினர் நடத்திய தேடுதல் வேட்டையில் 10 நக்சல்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சத்தீஸ்கர் மாநிலத்தின் பீஜப்பூர் மாவட்டத்தில் புஜாரி கங்கர் பகுதியில் உள்ள வனப்பகுதியில் நக்சல்கள் சிலர் பதுங்கியுள்ளதாக பாதுகாப்பு படையினருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து, தெலுங்கானா பொலிஸாரும், சத்தீஸ்கர் பொலிஸாரும் இணைந்து அந்த பகுதியில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அப்போது அங்கு பதுங்கியிருந்த நக்சல்கள் பொலிஸாரை கண்டதும் தாக்குதல் நடத்தினர். இதையடுத்து, பொலிஸார் நடத்திய துப்பாக்கி சூட்டில் 10 நக்சல்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும், இந்த சண்டையில் பொலிஸார் ஒருவர் காயம் அடைந்தார். தொடர்ந்து அந்த பகுதியில் தேடுதல் வேட்டை நடந்து வருகிறது என அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (7)

## துருக்கி இராணுவத்தினர் - குர்திஷ் போராளிகள் இடையே மோதல்; 8 இராணுவ வீரர்கள் பலி



(அங்காரா)

சிரியாவில் இராணுவத்துக்கும் குர்திஷ் போராட்டக்காரர்களுக்கும் இடையே நடந்த மோதலில் துருக்கியைச் சேர்ந்த எட்டு இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர்.

சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்துக்கு எதிராக ஆயுதம் தாங்கி போரில் ஈடுபட்டு வரும், கிளர்ச்சிக் குழுக்கள், இராணுவத்தின் ஒரு பிரிவு ஆகியவற்றை ஒடுக்கும் பணியில் ஜனாதிபதி ஆதரவு படையினர் கடந்த 2012ஆம் ஆண்டு முதல் ஈடுபட்டு வருகின்றனர்.


6 ஆண்டுகளாக நடந்து வரும் உள்நாட்டுச் சண்டையில் இலட்சக்கணக்கான மக்கள் இதுவரை பலியாகியுள்ளனர்.

கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக அமெரிக்காவும், ஜனாதிபதிக்கு ஆதரவாக ரஷ்ய படைகளும் சண்டையிட்டு வந்த நிலையில் கிளர்ச்சிக் குழுக்களுக்கு ஆயுதங்கள் வழங்குவதை அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ. நிறுத்தியது. இதனால், அரசுப்படையினரின் கை ஓங்கிய நிலையில், கடந்த 18ஆம் திகதி முதல் ஜனாதிபதி ஆதரவு படை - ரஷ்யா இணைந்து கிழக்கு கூட்டா பகுதியில் ஆவேச தாக்குதல்கள் நடத்தி வருகிறது.

இந்நிலையில், சிரியாவின் ஆப்ரின் பகுதியில் துருக்கி இராணுவத்துக்கும், குர்திஷ் போராளிகளுக்கும் இடையே நேற்று முன்தினம் மோதல் ஏற்பட்டுள்ளது. இந்த மோதலில் எட்டு இராணுவ வீரர்கள் உயிரிழந்ததாக துருக்கி இராணுவம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 13 பேர் காயமடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (7)

## பயங்கரவாத தாக்குதலுக்கு உதவிய அவுஸ்திரேலியருக்கு 44 ஆண்டுகள் சிறை

### உச்ச நீதிமன்றம் தீர்ப்பு



(சிட்னி)

பயங்கரவாதத்துக்கு துணை போனதாக தொடரப்பட்ட வழக்கில் அவுஸ்திரேலியருக்கு 44 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பு அளித்தது.

அவுஸ்திரேலியாவில் சிட்னி புகையிரத நிலையத்துக்கு வெளியே 2015-ம் ஆண்டு ஒரு பயங்கரவாத தாக்குதல் சம்பவம் நடந்தது. இதில் கர்ட்டிஸ் செங் (வயது 58) என்ற பொலிஸ் ஊழியர் கொல்லப்பட்டார். இந்த தாக்குதலை நடத்தியவர் ஒரு 15 வயது சிறுவன்.

சிட்னியில் உள்ள மசூதி ஒன்றில் 2015-ம் ஆண்டு ஒக்டோபர் 2ஆம் திகதி அந்த சிறுவனை சந்தித்து, பயங்கரவாத தாக்குதல் நடத்துவதற்கு கைத்துப்பாக்கி வழங்கியவர், அவுஸ்திரேலியாவை சேர்ந்த ராபன் அலாவ் (வயது 20) ஆவார்.

இதுதொடர்பாக ராபன் அலாவ் மீது அவுஸ்திரேலிய பொலிஸார் வழக்கு பதிவு செய்தனர். இந்த வழக்கை நியூசவுத் வேல்ஸ் உச்ச நீதிமன்றம் விசாரித்தது.

விசாரணையின்போது ராபன் அலாவ், தன் மீது சுமத்தப்பட்ட பயங்கரவாத குற்றச்சாட்டுகளை ஒப்புக் கொண்டார்.

அதைத் தொடர்ந்து அவர் குற்றவாளி என்று கண்டு கொண்ட உச்ச நீதிமன்றம் அவருக்கு 44 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

பயங்கரவாதத்துக்கு துணை போனதாக தொடரப்பட்ட வழக்கில் அவுஸ்திரேலியர் ஒருவர் தண்டிக்கப்பட்டு இருப்பது இதுவே முதல் முறை என தகவல்கள் கூறுகின்றன.

44 ஆண்டுகள் சிறைவாசத்தின்போது, முதல் 33 ஆண்டுகள் அவருக்கு பரோல் வழங்கப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (7)

## ஜனாதிபதித் தேர்தல் பிற்போடல் தேசிய தேர்தல்கள் சபை அறிவிப்பு



(கராகஸ்)

வெனிசுவெலா ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் மே மாதம் 20 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடி மற்றும் உலகளாவிய தடைகளையும் மீறி மறு தேர்தலை நடத்த வேண்டும் என்ற ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவின் முயற்சிகளுக்கு எதிர்க்கட்சிகள் பலத்த எதிர்ப்பை வெளியிட்டு வருகின்ற நிலையில் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது.

நிக்கோலஸ் மதுரோ அரசாங்கம் மற்றும் சில எதிர்க்கட்சிகளுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையை தொடர்ந்து எதிர்வரும் ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி திட்டமிடப்பட்டிருந்த வாக்கெடுப்பு மே மாதத்திற்கு பிற்போடப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் சபை அறிவித்துள்ளது.

அதன்படி மே 20 ஆம் திகதி உள்ளூர் மற்றும் மாநில சட்டசபை வாக்கெடுப்புக்களும் நடைபெறும் என்று தேர்தல்கள் சபை அறிவித்துள்ளது.

மறு தேர்தல் சர்வாதிகாரத்தை சட்டபூர்வமாக்குவதற்கான நோக்கம் கொண்டது என்பதே எதிர்க்கட்சிகள் தேர்தலை புறக்கணிப்பதற்கு காரணமாக அமைந்துள்ளது. இதனை எதிர்க்கட்சிகளே வெளிப்படையாக தெரிவித்துள்ளன.

குறிப்பாக மதுரோவின் இரண்டு வலுவான எதிர்ப்பாளர்களான லியோபோல்டோ லோபஸ் மற்றும் ஹென்ரிக்ஸ் கப்ரில்ஸ் ஆகியோரின் கருத்தாக அமைந்துள்ளது.

அதுமட்டுமன்றி, யேற்கத்தேய நாடுகள் மற்றும் டசின் கணக்கான லத்தீன் அமெரிக்க அயலவர்கள் வாக்கெடுப்புக்கான நியாயமற்ற நிலைமைகளில் மதுரோ அரசாங்கத்தை கண்டனம் செய்துள்ளனர். (7)

## அசர்பைஜான் போதை மறுவாழ்வு மையத்தில் தீ 30 பேர் உடல் கருகி உயிரிழப்பு

(பாகு)

அசர்பைஜான் தலைநகர் பாகுவில் செயற்பட்டு வரும் போதை மறுவாழ்வு மையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 30 பேர் வரை பலியாகினர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும், மீட்புப் படையினரும் அங்கு சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

இந்தத் தீவிபத்தில் அங்கு தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்த 30-க்கும் மேற்பட்டோர் தீயில் சிக்கி



அசர்பைஜான் நாட்டு தலைநகராக உள்ளது பாகு. இந்த நகரில் போதை மறுவாழ்வு மையம் ஒன்று செயற்பட்டு வருகிறது. அங்கு ஏராளமானோர் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், நேற்றுக் காலை அந்த போதை மறுவாழ்வு மையத்தில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. தகவலறிந்து தீயணைப்பு படையினர் அங்கு விரைந்து சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

உடல் கருகி பரிதாபமாக பலியாகினர். மேலும், பலர் படுகாயம் அடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலைகளில் சேர்த்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என மீட்புப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த மையத்தில் தீ விபத்து ஏற்பட்டது குறித்தும் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (7)

## பிரிகேடியர் பிரியங்க விவகாரம்

# இலங்கையின் விசாரணை முடியும்வரை மேலதிக நடவடிக்கை இல்லை- பிரிட்டன்



(கொழும்பு)

பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிரான விசாரணைகளை இலங்கை அரசாங்கம் முடிக்கும் வரை, பிரித்தானியா மேலதிக நடவடிக்கைகளை எடுக்காது என்று கொழும்பில் உள்ள பிரித்தானிய தூதரகம் தெரிவித்துள்ளது.

லண்டனிலுள்ள இலங்கை தூதரகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்திய புலம்பெயர் தமிழர்களை நோக்கி, கழுத்தை அறுத்து விடுவேன் என்பது போல, பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோ, அச்சுறுத்தியிருந்தார்.

இந்தச் சம்பவம் குறித்த சர்ச்சைகளை அடுத்து, பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ கடந்த மாதம் கொழும்புக்குத் திருப்பி அழைக்கப்பட்டார்.

எனினும், அவரது மனைவி, பிள்ளைகள் லண்டனில் தங்கியுள்ள நிலையில், அவர்களையும் திருப்பி அனுப்ப வேண்டும் என்று உலகத் தமிழர் பேரவை கோரியிருந்தது.

இதுகுறித்து கொழும்பில் உள்ள பிரித்தானியத் தூதரகத்திடம், கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பியிருந்தது.

அதற்கு பிரித்தானிய தூதரகம் அனுப்பியுள்ள பதிலில், "லண்டனில் உள்ள இலங்கை தூதரகத்துக்கு வெளியே நடந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களுடன் இலங்கை அரசாங்கம் தற்போது கலந்துரையாடல்களை நடத்தி வருகிறது.

இலங்கை அரசாங்கம் இந்த விசாரணைகளை முடிக்கும் வரை, இதுபற்றி பிரித்தானியா கருத்து வெளியிடுவதோ, மேலதிக நடவடிக்கை எடுப்பதோ பொருத்தமானது அல்ல" என்று விளக்கமளிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# கூட்டு எதிரணிக்குச் செல்கிறார் பிரதி அமைச்சர் புஞ்சிநிலமே



(கொழும்பு)

கூட்டு அரசாங்கத்திலிருந்து விலகி, எதிரணியில் அமர்ந்து கொள்வதற்கு, பொது முகாமைத்துவ பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் அனுமதி கோரியுள்ளார்.

தனது நிலைப்பாட்டை ஜனாதிபதிக்கு விளக்கிக் கூறியுள்ளதாகவும், எனினும், ஒரு மாதம் பொறுத்திருக்கும் படி அவர் கேட்டுக் கொண்டதாகவும், புஞ்சி நிலமே தெரிவித்துள்ளார்.

தமது தொகுதி மக்களின் விருப்பத்துக்கேற்ப செயற்பட வேண்டியுள்ளது என்றும், அவர் தெரிவித்தார்.

சுசந்த புஞ்சி நிலமே திருகோணமலை மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நாட்டில் ஜனாதிபதி ஒருவர் இருக்கிறாரா? கிண்டலடிக்கிறார் கீதா குமாரசிங்க

(கொழும்பு)

நாட்டில் ஜனாதிபதி ஒருவர் இருக்கின்றாரா? என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

சிங்களப் பத்திரிகையொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் ஜனாதிபதி பற்றி பேசுவதற்கு சோம்பலாக உள்ளது. நாட்டில் தற்போது ஜனாதிபதி இருக்கின்றாரா? என்பதே தெரியவில்லை. முடிந்தால் இந்த அரசாங்கம் பொதுத் தேர்தலை நடத்திக் காண்பிக்கட்டும்.

நாட்டில் எந்தவொரு அபிவிருத்தியையும் பார்க்க முடியவில்லை. மாறாக நாடு நாளுக்கு நாள் அதள பாதாளத்திற்கு செல்கின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

பலர் என்னுடைய குடியுரிமை பற்றி பேசினாலும், நான் எனது வெளிநாட்டு குடியுரிமையை இரத்து செய்து கொண்டுள்ளேன்.

கள்வர்களை பிடிக்கும் பொறுப்பு பிரதமரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பிரதமருக்கு சட்டம் ஒழுங்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது.



இதன் மூலம் மத்திய வங்கி பிணை முறி மோசடி குறித்த குற்றச்சாட்டுக்கள் வெளிக்கொணரப்படாது. நாட்டின் சட்டம் ஒழுங்குத் துறைக்கு கடவுளின் துணை மட்டுமே.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் சரியான பாடத்தை அரசாங்கத்திற்கு புகட்டியிருந்தனர். எதிர்காலத்திலும் மக்கள் சரியான பாடங்களை இந்த அரசாங்கத்திற்கு புகட்டுவார்கள் என கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார். (இ-7)

# குறைந்தபட்ச அதிகாரத்தைப் பயன்படுத்துவது மயங்கி விழும்வரை தாக்குவதா? முஸம்மில் கேள்வி


(கொழும்பு)

குறைந்தபட்ச அதிகாரத்தைப் பயன்படுத்துவது என்பது மயங்கி விழும் வரையில் தாக்குதல் நடத்துவதா என தேசிய சுதந்திர முன்னணியின் உறுப்பினர் முஸம்மில் கேள்வியெழுப்பியுள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

சட்டம் ஒழுங்கு அமைச்சர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறைந்தபட்ச அதிகாரத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றி நிர்ணயம் செய்துள்ளார்.

ராஜரட்ட விவசாயிகளின் தலைகள் உடையும் வரை தாக்குதல் நடத்தி அவர்கள்



மயங்கி விழும் வரையிலேயே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சூடு நடத்தி மக்கள் கீழே விழச் செய்யப்பட்டுள்ளனர். பொலிஸார் மட்டுமன்றி தலைக் கவசங்களுடன் இருந்த காடையர்களும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

மேலும், விவசாயிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

# தாம் தூம் மனிதர்கள்

நடந்து முடிந்த தீபாவளிப் பண்டிகையின் போது ஒரு விடயம் என்னை அதிகமாக ஈர்த்தது. பண்டிகையை நல்லபடியாகக் கொண்டாட வேண்டும் என்று சிலபேர் அல்லாடிய விதம் இருக்கிறதே, அதை எழுத்தில் வடிக்க முடியாது.

நாளைய பொழுது எப்படி என்ற கேள்விக் குறியுடன் வாழ்க்கை நடத்துகிறவர்கள் கூட, எப்படியாவது ஆயிரம் ரூபாய் புரட்டி (?) கடனை உடனை வாங்கி அதை இதை அடகு வைத்து பண்டிகையை நல்லபடியாகக் கொண்டாடி விட வேண்டும் என்று துடியாய்த் துடித்ததைப பார்த்தேன். உள்ளுக்குள் எல்லாம் உளுத்துப் போய்க் கிடக்கிறபோது ஊர்ப் பெருமை மூட்டும் என்ன வேண்டிக்கிடக்கிறது?

சரி; பண்டிகையை நன்றாகக் கொண்டாட வேண்டியது தான், இந்த நினைப்பு கடைசி நிமிடத்தில் வருவானேன்?

மழைக்காலம் வருகிறதே என்று சிற்றறிவு படைத்த எறும்பு கூட மேட்டு நிலத்துப் புற்றில் உணவைச் சேர்த்து வைக்கிறபோது மனிதனுக்கு எங்கு போயிற்று ஆறாவது அறிவு?

நாளைக்குப் பண்டிகை. கையிலே பைசா இல்லை என்று கண் கலங்கினால் பணம் வானத்திலிருந்து கொட்டுமா?

எதிர் வீட்டுக்காரி 3000 ரூபாய்க்குப் புடைவை வாங்கினாள் என்பதற்காக இந்த வீட்டுக்காரி! ஊரை அடித்து உலையில் போட நினைக்கலாமா?

சூழ்நிலைகளை உணர்ந்து பட்ஜெட்டைத் தீர்மானிப்பது புத்திசாலித்தனமா? அல்லது தேவைகளைக் கருத்தில் கொண்டு பட்ஜெட்டை நிர்ணயிப்பது புத்திசாலித்தனமா?

ஊர்ப் பெருமைக்காக இதுவரை போட்ட ஆட்டங்கள் போதும் போதும்!

பிள்ளங்க ஆசைப்படுதுடி! அதுங்களுக்கு இல்லாம என்னடி? என்று அப்பன் கழிவிரக்கம் காட்டினால் அதன் விளைவுகளை யார் சந்திப்பது? லஞ்சம் வாங்கியும் வேல செய்தும் சம்பாதித்து வீட்டுக்குக் கொட்டிக் கொடுக்க வேண்டிய தேவை தான் என்ன? குடும்பக் கஷ்டங்களைப் பிள்ளைகளுக்கு எப்போது உணர்த்துவது? பிள்ளைகளைப் பணத்தின் அருமையை உணர்த்தாமலே வளர்ப்பது எந்த வகையில் புத்திசாலித்தனம்?

மகளுக்கு திருமணத்திற்குப் பிறகு ரிசப்ஸன் வைக்க வேண்டும் என்று ஆசை. அப்பா ரொம்ப செலவாகுமேம்மா! என்கிறார்.

மகளின் பிடிவாதத்திற்காக தாம் தூம் என்று ஆட்டம் போட்டுக் காசைக் கொட்டுவதா? மகள்தானே? அவளுடன் பேசிப் பார்த்து நிலைமையை உணர்த்த வேண்டாமா? ஒரே மகள்! அவ ஆசைப்பட்டுட்டா! என்று கவிழ்ந்தடித்து விழுவதா?

பல்லாண்டுச் சேமிப்பைப் பகட்டுக்காக ஒரே நாளில் ஆட்டம் போட்டுத் தீர்ப்பது புத்திசாலிகள் செய்யும் வேலையா?

அடுத்தடுத்த பண்டிகைகளையும் அடுத்தடுத்த விசேஷங்களையும் கொஞ்சம் புத்திசாலித்தனமாகத் தான் கொண்டாடிப் பார்ப்போமே!

**லேனா தமிழ்வாணன்**

# விவசாயிகளை அடிக்கும் அளவிற்கு அரசாங்கம் கொடூரமாகியுள்ளது

## மகிந்த குற்றச்சாட்டு



(கொழும்பு)

விவசாயிகளை விரட்டி விரட்டி அடிக்கும் அளவிற்கு அரசாங்கம் கொடூரமாகியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தங்காலை கால்டன் இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பௌர்ணமி தின மத வழிபாட்டு நிகழ்வுகளில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விவசாயம் செய்வதற்கு தேவையான நீரைக் கோரி நின்ற விவசாயிகள் துரத்தித் துரத்தி அடிக்கப்படுகின்றனர்.

நீர் கேட்ட பெண்கள் உள்ளிட்ட 60 இற்கும் மேற்பட்டவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்த காரணங்களினாலேயே, உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு மக்கள் வாக்களித்தனர்.

பிரதமருக்கு அரசாங்கத்திற்கு உள்ளேயே வரவேற்பு இல்லாத நிலைமை நீடித்து வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)




# உமா ஓயா திட்டத்தை விடவும் துறைமுக நகர் ஆபத்தானது

(கொழும்பு)

உமா ஓயா திட்டத்தை விடவும் துறைமுக அபிவிருத்தி நகர்த் திட்டம் ஆபத்தானது என சூழலியலாளர்கள் எச்சரித்தனர்.

உமா ஓயா திட்டத்தின் மூலம் சுற்றாடலுக்கு ஏற்பட்ட ஆபத்துக்களை விடவும், துறைமுக நகரினால் அதிகளவு ஆபத்து ஏற்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளனர். இந்தத் திட்டத்தினால் ஏற்படக்கூடிய சுற்றாடல் பாதிப்புக்கள் குறித்து கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் மக்களை தெளிவுபடுத்தி வருவதாக சூழலியலாளர் சஜீவ சமிகார தெரிவித்துள்ளார்.

தற்போது இந்த ஆபத்துக்கள் இடம்பெற்று வருவதாகவும் இரத்மலானை மற்றும் நீர்கொழும்பு கரையோரப் பகுதி அரிக்கப்பட்டுள்ளதாகவும், குறித்த பகுதிகளில் சீரற்ற அலைகள் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடல் அரிப்பினை தடுப்பதற்காக அரசாங்கம் கடந்த ஆண்டு 1500 மில்லியன் ரூபாவினை வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கியிருந்தது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களில் குடிநீருக்கான தட்டுப்பாடு ஏற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். (இ-7)

# புலிகள் மீதான தாக்குதல் போன்று விவசாயிகள் மீது அரசு தாக்குதல்

## முன்னாள் முதலமைச்சர் ரஞ்சித் கண்டனம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் மேற்கொண்டது போன்று விவசாயிகள் மீது தாக்குதல் நடத்திய நல்லாட்சியை தாம் கண்டிப்பதாக எஸ்.எம்.ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

தம்புத்தேகம, ராஜாங்கணயில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற விவசாயிகளின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தைக் கலைக்க பொலிஸார் வன்முறையை பிரயோகித்துள்ளதாக தெரிவித்து வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம்.ரஞ்சித் கண்டன அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, விவசாயிகளின் வாழ்வை வளப்படுத்துவதாக வாக்குறுதிகள் வழங்கியே நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வந்தது.

ஆனால் நீர்ப்பாசன பிரச்சினைக்காக ஆர்ப்பாட்டம் நடத்திய விவசாயிகளை புலிப் பயங்கரவாதிகளாக கருதி அதே அரசாங்கம், பொலிஸாரை ஏவி கொடூரமான முறையில் தாக்கியுள்ளது.

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடியாளர்கள் சுதந்திரமாக உலவிக் கொண்டிருக்க அப்பாவி விவசாயிகள் மீது மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல் குறித்து வன்மையான கண்டனங்களை தெரிவித்துக்கொள்கின்றேன் என்றும் எஸ்.எம். ரஞ்சித் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ-7)

# புதிய தேர்தல் முறையால் பல பிரச்சினைகள்-மகிந்த

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல், புதிய தேர்தல் முறைமைக்கு அமைய நடத்தப்பட்டதன் மூலம் பல பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தங்காலை பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே முன்னாள் ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

குறுகிய காலத்தில் துரிதமாக தேர்தல் முறையில் திருத்தங்கள் செய்தமை இந்த நெருக்கடிக்கு காரணம் எனத் தெரிவித்தார்.

நடந்த முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதியின் ஆதரவுடன் போட்டியிட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அதிகளவான உள்ளூராட்சி சபைகளில் வெற்றி பெற்றிருந்தாலும் அவற்றில் ஆட்சியமைக்க முடியாத நிலையை எதிர்நோக்கி வருகிறது.

பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆதரவுடன் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியமைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)

# கடற்படையின் ஈரூடகப் படையணி சக்திவாய்ந்த படையாக மாற்றம்



(கொழும்பு)

இலங்கைக் கடற்படையில் புதிதாக உருவாக்கப்பட்ட ஈரூடக படையணி (மரைன்) குறுகிய காலத்திற்குள் சக்திவாய்ந்த படைப்பிரிவாக உருவாக்கப்பட்டுள்ளது.

சம்பூரில் உள்ள ஈரூடகப் பற்றாலியன் தலைமையகத்தில் குறித்த படையணியின் மூன்றாவது படையணி கடந்த புதன்கிழமை பயிற்சிகளை வெற்றிகரமாக முடித்து வெளியேறியுள்ளது.

இதன்போது 16 அதிகாரிகளும், 123 ஈரூடகப் படை வீரர்களும் தமது பயிற்சிகளை முடித்துக்கொண்டு வெளியேறியுள்ளனர். குறுகிய காலத்திற்குள்ளாகவே ஈரூடகப் படையணி பலம் வாய்ந்த படைப்பிரிவாக மாற்றம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் குறித்த படையணியின் முதலாவது படைப்பிரிவு பயிற்சிகளை வெற்றிகரமாக முடித்து வெளியேறியிருந்தது. அதனைத் தொடர்ந்து ஒரு ஆண்டு காலப் பகுதிக்குள் மேலும் இரு பிரிவுகளின் பயிற்சிகள் வெற்றிகரமாக முடித்துக் கொள்ளப்பட்டுள்ளன என்பது சுட்டிக்காட்டப்படத்தக்கது.

சம்பூரில் இடம்பெற்ற ஈரூடகப் படைப்பிரிவின் பயிற்சி அணி வெளியேறிய நிகழ்விற்கு கிழக்குப் பிராந்தியக் கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் நிமல் சரத்சேன பிரதம விருந்தினராகப் கலந்துகொண்டு ஈரூடகப் படையணியின் பயிற்சியை முடித்து வெளியேறிய வீரர்களுக்கு பட்டிகளை அணிவித்துள்ளார். (இ-7)

# உண்பதற்கு பொருத்தமற்ற அதிகளவு மீன்கள் பிடிப்பு

(கொழும்பு)

இலங்கை மீனவர்களால் பிடிக்கப்படும் 40 முதல் 60 வீதம் வரையிலான மீன் வகைகள் உண்பதற்கு பொருத்தமற்றவை என கடல் ஆராய்ச்சி நிறுவனமான நாரா நிறுவனம் தெரிவித்துள்ளதாக மீன்பிடித்துறை மற்றும் நீரியல்வள அமைச்சு தெரிவித்துள்ளது.

அண்மையில் நாரா நிறுவனம் இது தொடர்பிலான ஆய்வுகளை நடத்தியுள்ளது.

இந்த வகை மீன்கள் கருவாட்டுக்கும் பொருத்தமற்றவை எனவும், அவை வெறுமனே அழிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எனவே, இவ்வாறான மீன் வகைகள் பிடிப்பதனை தடுக்கும் வகையில் மீனவர்களுக்கு தெளிவூட்டும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

நவீன படகு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், தரமான ஐஸ் மற்றும் நீர் பயன்பாடு, நவீன தொழில்நுட்பத்தில் மீன்களை பிடித்தல், மீன்களை இறக்குமதி செய்வது குறித்த நவீன முறைகளை அறிமுகம் செய்தல் ஆகிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மொத்த தேசிய உற்பத்தியில் மீன்பிடித்துறையினால் குறைந்தளவு பங்களிப்பே வழங்கப்படுவதாகவும், இந்தப் பங்களிப்பு அதிகரிக்கப்படவுள்ளதாகவும் மீன்பிடித் துறை அமைச்சு அறிவித்துள்ளது. (இ-7)

# ஐக்கிய தேசியக் கட்சியுடன் இனியும் பயணிக்க முடியாது



## அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதாரக் கொள்கைகளுடன் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. இந்த விடயம் கடந்த மூன்று வருடங்களில் நிரூபணமாகியுள்ளது. தொடர்ந்து ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்துடன் பயணிக்க முடியாது.

எனவே விரைவில் தீர்க்கமான முடிவு ஒன்றை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எடுக்கும் என்று அக்கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும் அமைச்சருமான ஜோன் செனவிரட்ன தெரிவித்தார்.

விரைவில் இது தொடர்பில் மாற்றுவழி ஒன்றை ஆராய்வோம். சுதந்திரக் கட்சியின் தனி அரசாங்கத்தை அமைக்கும் செயற்பாடுகளில் பின்னடைவு ஏற்பட்டிருந்தாலும் எதிர்காலத்தில் அது குறித்து ஆராய வேண்டிய சூழல் ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அமைச்சரவை மாற்றம் ஏற்பட்டுள்ள போதிலும் சுதந்திரக் கட்சியினர் இன்னும் அமைச்சரவை மாற்றத்தில் உள்வாங்காமை குறித்து விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும் அமைச்சருமான ஜோன் செனவிரட்ன மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சரவை மாற்றத்தில் நாங்கள் இன்னும் உள்வாங்கப்படவில்லை. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதுவரை அதற்கான அழைப்பை விடுக்கவில்லை. எவ்வாறெனினும் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து பயணிப்பது என்பது தொடர்ந்து சாத்திய மாகாது என்றே எங்களுக்கு தோன்றுகின்றது.

அதாவது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பயணிக்க முடியாது என்று கூறும் உறுப்பினர்களும் உள்ளனர். ஆனால் எம்மை பொறுத்தவரையில் பிரத மர் என்பவர் ஒரு மனிதன் மட்டுமேயாவார். ஆனால் ஐக்கிய தேசிய கட்சியின் பொருளாதாரக் கொள்கைகளுடன் இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியாது. ஐக்கிய தேசிய இலங்கைக்கு பொருத்தமான பொருளாதார கொள்கைகளை கொண்டிருக்கவில்லை.

குறிப்பாக ஐக்கிய தேசிய கட்சியானது அமெரிக்கா, ஜேர்மன், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு பொருத்தமான பொருளாதாரக் கொள்கைகளையே கொண்டுள்ளது. அந்த கொள்கைகள் இலங்கைக்கு பொருத்தமாக அமையாது. இலங்கையானது தேசிய பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டது. எனவே நாம் அதனைத்தான் ஊக்குவிக்கவேண்டும்.

ஆனால் ஐக்கிய தேசிய கட்சி கடந்த மூன்று வருடங்களாக பொருத்தமற்ற பொருளாதாரக் கொள்கைகளையே முன்னெடுத்து வந்துள்ளது. அது வெற்றியடையவில்லை என்பது நிரூபணமாகின்றது.

அதனால் தொடர்ந்து ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்துடன் பயணிக்க முடியாது. எனவே விரைவில் தீர்க்கமான முடிவு ஒன்றை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எடுக்கும். இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்துக்கு எதிர்ப்பை தெரிவித்துக் கொண்டு சுதந்திரக் கட்சியினால் தொடர்ந்து அதே அரசாங்கத்தில் அங்கம் வகிக்க முடியாது. அது சாத்தியமற்ற நகர்வாகவே அமையும்.

அதனால் விரைவில் ஒரு தீர்க்கமான முடிவை சுதந்திரக் கட்சி எடுக்க வேண்டியேற்படும். விரைவில் இது தொடர்பில் மாற்று வழி ஒன்றை ஆராய்வோம். தற்போதைய நிலைமையில் சுதந்திரக் கட்சியின் தனி அரசாங்கத்தை அமைக்கும் செயற்பாடுகளில் பின்னடைவு ஏற்பட்டிருந்தாலும் எதிர்காலத்தில் அது குறித்து ஆராயவேண்டிய சூழல் ஏற்படும்.

அவ்வாறு மாற்று ஏற்பாடு ஒன்று குறித்து ஆராயாமல் தொடர்ந்து இவ்வாறு பயணிக்க முடியாது. எனவே சுதந்திரக் கட்சி விரைந்து உறுதியான மற்றும் தீர்க்கமான முடிவு ஒன்றை எடுக்க வேண்டிய நிலையிலுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அரசை கவிழ்க்கும் போராட்டத்தை தொடங்குகிறது தாமரை மொட்டு!

(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தை வீட்டுக்கனுப்பும் வேலைத் திட்டத்தின் இரண்டாம் அத்தியாயம் எதிர்வரும் ஏழாம் திகதி நுகேகொடையில் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து நாடு தழுவிய ரீதியில் மக்களை வீதியில் இறக்கிப் பேரணி நடத்தவுள்ளோம். ஆகவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு முதுகெலும்பிருக்குமாயின் நுகேகொடை பேரணியில் கலந்து கொள்ள வேண்டும். அதுவே அவர்களுக்கான இறுதிச் சந்தர்ப்பமாக அமையும் என கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் பத்தரமுல்லையிலுள்ள அக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலக வேண்டும் எனவும் அதனைத் தொடர்ந்து புதிய அரசாங்கம் நியமிக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டு வந்தோம். எனினும் அது நடைபெறவில்லை. மேலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெற்று ஒரு மாத காலத்தை அண்மிக்கிறது. எனினும் உள்ளூராட்சி மன்றங்களை அமைக்க முடியாத நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது.

தேர்தல் நடைபெற்ற பின்னர் சபைகளை அமைப்பதற்கு இவ்வாறு நீண்ட காலம் எடுத்த சந்தர்ப்பம் இதுவாகும். தேர்தலை நடத்தாது நல்லாட்சி அரசாங்கம் நீண்ட காலம் இழுத்தடிப்பு செய்து வந்தது. அத்துடன் தற்போது உள்ளூராட்சி மன்றங்களை அமைப்பதற்கும் முதுகெலும்பற்ற நிலையில் அரசாங்கம் உள்ளது.

ஆகவே நல்லாட்சி அரசாங்கத்தை ஆட்சிபீடத்திலிருந்து வீட்டுக்கனுப்ப வேண்டும். அதற்காக மக்களை வீதிக்கிறக்கி போராடவுள்ளோம். எனவே எதிர்வரும் 7 ஆம் திகதி நுகேகொடையில் அரசாங்கத்திற்கு எதிராக பேரணி நடத்தவுள்ளோம்.



மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் தற்போது சிங்கப்பூர் முகவரியில் இல்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். எனவே அர்ஜுன மகேந்திரன் தொடர்பில் பிரதமரே பொறுப்புக்கூற வேண்டும். அர்ஜுன மகேந்திரன் பிடிபட்டால் சகல விடயங்களும் வெளிப்படும். எனவே அவரை மறைத்து வைப்பதற்கே பிரதமர் முயற்சிக்கிறார்.

மேலும் ரணில் விக்கிரமசிங்க தனது பதவியை தக்க வைத்துக்கொள்வதற்கே இவ்வாறு செய்கிறார். அவருக்கு பிரதமர் பதவி இல்லாமல் போகுமாயின் சகல விடயங்களையும் சம்பந்தப்பட்டவர்கள் வெளியிடுவர்.

ஆகவே தான் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரை மறைத்து வைத்துள்ளனர். அர்ஜுன் மகேந்திரனை திட்டமிட்டே மறைத்து வைத்துள்ளனர்.

அத்துடன் பிரதமருக்கு எதிராக கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு நாம் ஆதரவு வழங்குவோம். அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை கூட்டு எதிர்க்கட்சி கொண்டு வருவதற்கு ஏற்கனவே தயாராக இருந்தது. எனினும் தற்போது ஐக்கிய தேசியக் கட்சி அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருமாக இருந்தால் அதற்கு நாம் ஆதரவு வழங்குவோம். மேலும் ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள பிரபலங்கள் உட்பட அதிகளவானோர் அதற்கு ஆதரவு வழங்கவுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தமிழ்ச்சங்க பொதுச்சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 11.03.2018 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நல்லை ஆதீனக் கலாமண்டபத்தில் சங்கத் தலைவர் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும்.

இதில் புதிய நிர்வாகத் தெரிவு, யாப்புச் சீர்திருத்த அறிக்கை முன்மொழிதல் முதலிய விடயங்கள் இடம் பெறவுள்ளன எனப் பொதுச் செயலாளர் ச.லலீசன் அறிவித்துள்ளார்.

மேலும் ஆயுள் அங்கத்தவர்களுக்கும் நடப்பு ஆண்டில் உறுப்புரிமைக்கு உரித்துடைய வருட அங்கத்தவர்களுக்குமான கூட்ட அழைப்புக் கடிதம் அஞ்சலிடப்பட்டு விட்டதாகவும் கடிதம் கிடைக்காதோரைத் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (இ-7)

# சிறுநீரக நோய் நிவாரணப் பிரிவு ஜனாதிபதி மைத்திரியால் திறப்பு

(கொழும்பு)

மெதிரிகிரிய வைத்திய சாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தாதியர் விடுதி, சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், மகப்பேற்று மருத்துவ நிலையம், சிறுநீரக நோய் நிவாரணப் பிரிவு ஆகியன ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டன.



வைத்தியசாலையில் நிலவிய பல்வேறு குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் பிபிதெமு பொலநறுவை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 90 மில்லியன் ரூபா செலவில் இந்த புதிய நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் வட மத்திய மாகாண ஆளுநர் டி.பி.திசாநாயக்க, முன்னாள் மாகாண சபை அமைச்சர் சம்பத் ஸ்ரீநிலந்த, மாகாண சுகாதார செயலாளர் சமன் பந்துலசேன, மாகாண சுகாதார பணிப்பாளர் பாலித பண்டார, மெதிரிகிரிய வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி சுனில் செனரத் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-7)

# அம்பாறையில் பேருந்து மீது கல்வீச்சு

(அம்பாறை)

சம்மாந்துறையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த பேருந்து ஒன்றின் மீது கல்வீச்சுத்தாக்குதல் இடம்பெற்றது.

குறித்த பேருந்து அம்பாறை நகரப்பகுதியை அண்மித்து பயணித்துக் கொண்டிருக்கையில் இந்தக் கல்வீச்சு சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றது.



இதன் காரணமாக பேருந்தின் பக்கவாட்டு கண்ணாடிகள் சேதமடைந்துள்ள போதிலும் பயணிகளில் எவருக்கும் காயம் ஏற்படாது அதிர்ஷ்டவசமாக தப்பித்துக் கொண்டுள்ளனர்.

கல்வீச்சுத் தாக்குதலை அடுத்து பேருந்தின் சாரதி மிக லாவகமாக அப்பிரதேசத்தை விட்டும் வேகமாக கடந்து சென்றுவிட்டதன் காரணமாக மேலதிக சேதங்கள் ஏதுமின்றி பேருந்தும் பயணிகளும் தப்பித்துக் கொண்டுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான பேருந்து சம்மாந்துறை வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான தனியார் பேருந்து என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

அம்பாறையில் அண்மையில் இடம் பெற்ற இனக் கலவரத்தின் பதற்றம் தணிவதற்குள் பேருந்து மீது கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வடக்கு, கிழக்கில் மண்ணில் புதைந்திருக்கும் பொக்கிஷங்களைத் தேடும் பணி ஆரம்பம்

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கில் மண்ணுக்குள் புதைந்திருக்கும் பொக்கிஷங்களான பெறுமதி மிக்க பழைமை வாய்ந்த சிற்பங்கள், கட்டடங்களை அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்காக மாவட்ட மட்டத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப் படுவதாக தொல்பொருள் ஆணையாளர் நாயகம் பேராசிரியர் பி.பீ. மண்டாவள தெரிவித்துள்ளார்.

ஆய்வுகள் மூலம் கண்டறியப்படும் தொல்பொருள் 100 வருடங்களையும் பார்க்க பழைமையானதாக கருதப்படும் பட்சத்தில் அவற்றை தொல்பொருள் திணைக்களம் வர்த்தமானியின் மூலம் அறிவிக்கும். 1818ஆம் ஆண்டுக்கு முன்னரான தொல்பொருள் சட்டத்திற்கு அமைவாக அடையாளம் காணப்படும் பெறுமதி கொண்ட பொருட்கள் "தொல் பொருள் பொருட்கள்" என்று அடையாளப்படுத்தப்படுகின்றது என்று பேராசிரியர் பி.பீ. மண்டாவள தெரிவித்தார். இலங்கையில் இவ்வாறான தொல்பொருள் பெறுமதிமிக்க சிற்பங்கள், கட்டடங்கள் உள்ளிட்டவை சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

தற்பொழுது திணைக்களத்தினால் இவ்வாறானவை 3,500 பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# லலித் வீரதுங்க வெளிநாடு செல்ல விதித்த தடை தற்காலிகமாக நீக்கம்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் செயலாளர் லலித் வீரதுங்க வெளிநாடு செல்வதற்காக விதிக்கப்பட்ட தடையை தற்காலிகமாக மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று நீக்கியுள்ளது.

இந்த தடை நீக்கம் மார்ச் 20 ஆம் திகதி முதல் ஏப்ரல் 30 ஆம் திகதி வரை நீடிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இலவச தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி லயன்ஸ் கழகம் நடத்தும் மாபெரும் இலவச தொழில் வழிகாட்டல் கருத்தரங்கும் இளைஞர் மற்றும் யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு தொடர்பான வழிகாட்டலுடனான தொழில் வழங்கலும் எதிர்வரும் 8ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.ஆரியகுளம் பருத்தித்துறை வீதியிலுள்ள உயர் கல்லூரி வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு கழகத் தலைவரின் 077 926 5447, பிராந்திய தலைவர் 077 361 8120 ஆகியோரின் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் என லயன்ஸ் கழகத்தலைவர் பிதீனேஸ் குமார் அறிவித்துள்ளார். (இ-7)

## காதலால் கம்பி எண்ணும் நிலை

# பெண்ணின் தலைமுடியை வெட்டிய இளைஞன் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

தனிப்பட்ட முரண்பாடு காரணமாக பெண்ணின் தலை முடியை வெட்டிய இளைஞன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தனது காதல் தொடர்பு முறிய காரணமாக இருந்த பெண் என நினைத்து வேறு பெண்ணின் தலைமுடியை வெட்டிய சம்பவம் ஒன்று பயாகல பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது.

19 வயதுடைய இளைஞர் ஒருவர் பேருந்துக்குள் சென்று 19 அங்குலம் வரை நீளமுள்ள முடியை வெட்டியுள்ளார்.

இளைஞனின் காதலி கூறிய உருவத்தை ஒத்த உருவம் கொண்ட வேறு பெண் ஒருவரே இந்த சம்பவத்துக்கு முகங்கொடுத்துள்ளார்.

முடி வெட்டப்பட்ட பெண் தனது காதலி கூறிய பெண் அல்ல என பின்னரே அவர் அறிந்து கொண்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை 12.30 மணியளவில் பயாகல பிரதேசத்தில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. முடியை வெட்டிய இளைஞனை பயாகல பொலிஸார் கைது செய்துள்ளனர்.

21 வயதான பெண்ணின் தலை முடியை வெட்டிய இளைஞன் தப்பி ஓடுவதாக பேருந்து சாரதி, பயாகல பொலிஸ் போக்குவரத்து பிரிவு பொலிஸ் அதிகாரியிடம் தெரிவித்துள்ளார்.

உடனடியாக செயற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் பிரதேச மக்களின் ஆதரவுடன் சந்தேக நபரை கைது செய்துள்ள நிலையில் அவரது சட்டைபையில் இருந்து தலைமுடி மற்றும் கத்தரிக்கோலினை பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறித்த இளைஞனிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், பலபிட்டிய பிரதேசத்தின் பிரதான பாடசாலை ஒன்றில் தான் கல்வி கற்பதாகவும், தான் பாடசாலை மாணவி ஒருவருடன் காதல் தொடர்பை ஏற்படுத்தி கொண்டதாகவும், தமது காதல் தொடர்பு குறித்து காதலியின் தாயாரிடம் பெண் ஒருவர் தகவல் வெளியிட்டதாகவும், இதனால் காதல் முறிவுக்கு வந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தாயாரிடம் தகவல் வெளியிட்ட பெண்ணின் அடையாளங்களை தனது காதலி கூறியதாகவும், அவரை தான் இதற்கு முன்னர் பார்த்ததில்லை எனவும், குறிப்பிட்டுள்ளார்.

சம்பவம் இடம்பெற்ற தினத்தன்று மொரட்டுவைக்கு சென்று திரும்பி வரும் போது காதலி கூறிய உருவம் கொண்ட பெண்ணை கண்டதாகவும், அவரை பழிவாங்குவதற்காக அந்த இடத்திலேயே கத்தரிக்கோல் ஒன்றை கொள்வனவு செய்து கொண்டு அந்த பெண்ணை பின் தொடர்ந்து சென்றதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் எல்பிட்டிய நோக்கி சென்ற பேருந்தில் அவரது முடியை வெட்டியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் தனது காதலி கூறிய பெண்ணின் முடியை வெட்டாமல் வேறு பெண்ணின் முடியை வெட்டியதாகவும், இளைஞன் தெரிவித்துள்ளார்.

இளைஞனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1345

### ரஜிதா

ஒரு தாய் ஐந்து குழந்தைகளையும் வளர்த்து விடுவாள்



ஆனால் ஐந்து குழந்தைகளும் சேர்ந்து ஒரு தாயை காப்பாற்றுவது கடினம்!

### தக்சி

I Love u டார்லிங்!
I Love u more
அடிப்பாவி!
யாருடி அவன் மோரு...



### யாதவன்

அன்பைக் கொட்டிக் கொடுப்பவர்களை விட...
பணத்தை அள்ளிக் கொடுப்பவர்களையே உலகம் அதிகம் விரும்புகிறது!!!



### அபி

நமக்கு கடைசி உருண்டை சாப்பாட்டைக்கூட போராடி ஊட்டிய தாய் தந்தையை



ஒருவேளை சாப்பாட்டுக்குக்கூட கையேந்த விட்டு விடாதீர்கள்..
ஏன்னா வாழ்க்கை ஒரு வட்டம்

### ராஜன்

ஆண்களின் தியாகத்திற்கு எல்லையே கிடையாது



### சுரேஷ்

அடேய் பிக்காலிப்பயலே!



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இனவாதத்தைத் தூண்டிவிட சிலர் முயற்சி கருத்தடை மாத்திரை குற்றச்சாட்டு பொய்

## அமைச்சர் டாக்டர் ராஜித தெளிவுபடுத்தல்

(கொழும்பு)

குடும்பக் கட்டுப்பாட்டு மாத்திரை வழங்கியதாலேயே அம்பாறையில் மோதல் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டில் எந்தவித உண்மையும் கிடையாது என அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அம்பாறையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடுகளை அமைச்சர் ராஜித சேனாரட்ன இவ்வாறு விளக்கியுள்ளார்.

அம்பாறை சம்பவத்துடன் தொடர்புள்ள சகலரையும் கைது செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த பிரச்சினையை சிலர் வேண்டுமென்றே தூண்டிவிட்டனரா என்பது குறித்தும் ஆராயப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்தக் கருத்துருவாக்கம் சமூக வலைத்தளங்களினூடாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் நாட்டில் இனவாதத்தைத் தூண்டிவிட சிலர் முயல்வதாகவும் குறிப்பிட்டார்.

அம்பாறை நிலைமை கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் இருப்போர் குறித்து ஆராயப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

குறித்த சம்பவம் தொடர்பில் அமைச்சரிடம் கேட்ட கேள்விகளுக்கு அமைச்சர் பின்வருமாறு பதிலளித்துள்ளதாக



கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கேள்வி: குடும்பக் கட்டுப்பாட்டு மாத்திரை தான் இந்த பிரச்சினைக்கு காரணம் என குற்றஞ்சாட்டப்படுகிறதே?

பதில்: சில மருத்துவர்கள் மீதும் இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டது. தமிழ் முஸ்லிம் மருத்துவராக இருந்தால் இவ்வாறு பழி சுமத்தப்படும். ஆனால் அது பற்றி விசாரித்த போது அவை பொய்க் குற்றச்சாட்டு என்பது கண்டு பிடிக்கப்பட்டது.

சுகாதார அமைச்சின் திட்டங்களை தான் அந்த மருத்துவர்கள் முன்னெடுத்திருந்தார்கள். இங்கும் குடும்பக் கட்டுப்பாட்டு மாத்திரை குறித்து கூறப்படுகிறது. பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர். அவ்வாறு ஏதும் மாத்திரை கண்டு பிடிக்கப்பட்டால் விசாரிக்கத் தயார்.

கேள்வி: இது தொடர்பான வீடியோக்கள் வெளியாகியுள்ளன.

பதில்: எனக்குக் கிடைத்துள்ள தகவல் படி இது பொய்யான குற்றச்சாட்டாகும். சமூக வலைத்தளங்கள் தான் இவ்வாறு குற்றஞ்சாட்டுகின்றன.

கேள்வி: கடை உரிமையாளர், தான் மாத்திரை விற்றதாக ஏற்றுக் கொண்டுள்ளாரே?

பதில்: வீடியோக்களில் காட்டப்படும் நபர் தான் கடை உரிமையாளர் என எப்படி கூறிவிட முடியும். வேறு ஒருவரின் வீடியோவை கூட அவ்வாறு வெளியிட்டு குறித்த கடை உரிமையாளர் என்று கூற முடியும். சமூக வலைத்தளங்களில் தான் இதனை வெளியிடுகின்றனர்.

இனவாதத்தை தூண்ட சமூக வலைத்தளங்கள் பயன்படுத்தப்படுகின்றன. கடந்த காலத்திலும் இவ்வாறு இன வாதத்தை தூண்டியவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

கேள்வி: உலகில் இவ்வாறு குடும்பக் கட்டுப்பாட்டு மாத்திரைகள் பயன்படுத்தப்படுகிறதா?

பதில்: உலகில் எங்கும் ஆண்களுக்கு குடும்பக் கட்டுப்பாட்டு மாத்திரை வழங்கப்படுவதில்லை. பெண்களுக்கு வழங்கினால் தான் குடும்பக் கட்டுப்பாடு செய்ய முடியும்.

ஆண் குடும்பக் கட்டுப்பாட்டு மாத்திரை சாப்பிட்டால் பெண்ணுக்கு குடும்பக் கட்டுப்பாட்டை ஏற்படுத்த முடியுமா? உலகில் எங்கும் அவ்வாறு முடியாது.

கேள்வி: இவ்வாறான சம்பவங்கள் இடைக்கிடை நடந்து வருகின்றன. அதனை தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

பதில்: 2014 ஆம் ஆண்டு வரை நடந்த இனவாத செயற்பாடுகளுடன் ஒப்பிடுகையில் தற்பொழுது சிறிதளவே நடந்துள்ளன. 30 வருட யுத்தத்தின் பின்னர் மக்கள் மத்தியில் யுத்த மனப்பாங்கு தான் இருந்தது.

இதனோடு இனவாத உணர்வுகளும் தூண்டப்பட்டன. இவை கட்டம் கட்டமாகத் தான் குறையும். கடந்த கால இனவாத செயல்களுடன் நோக்குகையில் தற்பொழுது குறைந்தளவே நடக்கிறது. இந்த நிலைமை மாறும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# உதயங்க வீரதுங்க டுபாயில்



(கொழும்பு)

ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க, டுபாய் நாட்டில் இருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உதயங்க வீரதுங்கவை இலங்கைக்கு அழைத்து வருவது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக அண்மையில் ஐக்கிய அரபு இராச்சிய அதிகாரிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தியதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

அத்துடன், ஐக்கிய அரபு இராச்சியத்தில் அமுலில் உள்ள சட்ட முறைகளுக்கு அமைய தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவ தாக அந்த நாட்டு அதிகாரிகள் அறிவித்துள்ளதாகவும் அவர் கூறியுளளார்.

உதயங்க வீரதுங்க சம்பந்தமான விசாரணைகளுக்கான பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவின் விசேட பொலிஸ் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், உதயங்க வீரதுங்க தேடப்பட்டு வரும் குற்றவாளி என அண்மையில் அறிவிக்கப்பட்டது.

இதேவேளை, போருக்காக நான்கு மிக் தாக்குதல் விமானங்கள் உட்பட 8 விமானங்கள் கொள்வனவு செய்ததில் நடந்த 7 மில்லியன் அமெரிக்க டொலர் மோசடி தொடர்பாக உதயங்க வீரதுங்க தேடப்பட்டு வருகிறமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கூரிய ஆயுதத்தால் ஒருவர் படுகொலை!

(கொழும்பு)

காலி, மகுளுவ பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 8.15 மணியளவில் களியாட்ட நிகழ்வொன்றில் இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் உச்சமடைய ஒருவர் மற்றவரை கூரிய ஆயுதத்தால் தாக்கி விட்டு பின்னர் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்த நபர் கராபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் காலி, மகுளுவ பகுதியைச் சேர்ந்தவர் என்பதுடன் சந்தேக நபரை கைது செய்ய காலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# நீர் கேட்டுப் போராடியவர் கைது

(கொழும்பு)

ராஜாங்கனை ஒன்றிணைந்த விவசாய அமைப்பின் தலைவரை நேற்று முன்தினம் மாலை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் ஆர்ப்பாட்டத்தில் குழப்ப நிலையை ஏற்படுத்திய மேலும் பலரை கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 50 பேர் இம்மாதம் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ராஜாங்கனை நீர்த்தேக்கத்தில் குடிநீர் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்தே கடந்த புதன்கிழமை இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வேட்பாளரை தாக்கிய விவகாரம்

# பிரசன்ன ரணவீரவை கைது செய்ய முடிவு

(கொழும்பு)

இந்தமுறை உள்ளாட்சி மன்றத் தேர்தலில் களனி பிரதேச சபைக்கு சுதந்திரக் கட்சியில் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவரை தாக்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணவீரவை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான விசாரணைகளை கிரிபத்கொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினரைக் கைது செய்வதற்காக நேற்று முன்தினம் அவரது இல்லத்துக்கு பொலிஸ் குழு ஒன்று சென்றிருந்த போதும், அவர் வீட்டில் இருக்க வில்லை.

கடந்த 28ஆம் திகதி இரவு கிரிபத்கொடை - விகாரமாதேவி மகளிர் வித்தியாலயத்திற்கு அருகில் நடைபெற்ற விருந்துபசார நிகழ்வொன்றில் வைத்து, ஜகத் பிரசன்ன கமகே என்ற குறித்த வேட்பாளர் மீது நாடாளுமன்ற உறு ப்பினர் பிரசன்ன ரணவீரவும் மேலும் சிலரும் இணை ந்து தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலுக்கு உள்ளானவர் தற்போதும் கிரிபத்கொடை வைத்திய சாலையில் சிகிச்சைப் பெற்று வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கொழும்பு மாநகர ஆணையாளரை பதவி நீக்க ஆளுநர் தீர்மானம்



(கொழும்பு)

கொழும்பு மாநகர ஆணையாளர் வீ.கே.ஏ.அநுரவை பதவி நீக்க மேல்மாகாண ஆளுநர் கே.சீ.லோகேஸ்வரன் தீர்மானம் மேற்கொண்டுள்ளார்.

மேல்மாகாண ஆளுநரின் செயலர் இந்தத் தகவலை வழங்கியுள்ளார்.

நீதிபதி சந்திரதாஸ நாணயக்கார தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு முன்வைத்த அறிக்கையின் அடிப்படையில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என ஆளுநரின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சுதந்திரக் கட்சி உடன் வெளியேற வேண்டும்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்த அரசாங்கத்திலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உடனடியாக வெளியேற வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திர சேவையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த சங்கத்தின் பிரதான செயலாளர் லெஸ்லி தேவேந்ர இதனை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தமது சங்கம் கூடி தீர்மானம் ஒன்றை எட்டியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அந்த தீர்மானம் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மத்திய செயற்குழுவிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# தேசிய மீன்பிடித்துறை சட்டமூலம் விரைவில் அமைச்சரவைக்கு வரும்

(கொழும்பு)

தேசிய மீன்பிடித்துறை சார்ந்த சட்டமூலத்தை இம்மாத இறுதிக்குள் அமைச்சரவை அனுமதிக்காக சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கான அறிவுறுத்தலை கடற்றொழில் நீரியியல்வள அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீர உரிய அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளார்.

மீன்பிடி மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சை முறையாக முன்னெடுத்துச் செல்வதே, இந்த தேசிய மீன்பிடி சட்டமூலத்தின் முக்கிய நோக்கமாகும். இது விடயம் தொடர்பான சட்டமூல பிரேரணையை தயாரிப்பதற்கு நோர்வே அரசாங்கத்தின் பூரண ஆதரவு கிடைத்துள்ளது.

இந்த சட்டமூல ஆக்கத்திற்கென உரிய தரப்பினர் மற்றும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைகளும் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# லசந்த கொலை; சுகதபால, நாணயக்காரவின் பிணை நிராகரிப்பு; விளக்கமறியலும் நீடிப்பு



(கொழும்பு)

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்ட குற்றப் புலனாய்வு பிரிவு முன்னாள் பொறுப்பதிகாரி திஸ்ஸ சுகதபால மற்றும் கொழும்பு நகரத்திற்குப் பொறுப்பான முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் நாணயக்கார ஆகியோரது பிணைக் கோரிக்கை நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கல்கிசை நீதவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு மீதான விசாரணை நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிலையில் குறித்த சந்தேக நபர்களையும் எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலமான கடந்த 2009ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான லசந்த விக்கிரமதுங்க ஆயுததாரிகளால் வீதியில் வைத்து சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

இந்த வழக்கு விசாரணை கல்கிசை நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகிறது.

இந்தப் படுகொலையுடன் தொடர்புபட்ட குற்றச்சாட்டில் கடந்த மாதம் குற்றப்புலனாய்வு பிரிவு முன்னாள் பொறுப்பதிகாரி திஸ்ஸ சுகதபாலவும், கொழும்பு நகரத்திற்குப் பொறுப்பான முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் நாணயக்காரவும் அதிரடியாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த நிலையில் வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது குறித்த இரண்டு சந்தேக நபர்களும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இவர்கள் சார்பாக மன்றில் முன்வைக்கப்பட்ட பிணைக்கான கோரிக்கையை நிராகரித்த நீதிமன்றம், சந்தேக நபர்களை எதிர்வரும் 15ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது. (இ-7)

# ஐக்கிய சனசமூக நிலைய பௌர்ணமி விழா இன்று

(யாழ்ப்பாணம்)

கரணவாய் கிழக்கு கலட்டி ஐக்கிய சனசமூக நிலையத்தின் பௌர்ணமி விழா இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு ஜெயச்சந்திரன் கலையரங்கில் நிலைய உபதலைவர் மாணிக்கம் மணிகலாதன் தலைமையில் இடம்பெறும். இதில் கரவை சுப்பர் ஸ்ரார் சிறந்த நடிகர் தேர்வும் இடம் பெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-7)

# யாழ். ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று காலை 9.30 மணியளவில் யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் யாழ். மாவட்டத்துக்குரிய ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இடம் பெற்றிருந்தது. 5 மாதங்களுக்கு பின்னர், 2018 ஆம் ஆண்டுக்குரிய முதலாவது கூட்டம் இணைத் தலைவர்களான வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, அங்கஜன் இராமநாதன் ஆகியோர் தலைமையில் இன்று நடைபெறும். (இ-9)

# அலோசியஸுடன் தொடர்பு பேணியோர் பற்றிய விபரங்கள் வெளியிடப்படும்

## பிரதியமைச்சர் ரஞ்சன் எச்சரிக்கை

(கொழும்பு)

பேர்பெச்சுவல் ட்ரஸரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸுடன் தொடர்பு பேணியவர்கள் பற்றிய விபரங்கள் வெளியிடப்படும் என பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.



அலோசியஸுடன் தொடர்பு பேணிய அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட அனைவர் பற்றிய விபரங்களும் அம்பலப்படுத்தப்படும் என அவர் எச்சரித்தார்.

ஆளும் மற்றும் எதிர்க் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அலோசியஸிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டுள்ளனர் என அவர் தெரிவித்தார். அலோசியஸிற்கு சொந்தமான மெண்டிஸ் டிஸ்டிலிரிஸ் நிறுவனத்திடமிருந்து பெண் பாராளுமன்ற உறுப்பினர்களும், கிறிஸ்தவ, பௌத்த மதத் தலைவர்களும் பணம் பெற்றுக்கொண்டனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். பணம் பெற்றுக்கொண்டமை தொடர்பான 157 காசோலை பற்றுச் சீட்டுக்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

# நல்லாட்சியை ஆரம்பித்தது முதல் பல முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன

## சு.க. அமைச்சர் அமரவீர சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்பதா? அல்லது நிராகரிப்பதா? என்பது குறித்து கட்சியின் மத்திய குழுவில் தீர்மானம் எடுப்போம். நாம் எடுக்கும் தீர்மானங்கள் மக்களுக்கும், நாட்டுக்கும் ஏற்றவையாக அமையும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளர் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அமைச்சரவை மாற்றங்களின் பின்னர் அடுத்த இரண்டு ஆண்டுகள் சரியான ஆட்சியினை கொண்டு செல்வோம் எனவும் அவர் தெரிவித்தார்.

தேசிய அரசாங்கத்தில் இடம்பெற்றுள்ள அமைச்சரவை மாற்றங்கள் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எழுந்துள்ள நெருக்கடிகளின் மூலம் பிரதமருக்கு எதிராக கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டினை வினவியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சரவை மாற்றம் ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கமே இடம்பெற்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் அமைச்சர்கள் மாற்றம் அடுத்த வாரமளவில் இடம்பெறும் என எதிர்பார்க்க முடியும். வழமையான மாற்றங்களே இடம்பெற்றுள்ளன. அமைச்சரவை மாற்றங்களில் எப்போதுமே அனைவரும் மகிழ்ச்சியடைவதில்லை. எனினும் சரியான மாற்றங்கள் இடம் பெற்றால் அது வரவேற்கக் கூடியதாக அமையும் என நாம் நம்புகின்றோம்.

இரண்டு கட்சிகள் இணைந்து ஆட்சியினை முன்னெடுக்கும் நிலையில் குழப்பங்கள் இடம்பெறாமல் இல்லை. நல்லாட்சி அரசாங்கம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து பல முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. அதனை கருத்தில் கொண்டு நாம் இணைக்கப்பாடுகளையும் கண்டுள்ளோம். முன்னெடுக்கப்பட வேண்டிய முக்கிய மாற்றங்கள் அனைத்தும் விரைவில் இடம்பெறும். அடுத்த இரண்டு ஆண்டுகள் எந்தவித முரண்பாடுகளும் இல்லாத வகையில் நாம் ஆட்சியினை முன்னெடுப்போம்.

பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று கொண்டு வருவது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியினர் காரணிகளை முன்வைத்துள்ளனர். எனினும் அவர்கள் எந்தக் காரணிகளை உள்ளடக்கிய நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றினை கொண்டுவரப் போகின்றனர் என்பது தெரியவில்லை. எம்மிடமும் இது குறித்து எந்தவித கலந்துரையாடலும் இடம்பெறவில்லை. அவர்கள் பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதை அடிப்படையாகக் கொண்டே எமது செயற்பாடுகளும் அமையும்.

எவ்வாறு இருப்பினும் பிரதமருக்கு எதிராக கொண்டு வரும் நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் நாம் ஆராய்வோம். அதில் ஜனாதிபதி இறுதியாக எடுக்கும் முடிவுக்கு அமைய நாமும் செயற்படுவோம். இப்போது வரையில் நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து நாம் எந்தவித தீர்மானமும் எடுக்கவில்லை. அவசியமான நேரத்தில் உரிய தீர்மானங்களை நாம் முன்னெடுப்போம். எடுக்கும் தீர்மானம் நாட்டுக்கும் மக்களுக்கும் ஏற்ற ஒன்றாகவும் அரசாங்கத்தினை குழப்பாத அதேபோன்று நாட்டினை குழப்பாத வகையிலும் அமையும் என்பதை எம்மால் உறுதிப்படுத்த முடியும்.

எவரதும் தனிப்பட்ட தேவைகளில் காய்நகர்த்தலை முன்னெடுக்க கையாளும் சூழ்ச்சியாக இவை அமையுமாயின் நாமும் அதில் பங்குகொள்ள முடியாது. ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளக விவகாரங்களில் அவர்களுக்குள் ஏற்பட்டுள்ள குழப்பங்களை அனைவரையும் வைத்து தீர்த்துக்கொள்ள முடியும் என நினைத்தால் அது ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும். எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சரியான முடிவுகளை எடுக்கும். நாம் ஆரோக்கியமான செயற்பாடுகளை முன்னெடுப்போம். அதில் எந்தச் சந்தேகமும் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சிறுபான்மை கட்சிகளின் அரசியல் பிரதிநிதித்துவம் குறைவடைய வாய்ப்பு

## அமைச்சர் ஹக்கீம் எச்சரிக்கை

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளின் எல்லை மீள் நிர்ணயம் குறித்த அறிக்கையின் அடிப்படையில், சிறுபான்மை கட்சிகளின் அரசியல் பிரதிநிதித்துவம் குறைவடையும் அச்சுறுத்தல் நிலவுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.



இந்நிலையில் மாகாண சபைகளை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட எல்லை மீள்நிர்ணய நடவடிக்கைகளை அரசாங்கம் மீளாய்வு செய்ய வேண்டும் என்று அமைச்சர் ரவூப்ஹக்கீம் வலியுறுத்தியுள்ளார்.

முன்னாள் அளவையீட்டாளர் நாயகம் கனகரத்தினம் தவலிங்கம் தலைமையில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு, மாகாண சபை எல்லைகளை மீள்நிர்ணயம் செய்யும் அறிக்கையை அண்மையில் மாகாண சபைகள் மற்றும் உள்ளாட்சி மன்றங்கள் அமைச்சர் பைசர் முஸ்தபாவிடம் கையளித்தன.

இந்த அறிக்கை எதிர்வரும் நாட்களில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

எனினும் குறித்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள எல்லை மீள்நிர்ணய விடயங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறித்த எல்லை மீள்நிர்ணய விடயமானது, சிறுபான்மை அரசியல் பிரதிநிதித்துவத்தை பாதிக்காத வகையில் மாற்றி அமைக்கப்பட வேண்டியது அவசியமாகும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணி தெரிவித்துள்ளது. (இ-7)



# சிறுவர் அரங்கம்

## அம்மாவுக்கு மகள் சொன்ன கதை

(நேற்றைய தொடர்ச்சி)

"நான் ஏதாவது போட்டி சொன்னா, உன்னை ஏமாத்துறேன்னு சொல்லுவே. நீயே சொல்லு!" என்று முயல் அப்பாவியாய்ச் சொல்ல, முயலின் எண்ணத்தைப் புரிந்து கொண்டது ஆமை.

சற்று யோசித்த ஆமை, "முதலில் யார் அவர்கள் இருக்கும் வீட்டைத் தொட்டு விட்டு வருகிறார்களோ, அவர்களுக்கே முழு முட்டைக் கோஸ்!" என்றது ஆமை.

இதைக்கேட்டதும்முயலுக்கு ஏக குஷி.

"ஓ! என் வீட்டைத்தானே, இதோ ஒரு நொடியில் தொட்டு விட்டு வருகிறேன்!" என்றபடி குதித்தோடியது முயல்.

வேகமாகப் போய் வீட்டைத் தொட்டுவிட்டு, மூச்சு வாங்கியபடி முயல் திரும்பியது. வந்து பார்த்தால் முயலுக்கு ஒரே அதிர்ச்சி.


முட்டைக்கோஸை ரசித்துச் சாப்பிட்டுக்கொண்டிருந்தது ஆமை.

"நீ உன் வீட்டுக்கே போகாம இப்படிச் செய்யுறீயே! இது நியாயமா..?" என்று கோபமாகக் கேட்டது முயல்.

ஆமை முயலைப் பார்த்துச் சொன்னது.

"என்னோட வீட்டை நான் முதல்ல தொட்டேன். முட்டைக் கோஸை நானே எடுத்துக் கிட்டேன்!" என்று அமைதியாகச் சொன்னது ஆமை.

இதைக் கேட்ட முயலுக்குக் கோபம் வந்தது.



"நீ பொய் சொல்றே, நீ போகவேயில்லை?" என்று முயல் சொன்னது.

"எனக்குன்னு தனியே வீடு ஏது? என் ஓடுதானே எனக்கு வீடு. இதோ, இப்படித்தான் என் வீட்டைத் தொட்டேன்!" என்றபடி, தன் தலையால் முதுகிலுள்ள ஓட்டை தொட்டுக் காட்டியது ஆமை.

'பேராசைப்பட்டு உள்ளதையும் இழந்தோமே!' என்று தலை கவிழ்ந்தபடி முயல் நின்றது.

கவின் சொன்ன இந்தக் கதையைக் கேட்டதும் அம்மா சந்தோசப்பட்டார். ஓட்டப் பந்தயம் வைத்து, ஆமையை வெற்றி கொண்ட முயலின் கதையைத்தான் அம்மா கவினுக்குச் சொல்லியிருக்கிறாள். ஆமை முயலை ஜெயித்த கதையை இப்போது தான் அம்மாவே கேட்கிறாள்.

"ராசாத்தி! யாரு உனக்கு இந்தக் கதையைச் சொன்னது?" என்று கேட்டாள் அம்மா.

"யாரும் சொல்லலை, நானாத்தான் சொல்றேன்!" என்றாள் கவின்குட்டி.

உடனே, அம்மா, "என் குட்டியம்மாவுக்கு எம்புட்டு அறிவு!" என்று கொஞ்சம் "பொறும்மா, இன்னும் கதை முடியலே" என்றபடி தொடர்ந்தாள் கவின்குட்டி.

வருத்தத்துடன் போன முயலைக் கூப்பிட்டது ஆமை.

"இந்தா, நீயும் இதைச் சாப்பிடு!" என்று பாதி முட்டைக் கோஸை முயலிடம் கொடுத்தது ஆமை. முயலும் வாங்கிச் சாப்பிட்டது. பிறகு முயலிடம் ஆமை சொன்னது.

"அவரவர் சக்திக்கு அவரவர் செயலே பலமானது தான். உன்னால் மிக வேகமாக ஓட முடியும். என்னால் நீரில் வேகமாக நீந்த முடியும். வீணாக யாரையும் முடியாத போட்டிக்குக் கூப்பிடுவது தவறு!"

முயல் தன் தவறை உணர்ந்து. ஆமையை நட்போடு அணைத்துக்கொண்டது.

"எப்படி நம்ம முயல் ஆமை கதை..?" என்று கவின் அம்மாவிடம் கேட்டாள்.

"உலகத்திலேயே அம்மாவுக்கு மகள் சொன்ன முதல் கதை இதுதான். என் செல்லமே!" என்றபடி கவினைக் கட்டியணைத்து முத்தமிட்டாள்.

**முற்றும்.**

## 03.2018 03 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1575- இந்தியாவின் முகலாயப் பேரரசர் அக்பர் வங்காளப் படைகளைத் தோற்கடித்தார்.
- 1918-முதலாம் உலகப் போரில் ரஷ்யாவின் பங்களிப்பை முடிவுக்குக் கொண்டுவர ஜேர்மனி, ஆஸ்திரியா மற்றும் ரஷ்யா ஆகியன உடன்பாட்டிற்கு வந்தன.
- 1923-டைம் இதழின் முதல் பதிப்பு வெளியிடப் பட்டது.
- 1933-ஜப்பானில் ஹொன்ஷூ என்ற இடத்தில் நிலநடுக்கம் மற்றும் ஆழிப்பேரலை காரணமாக 3,000 பேர் வரையில் இறந்தார்கள்.
- 1938-சவுதி அரேபியாவில் எண்ணெய் கண்டு பிடிக்கப்பட்டது.
- 1939-மும்பையில் மகாத்மா காந்தி ஆதிக்கவாதிகளுக்கு எதிராக உண்ணாநோன்பை ஆரம்பித்தார்.
- 1942-இரண்டாம் உலகப் போர்: மேற்கு அவுஸ்திரேலியாவில் ப்ரூம் என்ற நகரில் ஜப்பானின் பத்து போர் விமானங்கள் குண்டுத் தாக்குதலில் ஈடுபட்டதில் 100 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர்.
- 1943-இரண்டாம் உலகப் போர்: லண்டனில் விமானக் குண்டுத்தாக்குதலின் போது சுரங்கத் தொடருந்து நிலையத்தில் ஒதுங்கிய 173 பேர் நெரிசலில் சிக்கி இறந்தனர்.
- 1969-நாசாவின் அப்பலோ 9 விண்ணில் ஏவப்பட்டது.

### பிறப்புகள்

- 1847- அலெக்சாண்டர் கிரகம் பெல், தொலைபேசியைக் கண்டுபிடித்த இசுக்கொட்டிய-அமெரிக்கப் பொறியியலாளர் (இ. 1922)
- 1882-சார்லசு பொன்சி, இத்தாலியத் தொழிலதிபர் (இ. 1949)
- 1944-ஜெயசந்திரன், தென்னிந்தியத் திரைப்படப் பின்னணிப் பாடகர்
- 1970-இன்சமாம் உல் ஹக், பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர்

### இறப்புகள்

- 1644-குரு அர்கோவிந்த் ஆறாவது சீக்கிய குரு (பி. 1595)
- 1703-ராபர்ட் ஹூக், ஆங்கிலேய கட்டடக் கலைஞர், மெய்யியலாளர் (பி. 1635)
- 1707-ஔரங்கசீப், முகலாயப் பேரரசர் (பி. 1618)
- 1996-சி.சிவஞானசுந்தரம், ஈழத்து இதழியலாளர், எழுத்தாளர்
- 2011-வெ.இராதாகிருட்டிணன், விண்வெளி அறிவியலாளர் (பி. 1929)

### சிறப்பு நாள்

- உலகக் காட்டுயிர் நாள்
- அன்னையர் நாள் (ஜோர்ஜியா)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 50 | 60 | 60 | 80 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 70 | 65 | 70 | 80 | 75 |
| பச்சைமிளகாய் | 50 | 50 | 60 | 70 | 80 | 60 |
| தக்காளி | 30 | 20 | 25 | 40 | 60 | 25 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 40 | 40 | 35 |
| கோவா | 25 | 30 | 55 | 60 | 60 | 40 |
| கரட் | 80 | 100 | 100 | 100 | 160 | 80 |
| பூசணி | 60 | 40 | 40 | 50 | 60 | 45 |
| புடோல் | 80 | 60 | 35 | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 60 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 100 | 120 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 | 90 | 100 | 120 |
| பாகற்காய் | 140 | 100 | 120 | 100 | 120 | 140 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 70 | 100 | 100 | 80 |
| கருணைக்கிழங்கு | 60 | 100 | 50 | 60 | 60 | 60 |
| பயற்றங்காய் | 100 | 100 | 50 | 100 | 80 | 80 |
| லீக்ஸ் | 140 | 160 | 14.0 | 160 | 200 | 180 |
| பீற்றூட் | 50 | 40 | 35 | 50 | 60 | 40 |
| குடமிளகாய் | 100 | 60 | 70 | 100 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 800 | 400 | 400 | 400 | 800 | 600 |
| போஞ்சி | 100 | 160 | 70 | 80 | 160 | 80 |
| கத்தரிக்காய் பிஞ்சு | 60 | 30 | 50 | - | 60 | 40 |
| கீரை - 1 பிடி | 30 | 40 | 20 | 30 | 40 | 25 |
| தேசிக்காய் | 80 | 30 | 50 | 40 | 80 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 35-65 | 90 | 75 | 95 |
| இராசவள்ளி | 180 | 140 | 130 | 170 | 180 | 180 |
| வெங்காயப்பூ | 100 | 60 | 75 | 100 | 120 | 80 |
| முள்ளங்கி | 20 | 60 | 30 | 60 | 60 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 20 | 40 |
| ஈரப்பலா | — | 40 | — | 30 | 80 | 70 |

நல்ல செய்தி கொண்டு வருபவன் துணிவோடு கதவைத் தட்டுவான்.

- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தமிழ் ஊடகங்களிடையே இன ஒற்றுமை அவசியம்

விழுந்தபாட்டில் குறிசுடுவது என்றொரு பழமொழி நம் தமிழ் மொழியில் உண்டு.

இந்தப் பழமொழிக்கு பல கருத்துக்கள் உண்டு. அதில் ஒன்று சந்தர்ப்ப சூழலுக்கு ஏற்ப அங்கும் இங்கும் மாறிக் கொள்வது.

இரண்டாவது கொள்கை, கோட்பாடு, உண்மை, நேர்மை என்பவற்றுக்கு இடம்கொடாமல் எப்படியும் நடந்து கொள்ள முடியும் என்பது.

மேற்போந்த பழமொழி இன்று நம் அரசியலிலும் ஊடகச் செயற்பாடுகளிலும் மலிந்திருப்பது வேதனைக்குரியது.

யார் எந்தப் பக்கம் நின்றாலும் அனைவரதும் நோக்கமும் கொள்கையும் தமிழினத்தின் விடிவு என்பதாகவே இருக்க வேண்டும்.

அந்த வகையில் தமிழ் ஊடகங்களும் தமிழினத்தின் விடிவு என்பதில் உறுதியாக இருக்கின்ற போதிலும் சந்தர்ப்ப சூழல்களால் மாற்றமுறுகின்ற போக்கைக் காணமுடிகின்றது.

இந்தச் செயற்பாடு அந்தந்த ஊடகம் சார்ந்த கொள்கையுடன் சம்பந்தப்பட்டது என்றாலும் ஒரு செய்தியை வெளியிடும்போது அதன் உண்மைத்தன்மை பற்றி முழுமையாகப் பரிசீலிப்பதுடன் எழுந்தமானமாகப் பிரசுரிக்கின்ற செய்திகளின் பிரதிபலிப்புக்கள் மக்கள் சமூகத்தில் ஏற்படுத்தி விடக்கூடிய பாதிப்புக்கள் பற்றியும் நாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

ஆக, செய்திகள் வேறுபடலாம்; செய்திகளுக்கு வழங்கப்படுகின்ற முன்னுரிமைகள் ஊடகத்துக்கு ஊடகம் மாறுபடலாம்.

ஆனால் எங்கள் தமிழினத்தின் அத்தனை ஊடகங்களும் தமிழ் மக்களின் வாழ்வுக்காக தம் பணியை ஆற்ற வேண்டும் என்பது நம் தாழ்மையான கோரிக்கை.

இதற்காக தமிழ் ஊடகங்களின் நிர்வாகக் கட்டமைப்புகளுக்கிடையே ஒற்றுமையும் புரிந்துணர்வும் சந்திப்புக்களும் கலந்துரையாடல்களும் நடைபெறுவது மிகமிக அவசியமாகும்.

இவ்வாறான ஊடக நிர்வாகக் கட்டமைப்புகளின் சந்திப்பும் கலந்துரையாடல்களும் எம் இனத்துக்கு மிகப்பெரிய சாதகத்தை ஏற்படுத்துவதுடன் தமிழ் மக்கள் சார்ந்த விடயங்களில் அரசியல் கட்சிகளை, சமூக அமைப்புகளை விழிப்படையச் செய்வதற்கும் சில பல விடயங்களிலேனும் தமிழ் அரசியல் கட்சிகளிடையே ஒற்றுமையை, ஒருமித்த கருத்தை ஏற்படுத்தவும் முடியும்.

ஆகையால் இதுபற்றி ஊடகத்துறை சார்ந்தவர்கள் சிந்திப்பது ஆரோக்கியமானதாக அமையும்.

அதேநேரம் தமிழ் மக்களிடம் இருக்கக்கூடிய அத்தனை அமைப்புகளையும் தகர்த்தெறிகின்ற வகையில் ஒவ்வொரு ஊடகங்களும் தத்தம் போக்கில் செயற்படுமாக இருந்தால் எம் இனத்தின் எதிர்காலம் எப்படியாகும் என்பது பற்றியும் சிந்திப்பது நன்மையளிக்கும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இந்த நாட்டின் ஏனைய இனங்களின் உள்ளார்ந்தமான திட்டமிடல்கள், செயற்பாடுகளின் பின்னணியில் அவர்கள் சார்ந்த ஊடகங்கள் எந்தளவுக்கு ஒற்றுமைப்பட்டு நிற்கின்றனவோ அதற்கு ஈடாக தமிழ் ஊடகத் தரப்பிலும் பல மான ஒற்றுமை இருப்பது அவசியமானதாகும்.

# இலங்கையின் கலாசாரத்தை சீரழிப்பதற்கு முயற்சி

## கலகொட ஞானேஸ்வர தேரர் குற்றச்சாட்டு

நாட்டின் சரித்திரத்தையும் கலாசாரத்தையும் சீரழிப்பதை இலக்காகக் கொண்டு அரச சார்பற்ற நிறுவனங்களூடாக பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஹுனுப்பிட்டிய கங்காராமய விகாராதிபதி கலகொட ஞானேஸ்வர தேரர் குற்றம் சாட்டியுள்ளார்.

சர்வதேச அழுத்தத்தினால் எமது நாட்டின் கௌரவத்தை இல்லாது செய்கின்றனர். மேலும் அவ்வாறான நாடுகளில் நடைமுறையில் இருக்கும் அநாகரிக செயற்பாடுகளையும் இங்கு பரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கின்றனர். எனினும் எமது நாட்டின் கலாசாரத்தையும் சரித்திரத்தையும் நாம் ஒருபோதும் மறந்து விடமுடியாது.

எனவே அவ்வாறான தீய சக்திகளின் கெடுபிடிகளிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஹுனுபிட்டி கங்காராமய விகாரையின் வருடாந்த நவம் பெரகராவின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன் தினம் இரவு நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (ம)

## 36 மணித்தியால நேரத்தில் மூன்று குற்றச் சம்பவங்களில் 16 சந்தேகநபர்கள் கைது

(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் கடந்த 36 மணி நேரத்தில் மூன்று வெவ்வேறு குற்றச் சம்பவங்களின் போது தடயப் பொருட்களுடன் 16 சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஆர். விமலகுணரட்ண தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் வியாழக்கிழமை நள்ளிரவு 11 மணியில் இருந்து நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணி வரையான காலப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் விசேட ஊர்சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் தருமபுரம் நெத்தலியாற்றுப் பகுதியில் வீதிப் பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததை கண்டு விட்டு சட்ட விரோதமான முறையில் வெட்டப்பட்ட சுமார் 08 இலட்சம் ரூபாய் பெறுமதியான 15 முதிரை மரக் குற்றிகளை ஏற்றிப் பயணித்த மகேந்திர பிக்கப் வாகனத்தை வீதியில் கைவிட்டு விட்டு சந்தேக நபர்கள் தப்பிச் சென்ற நிலையில் தடயப் பொருட்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்நிலையில், தருமபுரம் முசலம்பிட்டிக் கிராமத்தில் உள்ள குடும்பம் ஒன்று தமது வாழ்வாதாரத்திற்காக வளர்த்து வந்த கோழிகளில் பத்தைத் திருடி அதனை இறைச்சியாக்கி கறிசமைத்து மது விருந்து நடத்திய சந்தேக நபர்கள் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நெத்தலியாற்றுப் பகுதி மற்றும் தருமபுரம் நாச்சிக்குடா, தருமபுரம் உழவனூர் ஆகிய இடங்களில் அனுமதிப்பத்திரத்திற்கு முரணானவகையில் ஆற்று மணலை ஏற்றி பயணித்த 4 உழவு இயந்திரங்களைக் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதிகள் நான்கு பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று முடிந்த நிலையில் அவர்களை தடயப் பொருட்களுடன் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (2-15)

## சைவ சமய தீட்சை நிகழ்வு பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் இன்று நடைபெறவிருந்த சமய தீட்சையானது பிறிதொரு திகதியில் இடம்பெறும் என உலக சைவத் திருச்சபையின் யாழ்ப்பாணத்துக்கான தலைவர் அறிவித்துள்ளார். (ம)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**தலைவாசல் வைக்கும் திசைகள் எவை?**

மாதம்- திசை
வைகாசி- வடக்கு
ஆடி- தெற்கு
ஆவணி- தெற்கு
ஐப்பசி- கிழக்கு
கார்த்திகை- கிழக்கு
தை-மேற்கு
மாசி- மேற்கு

இம்மாதங்களுக்குரிய திசைகளில் தலைவாசல் வைக்கலாம். (தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை யாழ்.பிரதேசத்தில் அரசர் கேணி, கச்சாய் வெளி, தர்மகேணி, முகமாலை, இத்தாவில், எழுதுமட்டுவாழ், உசன், விடத்தற்பளை, கெற்பலி, மிருசுவில் தெற்கு, தவசிக்குளம், நாவலடி, நாகர்கோவில், குடாரப்பு, மாமுனை, செம்பியன் பற்று, நெல்லியான் இராணுவ முகாம், மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, கொடுக்குழாய், ஆழியவழை, வெற்றிலைக் கேணி, கட்டைக்காடு, கேவில், தலங்காவில், திருநெல்வேலி, பரமேஸ்வரச் சந்தி, சிவன் அம்மன் வீதி, கந்தர்மடம், அன்ன சத்திரச்சந்தி, இலுப்பையடி சந்தி, பருத்தித்துறை வீதியில நாக விகாரையில் இருந்து பாரதியார் சிலை வரை, விக்ரோறியார் வீதி, மின்சார நிலைய வீதி யில் ஒரு பகுதி, புகையிரத நிலையப் பிரதேசம், மார் டின் வீதி, யாழ் 2ம் 3ம் 4ம் குறுக்கு தெருக்கள், ஸ்ரான்லி வீதியில் புகையிரதக் கடவையிலிருந்து இராசாவின் தோட்ட வீதி வரை, அம்பல வாணர் வீதி, அன்னசத்திர வீதி, ஆஸ்பத்திரி வீதி வேம்படி சந்தியிலிருந்து மார்டின் வீதி வரை, ஸ்ரான்லி வீதியில் ஆரியகுளத்திலிருந்து முட்டாசுக்கடை சந்தி வரை, கஸ்தூரியார் வீதியில் ஒரு பகுதி, மணிக் கூட்டு வீதியில் ஒரு பகுதி, நொதேர்ண் சென்றல் கொஸ் பிற்றல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆண்கள் விடுதி, டமறோ பலாலிவீதி, ஹற்றன நஷனல் வங்கியின் பிராந்திய அலுவலகம், பீப்பிள் லீசிங் அன் பினான்ஸ் கம்பனி ஸ்ரான்லி வீதி, AVNOR பிறைவேற் லிமிற்றெட், மக்கள வங்கி ஸ்ரான்லி வீதி, யாழ். புகையிரத நிலையம், Green Grass விடுதி, சிறிநதியா நகைமாளிகை, Raja Tal kies, LOLC, ஞானம்ஸ் விடுதி றெப்பாஸ் வெற்றிலைக்கேணி இராணுவமுகாம், கட்டைக்காடு இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும். (இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- வாழ்க்கையில் எப்போதும் தூய்மை உடையவன் கடவுளுக்கு மிக நெருங்கியவனாகிறான்.
- ஏமாற்றுவதால் எதையும் செய்து விட முடியாது. அன்பாலும், ஆர்வத்தாலும், ஆன்மிக சக்தியாலுமே பெரிய செயல்களை நிறைவேற்ற முடியும்.
- பிறருக்காக செய்யும் சிறிய முயற்சி உள்ளிருக்கும் சக்தியை எழுப்புகிறது. பிறருக்காக நன்மையை எண்ணுவதால் சிங்கத்தின் பலம் இதயத்திற்கு கிடைக்கிறது.
- தன்னை அடக்கப் பழகிக் கொண்டவன் வேறு எதற்கும் வசப்படமாட்டான். அத்தகையவனே உலகில் வாழத் தகுதியுள்ளவன்.
- உங்களை ஓர் ஏழை என்று எப்போதும் நினைக்காதீர்கள். பணம் சக்தியல்ல. நன்மையும் தெய்வ பக்தியுமே சக்தி.
- தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளும் சக்தியை உண்டு பண்ணுவதே உண்மைக் கல்வி.
- அனைத்தையும் செவிசாய்த்துக் கேளுங்கள். உங்களுக்கு எது நல்லதென்று படுகிறதோ, அதை உறுதியாய்ப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்.
- உயிரும், மனமும் இணைந்து செயற்பட்டால், எந்தச் செயலையும் செய்து வெற்றி பெறலாம்.

# நெய்மருக்கு சத்திர சிகிச்சை போட்டியிலிருந்து விலகினார்



பிரேசில் கால்பந்து அணியின் நட்சத்திர வீரர் 26 வயதான நெய்மர், பிரான்ஸை சேர்ந்த பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் கிளப் அணிக்காக விளையாடி வருகிறார். சில தினங்களுக்கு முன்பு, லிக்யூ தொடரில் மார்செலி கிளப்புக்கு எதிரான ஆட்டத்தில் களம் கண்ட நெய்மர் காலில் காயம் அடைந்தார். வலி தாங்க முடியாமல் கதறிய அவர் 'ஸ்டிரச்சர்' உதவியுடன் வெளியேறினார். பரிசோதனையில், கால்பாதத்தின் மேல்பகுதியில் எலும்பு முறிவு ஏற்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

இதையடுத்து சத்திர சிகிச்சை செய்வதற்காக அவர் தாயகம் திரும்பினார். சத்திரசிகிச்சைக்கு பிறகு 3 மாதங்கள் வரை அவரால் விளையாட முடியாது.

சம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டியின் முக்கியமான ஆட்டத்தில் பாரீஸ் செயின்ட் ஜெர்மைன் - ரியல் மாட் அணிகள் எதிர்வரும் 6ஆம் திகதி மோதுகின்றன. இந்த ஆட்டத்தில் நெய்மர் ஆட முடியாத நிலை ஏற்பட்டிருப்பதால், அது பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணிக்கு பெரும் பின்னடைவாக அமையும்.

பிரேசில் அணியின் டாக்டர் ரோட்ரிகோ லாஸ்மர் கூறுகையில், 'நெய்மர் மிகுந்த வேதனையில் இருக்கிறார். ஆனால் சத்திரசிகிச்சை தவிர வேறு வழியில்லை என்பதை புரிந்து கொண்டுள்ளார்.

கால் காயத்துக்கு நாளை சத்திரசிகிச்சை செய்யப்படுகிறது. காயம் குணமடைய இரண்டரை மாதத்தில் இருந்து 3 மாதங்கள் வரை ஆகும். ஆனால் உலகக் கோப்பை கால்பந்து போட்டிக்கு போதிய கால அவகாசம் இருப்பதால் அதற்குள் அவர் உடல்தகுதியை எட்டி விடுவார் என்றார். (க)

# தென்னாபிரிக்க மண்ணில் புதிய சாதனை படைத்த வோர்னர்



அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர் டேவிட் வோர்னர், தென்னாபிரிக்க மண்ணில் தொடர்ச்சியாக 6 அரை சதங்கள் அடித்து சாதனை படைத்துள்ளார்.

தென்னாபிரிக்காவின் டர்பன் நகரில், தென்னாபிரிக்கா - அவுஸ்திரேலியா அணிகள் மோதும் டெஸ்ட் போட்டியிலேயே வோர்னர் இச்சாதனையைப் படைத்துள்ளார்.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா, முதலில் துடுப்பாட்டத்தை தொடங்கியது.

அதனைத் தொடர்ந்து, அவுஸ்திரேலியாவின் தொடக்க வீரர் டேவிட் வோர்னர், சிறப்பாக ஆட்டத்தை தொடங்கினார்.

அவர், 79 பந்துகளில் 51 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இதன் மூலம், தென்னாபிரிக்க மண்ணில் தொடர்ச்சியாக 6 முறை 50 ஓட்டங்களுக்கு மேல் எடுத்த முதல் வீரர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

இதற்கு முன்பு, தென்னாபிரிக்க முன்னாள் வீரர் கல்லீஸ், கடந்த 2002ஆம் ஆண்டு தொடர்ச்சியாக 5 முறை 50 ஓட்டங்களுக்கு மேல் எடுத்துள்ளார். (க)

# இளம் வயதில் அணித்தலைவர் சாதனை படைத்த ஆப்கான் வீரர்

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவர் அஸ்ஹர் ஸ்டானிக்ஸ்சாய் சிம்பாவேயில் ஆரம்பிக்கவுள்ள உலகக்கிண்ண தகுதிச் சுற்று போட்டிகளில் பங்கேற்க முடியாத நிலையில் அந்த அணிக்கு புதிய தலைவர் நியமிக்கப்படவுள்ளார்.

ஆப்கானிஸ்தான் அணியின் தலைவரான அஸ்ஹர் ஸ்டானிக்ஸ்சாய் வயிற்று உபாதை காரணமாக பாதிக்கப்பட்டு அணியிலிருந்து விலகியுள்ளார்.


இதன் காரணத்தால் அந்த அணிக்கு புதிய தலைவராக 19 வயதான இளம் சுழல் பந்து வீச்சாளர் ரஷீத் கான் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒருநாள் மற்றும் இருபதுக்கு இருபது போட்டிகளின் பந்துவீச்சு தரநிலையில் முதலிடத்தில் காணப்படும் ரஷீத்கான், 37 ஒருநாள் போட்டிகளில் 86 விக்கெட்களையும், 29 இருபதுக்கு இருபது போட்டிகளில் 47 விக்கெட்களையும் கைப்பற்றியுள்ளார்.

19 வயதில் ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டிகளில் நம்பர் 1 பந்துவீச்சாளர் என்ற பெருமை பெற்றுள்ளார்.

இளம் வயதில் பந்துவீச்சாளர் நம்பர் 1 என்ற பெருமை பெற்ற நிலையில், அவரின் திறமையால் அவருக்கு அணியின் தலைவர் பதவி தேடி வந்துள்ளது.

இதன்மூலமாக இளவயதில் அணியின் தலைமைத்துவத்துக்கு நியமிக்கப்பட்டவர் எனும் பெருமையும் ரஷீத் கான் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)



# பாகிஸ்தான் சுப்பர் லீக்கில் கலக்கப் போகிறார் சங்கா



பாகிஸ்தான் சுப்பர் லீக் கிரிக்கெட் தொடரில் பங்கேற்க இலங்கை ஜாம்பவான் குமார் சங்கக்கார பாகிஸ்தானுக்கு செல்லவுள்ளார்.


பாகிஸ்தான் சுப்பர் லீக் போட்டிகள் டுபாய் மற்றும் சார்ஜாவில் நடைபெற்று வருகிறது. தொடரின் இறுதி போட்டி உட்பட கடைசி மூன்று போட்டிகள் பாகிஸ்தானின் லாகூர் மற்றும் கராச்சியில் நடைபெறவுள்ளது.

இந்த தொடரில் முல்தான் சுல்தான்ஸ் அணிக்காக விளையாடி வரும் சங்கக்கார குறித்த போட்டிகளில் விளையாட பாகிஸ்தானுக்கு செல்லவுள்ளார்.

இது குறித்து முல்தான் சுல்தான்ஸ் அணி நிர்வாக தலைவர் ஆசர் சச்சோன் கூறுகையில், சங்கக்கார மற்றும் இதர வெளிநாட்டு வீரர்கள் பாகிஸ்தானுக்கு பயணிக்க தயாராக உள்ளார்கள்.

இது குறித்து சங்கக்கார உற்சாகமாக உள்ளார் என கூறியுள்ளார். (க)

# ஹெட்ரிக் மற்றும் நூறு கோல் சாதனை படைத்த வீரர்




அட்லெடிகோ மாட்ரிட் கால்பந்து அணி வீரர் ஆண்டோனி கிரிஜ்மான், அந்த அணிக்காக 100 கோல்கள் அடித்துள்ளார்.

ஸ்பெயினில் நடைபெற்று வரும் லா லிகா கால்பந்து லீக் தொடரில், அட்லெடிகோ மாட்ரிட் மற்றும் லெகன்ஸ் அணிகள் மோதின.

போட்டியின் 26வது நிமிடத்தில், அட்லெடிகோ அணியின் கிரிஜ்மான் முதல் கோல் அடித்தார்.

அதனைத் தொடர்ந்து, 35வது நிமிடத்தில் இரண்டாவது கோலையும் இவரே அடித்தார்.

கிரிஜ்மானின் சிறப்பான ஆட்டத்தினால், அட்லெடிகோ அணி முதல் பாதியில் 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

அதன் பின்னர், இரண்டாவது பாதியிலும் கிரிஜ்மானின் ஆதிக்கமே தொடர, 56வது மற்றும் 67வது நிமிடங்களிலும் அடுத்தடுத்து இரண்டு கோல்களை அடித்து அசத்தினார்.

ஆட்டநேர முடிவில், அட்லெடிகோ மாட்ரிட் 4-0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது.

இந்த போட்டியில் 4 கோல்கள் அடித்ததன் மூலம் கிரிஜ்மான், அட்லெடிகோ மாட்ரிட் அணிக்காக 100 அடித்து சாதனை படைத்துள்ளார்.

இவர் இதுவரை 101 கோல்கள் அடித்துள்ளார்.

மேலும், இந்தப் போட்டியில் ஹாட்ரிக் கோல் அடித்ததன் மூலம், லா லிகா தொடரில் தொடர்ந்து 2வது முறையாக 'ஹாட்ரிக்' சாதனை நிகழ்த்தியுள்ளார்.

அத்துடன், அட்லெடிகோ அணிக்காக 100 கோல்கள் அடித்த 3வது வீரர் என்ற பெருமையையும் கிரிஜ்மானே பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# டோனியின் அனுபவம் வேண்டும் இங்கிலாந்து வீரர் புகழாரம்






மேட்ச்வின்னராக ஜொலிக்க, மகேந்திர சிங் டோனியின் அனுபவ அறிவு தனக்கு வேண்டும் என இங்கிலாந்து வீரர் மார்க் உட் கூறியுள்ளார்.

இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் மார்க் உட் 2018ம் ஆண்டு ஐபிஎல் போட்டிக்கு சென்னை சுப்பர் கிங்க்ஸ் அணிக்காக விளையாட உள்ளார்.

அவர் அளித்துள்ள பேட்டியில், சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக என்னைத் தெரிவு செய்து இருப்பது பெருமையாக இருக்கிறது.

அதிலும் எங்கள் அணியின் தலைவர் டோனியுடனும், மேற்கிந்தியத்தீவுகள் ஆல்ரவுண்டர் டுவைன் பிராவோவுடனும் இணைந்து விளையாடுவது எனக்குகிடைத்த மிகச்சிறந்த வாய்ப்பாகும்.

ஒரு மேட்ச் வின்னராக ஜொலிக்க இருவரின் மூளையின் உதவியும் எனக்கு வேண்டும்.

அனுபவ வீரர்களுடன் விளையாடும் போது, நெருக்கடியான நேரத்தில் அவர்கள் எப்படி செயல்படுகிறார்கள் என்பதை நாம் கற்க முடியும் என கூறியுள்ளார். (க)

## ஐ.நா சபையின்...

மையப்படுத்தி இராணுவத்துக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு சர்வதேசம் தயாராவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தமது அரசியல் இருப்பினை தக்கவைத்துக் கொள்வதற்கு நல்லாட்சி அரசாங்கம் நாட்டுக்காக போராடி உயிர்த்தியாகம் செய்த இராணுவத்தினரை காட்டிக்கொடுக்கத்துணிந்ததை நாட்டு மக்கள் நன்கு உணர்ந்து, அதற்கெதிராக தமது எதிர்ப்பினையும் கடந்த உள்ளூராட்சிமன்ற தேர்தலில் வெளிப்படுத்தினர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் தேசிய அரசாங்கம் உண்மையினை கண்டிறிந்து. கடந்த கால அரசாங்கத்திற்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் பொய்யானது என்று நிரூபிப்பதுடன், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் உறவுகள் எதிர்பார்த்திருக்கும் நோக்கங்களும் நிறைவேற வேண்டும் என தெரிவித்தார்.

காணாமல் போனோர் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளும் காரியாலயத்திற்கு ஆணையாளர்கள் நியமித்துள்ளமை தொடர்பில் கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம)

## விடுதலைப் புலிகளின்...

யில் பேருந்து ஒன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்ட இராணுவ வீரர் பொலிஸாருக்கு வாக்கு மூலம் வழங்கிய போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

தனக்கு கிடைத்த கைக்குண்டினை 2017 ஆம் ஆண்டு மாத்தளையில் உள்ள தனது வீட்டில் கொண்டு சென்று மறைத்துவைத்ததாகவும், அதன்பின்னர் அதனை அண்மையில் கஹகொல்ல இராணுவ முகாமிற்கு கொண்டு சென்று, பேருந்தில் இருந்து இறங்கும் தருணத்தில் வெடிக்கவைக்க திட்டமிட்டிருந்ததாகவும் குறித்த இராணுவ வீரர் தெரிவித்துள்ளார்.

எனினும் எதிர்பாராத விதமாக பேருந்தில் வைத்து அந்த கைக்குண்டு வெடித்து விட்டதாகவும், கடன் தொல்லைக் காரணமாக தற்கொலை செய்து கொள்ளும் நோக்கிலேயே கைக்குண்டை கொண்டு வந்ததாகவும் குறித்த இராணுவ வீரர் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். (ம)

## காணாமல் ஆக்கப்பட்...

சென்றுள்ளார்.

கனேடிய வெளியுறவு அமைச்சர் கிறிஸ்ரியா ஃபி றி லண்டின், கடந்த செவ்வாய்க்கிழமை ஜெனிவா மனித உரிமைச் சபையில் உரையாற்றியதை சுட்டிக்காட்டிய ஹரி ஆனந்த சங்கரி, பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

கடந்த ஜனவரி மாதம் இலங்கைக்குப் பயணம் செய்தபோது, தமிழ்த் தாய்மார் பலரைச் சந்தித்து உரையாடியதாக கூறிய அவர், அந்த தாய்மாரின் பிள்ளைகள், போரின் இறுதி வாரங்களில் இலங்கைப் படையினரிடம் சரணடைந்த நிலையில் காணாமல் போயுள்ளதாகவும் கூறினார்.

சரணடைந்த தமது பிள்ளைகள் குறித்து அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். இந்த தாய்மாரும், ஏனைய குடும்ப உறுப்பினர்களும் தங்களது கேள்விகளுக்கான பதில்களையும், நடந்த உண்மைகளையும் அறிவதற்குமான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் ஹரி ஆனந்த சங்கரி சுட்டிக்காட்டினார்.

வடக்கிலும் கிழக்கிலும் பிரதான வீதியோரங்களில் தற்காலிக கொட்டில்களை அமைத்துக் கடந்த ஒரு வருட காலத்திற்கும் அதிகமாக கடும் வெயில் மற்றும் புழுதி என்பவற்றின் மத்தியில் அவர்கள் போராடுகிறார்கள்.

காணாமல்ஆக்கப்பட்டவர்களின்பெயர்களை வெளியிடுமாறு இந்தத் தாய்மார் முன்வைத்த கோரிக்கை போன்ற மிகச் சிறிய கோரிக்கைகளுக்குக் கூட, இலங்கை அரசாங்கம் இதுவரை செவிசாய்க்கவில்லை என்றும் அவர் கவலை வெளியிட்டார்.

உண்மையையும், நீதியையும் வேண்டி நிற்கும் இந்த மக்களின் கோரிக்கைகளை கனேடியர்களான நாம் புரிந்து கொள்கிறோம். இலங்கையில் நீதியையும் பொறுப்புக் கூறலையும் வேண்டி நிற்போருக்கும், எமக்கு உந்துசக்தியாக விளங்கி, உத்வேகம் அளிக்கும் வீரமிக்க தாய்மாருக்கும் நாம் ஆதரவாக இருப்போம் என்றும் ஹரி ஆனந்த சங்கரி எடுத்துக் கூறினார். (ம)

## ஜெனிவா பிரேரணையில்...

அவர் மேலும் கூறுகையில், ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் பரிந்துரைகள் இலங்கையில் நடைமுறைப்படுத்துவதில் உள்ள பிரச்சினையினை ஆராய்ந்து வருகின்றோம்.

இலங்கையில் அபிவிருத்தி தொடர்பாக நிதி தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருகின்றது.

நிலைமாறு நிதி வழங்கல் பொறிமுறை குறித்து இலங்கை அரசாங்கத்துடன் ஆலோசிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (ம)

## ஐ.நாவின் சிறப்புத்...

ஞாயிற்றுக்கிழமை கொழும்புக்கு வருகை தரும் அவர் 7ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருப்பார். எதிர்வரும் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் இடம்பெறும் முகமாலைக்கும் செல்லவுள்ளார்.

ஐ.நாவின் சிறப்புத் தூதுவரான இளவரசர் மிரெட் ராட் செயிட் அல் ஹுசேன் இந்தப் பயணத்தின் போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரையும், பாதுகாப்பு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சுக்களின் செயலர்கள், இராணுவத் தளபதி மற்றும் கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்குப் பொறுப்பான அதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்துவார். (ம)

## சுகாதார பரிசோதகர்...

னைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது. இதில் காலாவதியான உணவுப்பொருட்கள், பிழையான சுட்டுத்துண்டிடப்பட்ட உணவுப் பொருட்கள், சுகாதாரத்துக்கு ஒவ்வாதநிலையிலுள்ள உணவுகையாளும் நிறுவனங்களுக்கெதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நடமாடும் வெதுப்பக உற்பத்திப்பொருட்கள் விற்பனை செய்யும் வாகனத்தில் சுகாதாரமற்றநிலையில் உணவுப்பொருட்கள் விற்பனையில் ஈடுபட்டமை,வாகனம் சுகாதார நிலையில்பேணப்படாமை போன்றவற்றிற்காக தாக்கல்செய்த வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டம் விதிக்கப்பட்டது. தொடர்ந்து குறித்த வெதுப்பகத்துக்கெதிராக பருத்தித்துறை நகரசபை பொ.சு.பரிசோதகரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் காணப்பட்ட குறைபாடுகளுக்காக தண்டம் விதிக்கப்பட்டதோடு குறைபாடுகளை நிவர்த்திசெய்யும் வரை வெதுப்பகத்தை சீல் செய்யுமாறு நீதிமன்றால் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.மேற்படி நீதிமன்ற கட்டளைக்கமைவாக பொதுச்சுகாதார பரிசோதகர்களால் வெதுப்பகம் சீல் செய்யப்பட்டது. (ம-60)

## உகந்த தீர்மானத்தை...

மாடிக் கட்டிடத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று பிற்பகல் கலந்துகொண்ட போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவ்வாறு தெரிவித்தார்.

எழுச்சிபெறும் பொலநறுவை மாவட்ட அபிவிருத்தி செயற்திட்டத்தின் பிரிவெனா அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இந்த இரண்டு மாடிக்கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளுக்காக மதிப்பிடப்பட்ட செலவு 120 இலட்சம் ரூபாயாக காணப்பட்டபோதிலும் இலங்கை இராணுவத்தினரின் பங்களிப்பினால் மேற்கொள்ளப்பட்ட இந்த கட்டிட நிர்மாணத்திற்கு 69 இலட்சம் ரூபாய் மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது.

நேற்று பிற்பகல் விகாரைக்குச் சென்ற ஜனாதிபதி முதலில் சமய அனுஷ்டானங்களில் ஈடுபட்டு ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்டார்.

அதன்பின்னர் இடம்பெற்ற வைபவத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, சிறந்த ஒரு சமூகத்தையும் கல்விகற்ற புத்திசாதுரியமான எதிர்கால சந்ததியினரை உருவாக்குவதற்கான பொறுப்பினை நிறைவேற்றுவதற்கு சகலரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

சிறந்த ஒரு சமூகத்தை கட்டியெழுப்புவதில் மிக முக்கிய காரணமான சமயக் கல்வியை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் விசேட செயற்திட்டங்களை முன்னெடுத்துள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, நாடு பூராகவும் பல்வேறு சமய கல்விக்கூடங்களில் காணப்படும் பல குறைபாடுகளை நிவர்த்தி செய்து அவற்றிற்கு தேவையான வளங்களை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பொலநறுவை மாவட்ட அபிவிருத்தி தொடர்பாக இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, இவ்வருட இறுதிக்குள் பொலநறுவை மாவட்ட பாடசாலைகள், மருத்துவமனை கள் மற்றும் பிரிவெனாக்கள் என்பவற்றில் எந்தவித குறைபாடுகளுமின்றி அவை நிவர்த்திக்கப்படும் என தெரிவித்தார். (ம)

## இந்தியா கைவிட்டதால்...

ப்பதற்கு சீனாவை நாட வேண்டியேற்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியாவிற்கான விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பும் வழியில் பெங்களூருவில் வைத்தே ஊடகவியலாளர்களிடம் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கையில் துறைமுகம் மற்றும் நெடுஞ்சாலைகளை அமைக்கும் வேலைத் திட்டத்தை முன்னெடுக்குமாறு இந்தியாவிடம் வேண்டிக்கொண்டோம். எனினும் இந்திய அரசாங்கம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. எவ்வாறிருந்தபோதும் அம்பாந்தோட்டையில் துறைமுகம் அமைக்க வேண்டும் என்ற நோக்கில் இந்தியா இருந்தது.

எனினும் நாம் குறித்த வேண்டுகோளை யுத்த காலத்திலேயே முன்வைத்திருந்தோம். அதனால் இந்திய அரசாங்கம் அதனை நிராகரித்திருக்கலாம் என நினைக்கிறேன். ஆகவே குறித்த செயற்றிட்டத்தை நாம் சீனாவிடம் முன்வைத்தோம். அந்த யோசனை தொடர்பில் சீனா உடனடி நடவடிக்கைக்குத் தயாரானது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் முக்கியத்துவம் பற்றி எமக்கு நன்கு தெரியும். அதனாலேயே அத்துறைமுகப் பணிகளை முன்னெடுப்பதற்குத் தயாரானோம். நாட்டை பிரதானமாகக் கொண்டு நடவடிக்கை எடுப்பதே சிறந்த தலைவரின் தலையாய கடமையாகும்.

எனினும் இலங்கையின் தற்போதைய அரசாங்கம் தேசிய சொத்துக்களை விற்பனை செய்கிறது. தனியார் மயமாக்கலுக்கு எதிரானதாகவே எமது கொள்கை இருந்தது. தனியார் மயமாக்கல் மூலம் நாட்டை கட்டியெழுப்ப முடியும் என நாம் எதிர்பார்க்கவில்லை.

இலங்கை, இந்தியாவுடன் சிறந்த உறவைப் பேணி வந்தது. எனினும் கடந்த காலங்களில் எமக்கும் இந்தியாவிற்கு மிடையில் தவறான புரிதல்கள் ஏற்பட்டிருந்தன.

மேலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாம் பெருவெற்றி பெற்றுள்ளோம். அதன் மூலம் மக்கள் எமக்கு ஆணை வழங்கியுள்ளனர். அத்துடன் குறித்த தேர்தலை நாம் உள்ளூர் அதிகார சபைகளின் ஆட்சியைத் தீர்மானிக்கும் தேர்தலாகக் கருதவில்லை. தேசிய அரசாங்கத்திற்கு எதிரான ஆணையாகவே கருதுகிறோம். நல்லாட்சி அரசாங்கத்தின் கடந்த மூன்றாண்டு கால வேலைத்திட்டங்களுக்கு மக்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலூடாக எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

## நிர்வாக பி.க பணிப்பாளராக மாணிக்கராஜா நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி வலயத்தில் கல்வி அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளராக இருந்த சி.மாணிக்கராஜா கல்வி நிர்வாகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான இந் நியமனத்தை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் வழங்கியுள்ளார்.

இப்பதவிக்கான கடமையை நேற்றைய தினம் அவர் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.(ம)

## இந்து சமுத்திரத்தின்...

பேறானதும், ஆக்கபூர்வமுமான பொருளாதாரத்தின் ஊடாக இலங்கையில் வியாபாரத்திற்கான கவர்ச்சி மிக்க கேந்திர நிலையமாக மாற்றியமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதன் நன்மைகளை பெற்றுக் கொள்ள சர்வதேச முதலீட்டாளர்களுக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. பிராந்தியத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை இலங்கை அடைந்து வருவதாக பிரதமர் கூறினார். (ம)

## நீதிமன்ற அறிவிப்பு...

சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு கோட்டை நீதவான் லங்கா ஜயரத்தன முன்னிலையில் நேற்று இடம்பெற்ற வழக்கு விசாரணையின் போது, பிரதி மன்றாடியார் நாயகம், அரிப்பிரிய ஜயசுந்தர இதனை மன்றில் அறிவித்துள்ளார்.

அர்ஜுன் மகேந்திரனுக்கு பிறப்பிக்கப்பட்ட அறிவித்தல், சர்வதேச பொதி சேவை மற்றும் விரைவு அஞ்சல் ஊடாக அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பிரதி மன்றாடியார் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், அர்ஜுன் மகேந்திரன் சிங்கப்பூரில் வசிக்கும் முகவரியுள்ள இல்லம் தற்போது மூடப்பட்டுள்ளதாக சர்வதேச பொதிச் சேவை தெரிவித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், குறித்த அறிவித்தல் தொடர்பில் அர்ஜுன் மகேந்திரனின் தனிப்பட்ட கைத்தொலைபேசி மற்றும் மின் அஞ்சலுக்கும் குற்றபுலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளரினால் தகவல் அனுப்பப்பட்டதாகவும் பிரதி மன்றாடியார் நாயகம் கூறியுள்ளார்.

இதேவேளை, அர்ஜுன் மகேந்திரனின் புதல்வி கடந்த 20ஆம் திகதி சிங்கப்பூருக்கு பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில், குற்றப்புலனாய்வுத் திணைக்களம் அர்ஜுன் மகேந்திரனின் புதல்வியிடம் வாக்கு மூலம் ஒன்றை பதிவு செய்துள்ளது.

அந்த வாக்கு மூலத்தை மேற்கோள் காட்டி தகவல் வெளியிட்டுள்ள பிரதி மன்றாடியார் நாயகம், இல்லம் மூடப்பட்டிருந்ததன் காரணமாக தமது தந்தையையும் தாயையும் சந்திக்க தனக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என அவர் கூறியதாக தெரிவித்தார்.

இதேவேளை, அர்ஜுன் அலோஷியசிற்கு சொந்தமான கணக்குகளை தடைசெய்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவு கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் நீடிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றில் தகவல் வெளிப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தமது தரப்பினர் சிறுநீர் மற்றும் தோல் நோயினால் பாதிக்கப்படுவதால் அவரை சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக்குமாறு அர்ஜுன் அலோசியஸ் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி நீதவானிடம் கோரியுள்ளார்.

இது தொடர்பில் சிறைச்சாலை அதிகாரியால் நடவடிக்கை எடுக்க முடியும் என நீதவான் இதன் போது கூறியுள்ளார்.

இதேவேளை, அர்ஜுன் அலோஷியஸ் மற்றும் கசும் பலிசேன ஆகியோருடன் குற்றப்புலனாய்வு திணைக்களம் வாக்கு மூலங்களை பதிவு செய்ய வேண்டும் என பிரதி மனறாடியார் நாயகம் நீதவானின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

இந்த நிலையில், நாளை முதல் எதிர்வரும் 15ஆம் திகதி வரை அதற்கான காலத்தை வழங்குமாறு நீதவான் லங்கா ஜயரட்ன சிறைச்சாலை அதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார்.(ம)

**Win Repair**

சகல விதமான குளிர்சாதனப் பெட்டிகளும், A/Cகளும் உங்கள் வீடுகளுக்கு வந்து சிறந்த முறையில் திருத்திக்கொடுக்கப்படும். தொடர்பு:
(3091) 077 964 8942

அறிமுகம் - Rs. 250/=
**சிக்கன் பிரியாணி**
ப்றைட் சிக்கன் -றைஸ் & பைட்ஸ்
**Fried Chicken - Rice & Bites**
யாழ் பாடியில்
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 077 736 0353, 075 987 5800

## ஆறு பிள்ளைகளி...

லினுள் இருந்த பாம்பு இவருடைய கையின் மேல் ஏறிய போது இவர் கையை உதறியுள்ளார். அந்தவேளை பாம்பு இவரை தீண்டியுள்ளது.

அங்கிருந்தவர்களின் உதவியுடன் உடனடியாக சங்கானை மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டதுடன் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இருப்பினும் குறித்த நபர் சிகிச்சை பயனின்றி நேற்று அதிகாலை யாழ் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

இந்த மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

**வீடு வாடகைக்கு**

பலாலி வீதி (ஒஸ்காலேன் அருகில்) உரும்பிராயில் உள்ள புதியவீடு வாடகைக்கு உண்டு. (நிறுவனங்கள் விரும்பத்தக்கது)
தொடர்புகளுக்கு :
(2563) 077 069 0275

**உங்கள் வீட்டு பொருட்கள்**

காஸ் குக்கர், ஐயன், ஓவன், கிரைண்டர், 6 மாத உத்திரவாதத்துடன் குறைந்த கட்டணத்துடன் திருத்தி Service செய்து உடனுக்கு உடன் கொடுக்கும் யாழ் நகரத்தில் ஒரே ஸ்தாபனம். IZZY- 179, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(ஜனசக்திக்கும் வைத்தீஸ்வர சந்திக்கும் இடையில்) தொ.பே இல.: 0784945757 (C-1763)

**சாரதிகள் தேவை**

யாழ்ப்பாணத்தில் வாகனங்கள் ஓடுவதற்கு சாரதிகள் தேவை.
தொடர்பு : சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ்
இல.55,57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C-1761)

**SB Travels and Tours Pvt Ltd**

Air Ticketing இல் அனுபவமுள்ள வேலை ஆட்கள் தேவை.
இல.212, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு : 021 222 9555
Email: sbtravelsjaffna@gmail.com (C-1764)

**Personal, Group Classes**

இரசாயனவியல் (A/L) 2018, 2019, 2020, Repeat Batch
38 வருட Past Papers கற்பிக்கப்படும்.
சி.அங்கதன் (B.Sc [chem.spl])
(3077) தொடர்பு: 0779208945

**BSc. [Hons]** Network Technology &
**Cyber Security**
Top-Up Degree Lincoln University-Malaysia.




Enrollment Starts from Today
TVEC REGISTERED INSTITUTE TVEC No. P01/0727
UGC RECOGNIZED UNIVERSITY AWARDED DEGREE
CALL US FOR MORE DETAILS HOT LINE - 077 441 9901

Internet of Things IOT
Certificate in IOT
Arduino
Raspberry Pi

**IDM NATIONS CAMPUS**
IDM Nations Campus Since 1981
#216, Navalar Road, Jaffna.
Tel: 021 222 9901
www.idmedu.lk www.facebook.com/idmnc
(சி-1765)

**SB Travels and Tours Pvt Ltd**

01. Chennai - 19,800/= (SL airlines)
02. Chennai - 18,400/= (onwards)
03. Bangalore - 23,500/= (SL airlines)
04. Kochi - 36,500/=
05. Trichi - 34,800/=
06. Mumbai - 36,600/=
07. Delhi - 46,800/=
08. Doha - 34,000/= (o/w)
09. London - 107,000/=
10. Malaysia - 31,800/=
11. Singapore - 31,800/=
12. Bangkok - 41,000/=
13. Toronto - 154,000/=
14. Narita - 83,000/=
15. Paris - 98,800/=
16. China - 75,000/=
17. Melbourn - 109,000/=
18. Auckland - 164,000/=

Visa / Master / American Express Card accepted
*Condition Apply

**Our Services**
- India & Bangkok Visa arrangement
- Travel Insurance
- Hotel Reservation

**Hotline**
Jaffna - Kasthuriyar Road. 0212229555,8555
Jaffna - Nallur - 0212227666
Colombo 15 - 0112540280 / 0112540111
Colombo 13 - 0112333322 / 0112334470
Colombo 6 - 0112058625 / 0112361711
Email: sbtravelsjaffna@gmail.com (C-1764)

## ஐ.தே.கட்சி...

இதன்போது பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை குறித்தும் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை குறித்தும் ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு குழுவின் அறிக்கையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடுதிரும்பியவுடன் இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டாரவையும் சந்தித்து பேசவுள்ளார். (ம)

**வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை**
EXPRESS Courier Services
அண்ணா பொதிகள் சேவை
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | வேலணை | சாவகச்சேரி | மிசாலை
முல்லைத்தீவு | கிளிநொச்சி | வவுனியா | திருகோணமலை
(C-1751)

**விரைவு பொதிகள் சேவை**
விசேட விலை குறைப்பு
UK - 550*/=Kg
கனடா - 1050*/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS
தொடர்புகளுக்கு: 0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS

**உடனடி வேலைவாய்ப்பு**

யாழ் போதனா வைத்தியசாலைக்கு எதிரில் SINGER காட்சியறைக்கு மிக அருகில் உள்ள ஆரோக்கியமான இரசாயன கலப்பற்ற பழங்கள், உடனடி பழ இரசங்கள். காலை, மதியம், மாலை சிற்றுண்டிகள் விற்பனை செய்யும் தரமான விற்பனை நிலையத்துக்கு திறமையான, ஆர்வமுள்ள, சுகாதாரத்தில் அக்கறையுள்ள பணியாளர்கள் தேவை. முன்னனுபவம் அவசியம் இல்லை. (ஆண், பெண் இருபாலாரும்)
தொடர்பு: 0770780240
நேர்முகத் தேர்வு: 03.04- பங்குனி 2018
572, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (3049)

**விற்பனைக்கு**

பாவித்த மோட்டார் சைக்கிள்கள் (Bajaj - Discover 125, Bajaj- CT 100), தளபாடங்கள் விற்பனைக்குண்டு.
18/10, வைமன் வீதி, நல்லூர்.
077 224 23 94 (3087)

**SOALA** ®
SUPER MARKET RACKS
தும்பிக்கையான் Thumpikkaiyan
ஏகவிநியோகஸ்தர்கள் : யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு.

புதிய தொழில்நுட்பத்துடன் வாடிக்கையாளர்களின் கவனத்தைத் திசை திருப்பும் (சோலா) சுப்பர் மார்க்கற் றக்ஸ், குளிரூட்டிகள், மற்றும் பல சுப்பர் மார்க்கற் உபகரணங்கள் அனைத்தும் 24 மணித்தியாலத்தில் பொருத்தித் தரப்படும்.



க்ளொக் லேன், மானிப்பாய்.
தொலைபேசி இல : 077 789 7002
(சி-1762)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.